
கோகுலம்

GOKULAM

டிசம்பர் 84 ரூ2





ரமண மகரிஷி

தோற்றம் 30.12.1879. மறைவு 14-4-1950



புலிக்கும் அஞ்சாப் பிரதமர் காந்தியைப்
பிரிந்தோம்; அந்தோ! கயவர்கள் செயலால்!
உலகில் இவர்போல் ஒரு பெரும் தலைவியை
உருவாக் கிடவே எவரால் இயலும்?

இந்த இதழ் எழுத்தாளர்கள்


இரா. பவானந்தன்


துரை சீனிவாசன்


கி. ஆர். நாகராஜன்


பிருந்தாவனக் கதாசிரியர்கள்


மீனு இராமச்சந்திரன்


டி. ரமேஷ் பாபு



அ. பி. குமார் ராஜசேக

பிருந்தாவனக் கவிஞர்கள்



எஸ். அருண்


என். எஸ். சியாமளா


ஏ. ஆர். ஆனந்த்


ஆர். கி. ராஜு

அட்டை வண்ணப்படம்:
ஓம் சுப்பிரமணியம்



கோகுலம்

மலர்—2 இதழ்—11

1984 டிசம்பர் மாத இதழ்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-



அருமைச் சிறுவர் சிறுமியரே,


ஜவஹர்லால் நேருவைப் போலவே, அவருடைய அருமை மகள் இந்திரா காந்தியும் குழந்தைகளிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அவருக்கு எத்தனையோ வேலைகள்; எத்தனையோ பொறுப்புக்கள்! அப்படியிருந்தும், குழந்தைகள் எழுதும் கடிதங்களுக்கு, அவர் அன்போடு பதில் எழுதி அவர்களுக்கு மகிழ்ச்சியும், ஊக்கமும் அளித்து வந்தார். அப்படி அவருக்குக் கடிதம் எழுதிப் பதில் பெற்றவர்களும், அவரை நேரிலே பார்த்துப் பேசி மகிழ்ந்தவர்களும் பலர். அவர்களில் மூவர் இந்த இதழில் தங்கள் அனுபவங்களை எழுதியிருக்கிறார்கள்.

இந்த இதழில் டாக்டர் பூவண்ணன் எழுதும் புதிய தொடர்கதை ஆரம்பமாகிறது. படித்து மகிழுங்கள்.

'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதிக்கு ஏராளமான கடிதங்கள் வந்து குவிகின்றன. பள்ளிப் பாடப் புத்தகங்களில் காணப்படும் 'பயிற்சி'யில் உள்ள வினாக்களையே சிலர் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவற்றிற்குத்தான் பாடப் புத்தகத்திலேயே பதில்கள் இருக்கின்றனவே! அப்புறம், கேள்வி எதற்கு? இந்த இதழில் வெளிவந்துள்ள கேள்விகளைப் பாருங்கள். இவற்றைவிடச் சிறந்த, பயனுள்ள கேள்விகளாகக் கேளுங்கள்; பதில் சொல்லுகிறோம்.

டிசம்பர் மாத இறுதியிலே வழக்கம்போல் கிறிஸ்துமஸ் பண்டிகை வருகிறது. அப்போது உங்களுக்கு விடுமுறையாகவும் இருக்கும். விடுமுறையில், ஏசுநாதரின் வாழ்க்கையைப் பற்றியும், அவருடைய போதனைகளைப் பற்றியும் நீங்கள் முடிந்தவரை தெரிந்து கொள்வது நல்லது.

-அழ. வள்ளியப்பா.





டாக்டர் ராஜேந்திர பிரசாத்



ரமண மகரிஷி

''ராஜன் பாபு ஈடு இணையற்ற மக்கள் தொண்டர். எங்கெங்கே சமூகத் தொண்டு நடக்கிறதோ, எங்கெங்கே மக்கள் துன்பத்தால் துடிக்கிறார்களோ அங்கெல்லாம் அவரைக் காணலாம்'' என்று மகாத்மா காந்தி ராஜேந்திர பிரசாத்தைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்டவர் நம் பாரத நாட்டின் முதல் குடியரசுத் தலைவராகப் பன்னிரண்டு ஆண்டுகள் இருந்து பல வகையிலும் நாடு சிறப்படையச் செய்தார்.

பள்ளியில் படிக்கும் போதே எல்லா வகுப்புக்களிலும் முதல் இடம் பெற்றார். கல்லூரியில் பயிலும் போதும், மாநிலத்திலேயே முதன்மையாகத் தேர்வு பெற்றார். ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், பாரசீகம் ஆகிய மொழிகளை அறிந்த இவர், வழக்கறிஞராகத் தொழில் நடத்தினார். அதில் அவருக்கு நல்ல வருமானமும், புகழும் கிடைத்தன. ஆனாலும், அவர் அந்தத் தொழிலை விட்டுவிட்டுத் தேசத் தொண்டிலே இறங்கிவிட்டார். மகாத்மாவின் ஆணையை நிறைவேற்றுவதையே தமது கடமையாகக் கொண்டார். இவரைப் போல் மகாத்மாவின் மிக நெருங்கிய தொண்டராக விளங்கியவர் வேறு எவருமே இல்லை என்று கூறலாம்.

பீகாரில் வெள்ளத்தாலும், பூகம்பத்தாலும் மக்கள் பெரும் துயரம் அடைந்தார்கள். அவர்கள் துயரைப் போக்க அல்லும் பகலும் அரும்பாடு பட்டார்.

உப்பு சத்தியாக்கிரகத்தின் போது முதல் முதலாகக் கைது செய்யப்பட்டார். அதன் பிறகு இருமுறை சிறைக்குச் சென்றிருக்கிறார்.

இவருக்கு இவருடைய பெற்றோர் வைத்த பெயர் வேங்கடராமன். எப்போதும் திருவண்ணாமலையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால், பள்ளிப் படிப்பில் இவரது கவனம் செல்லவில்லை. ஒன்பதாவது வகுப்பு வரைதான் படிக்க முடிந்தது. ஆனாலும், இவர் படித்த பெரிய புராணம் இவர் உள்ளத்தில் பக்தியை ஊட்டி வளர்த்துவந்தது.

மதுரை சுந்தரேஸ்வரர் கோயிலுக்கு இவர் அடிக்கடி வந்து ஓரிடத்தில் உட்காருவார். கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்து விடுவார்.

பதினேழாவது வயதிலே இவர் துறவு பூண்டு, திருவண்ணாமலையை அடைந்தார். அங்குள்ள ஆயிரக்கால் மண்டபம், பாதாள லிங்கக் குகை ஆகிய இடங்களில் அமர்ந்து, தியானம் செய்வார்.

மகனைப் பிரிந்த இவருடைய தாயாரும் துறவு பூண்டு திருவண்ணாமலைக்கு வந்துவிட்டார். தாயார் காலமானதும், அவருக்கு ஒரு சமாதி அமைத்து, அதன் அருகிலேயே இவர் வாழ்ந்து வந்தார். அந்தச் சமாதியே இப்போது பெரிய ஆசிரமமாகத் திகழ்கிறது.

இவருடைய உபதேசங்களைக் கேட்க இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து மட்டுமல்ல; பிற நாடுகளிலிருந்தும் பலர் வந்து போய்க் கொண்டிருந்தனர்.

''உயிர்கள் துன்பமின்றி எப்போதும் சுகமாக இருக்க, தன்னைத் தானே அறிதல் வேண்டும்'', என்று இவர், 'நான் யார்?' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தை எழுதும்போது இவருக்கு வயது 21.

இவர் நாற்பதுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

இந்திரா அம்மையார் எங்களுடன் பேசினார்!



என் தந்தையார் அப்போது தில்லியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். நான் அப்போது மூன்று வயதுச் சிறுமி. எனக்கோ தில்லி சென்ற நாள் முதல் அன்னை இந்திராவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்!

ஒருநாள் எனது தந்தை வழக்கம் போல் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தார். வந்ததும், ''நான் இன்று பிரதமர் இந்திரா அம்மையாரைப் பார்த்தேன்'' என்றவுடன் எனக்கு வந்ததே கோபம்!

''என்னை விட்டுவிட்டு நீங்கள் மட்டும் எப்படி அவரைப் பார்க்கலாம்?'' என்று கேட்டு என் அப்பாவுடன் பேசவேயில்லை!

அடுத்த இரு தினங்களில். என் தந்தையார் கூறிய செய்தி — 'இந்திரா அம்மையாரை நாம் காண ஏற்பாடு செய்திருக்கிறேன்' என்றபோது, எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

டஜன் ஆப்பிள் பழங்களுடன் அவரைச் சந்திக்கக் கிளம்பியபோது, இடி போன்ற செய்தி ஒன்று வந்தது. மோஹன் குமாரமங்கலத்தையும் அவருடன் சில பெரிய மனிதர்களையும் ஏந்தி வந்த விமானம் விபத்துக்கு ஆளானது! இந்திரா அம்மையார் அந்த இடத்திற்கு விரைந்தார்!

இவ்வேளையில் அவரை எப்படிப் போய்ப் பார்ப்பது?

ஆனால், அன்று மதியமே அன்னையின் பி. ஏ. யிடமிருந்து என் அப்பாவிற்கு போன் வந்தது. ''ஏன் வரவில்லை?'' என்று கேட்ட அவர், காரணம் அறிந்தவுடன் கூறினார்: ''துக்கமான செய்திதான். ஆனாலும் அம்மையார் தம்மைக் காண வருவோரை ஒருநாளும் சந்திக்காமல் இருக்க மாட்டார். காரணம், அவரைக் காண வெளிநாட்டு மக்களும் வருவதுண்டு. வரும் அனைவருக்கும் பல வேலைகள் இருக்கும். தன்னைப் பார்க்காததால் அவை பாதிக்கக் கூடாதல்லவா?''

இதை இன்று நினைத்தாலும், அவரது கடமை உணர்வு என்னை வியக்க வைக்கிறது!

அதனால் மறுநாள் அவரது பி. ஏ. குறிப்பிட்டது போல், அவரைக் காணச் சென்றோம். என் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா?


அன்றும் மாம்பழங்கள் வாங்கிச் சென்றோம். ஆனால், பாதுகாப்பு அதிகாரிகள் அவற்றை உள்ளே எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை. நாங்கள் அன்பின் அடையாளமாகக் கொடுக்க விரும்புகின்றோம் எனக் கூறியபின், இரண்டு மாம்பழங்களை நன்கு பரிசோதித்த பின் கொடுத்தார்கள் எங்களிடம்.

அன்னையின் தோட்டத்தில் சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது. நாங்கள் உள்ளே தோட்டத்தில் அமர்ந்திருந்தோம். நொடிகள் விரைந்து கொண்டிருந்தன.



பாடினேன், ஆடினேன்; பாராட்டி வாழ்த்தினார்.

இராஜ சியாமளா (2348) தஞ்சாவூர்



எங்கள் விழிகள் வாசலையே நோக்கிக் கொண்டிருந்தன.

அதோ! அதோ! அன்னையார் வருகிறார்!

ஆட்கள் புடைசூழ, ஒருவர் குடை பிடிக்க, போட்டோகிராபர் உடன்வர அந்த அன்னையின் வேக நடை! அப்பப்பா! அந்தச் சுறுசுறுப்பு!

நேரு மாமாவைப் போலவே, குழந்தைகளிடம் அன்பு நிறைந்த அவர், நேராக நாங்கள் அமர்ந்திருந்த இடம் நோக்கி வந்து, என் முன்னால் நின்றவுடன் என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. என்னிடம்தான் பேச ஆரம்பித்தார். என் பெயர், வகுப்பு, பள்ளி ஆகிய விவரங்களைக் கேட்டவர், 'ஆடத் தெரியுமா?' எனக் கேட்டவுடன், இந்திப் பாடல் ஒன்றினை ஆடிக் காட்டினேன். அப்பாடல் பின்வருமாறு:—

நன்னே, நன்னே நன்னே பச்சே,
ந: ஹமாரா ஹிந்துஸ்தானி!'
பந்துக லேகர் சல்தே ஹம்
பஹாட் ரோம்பர் சல்தே ஹம்
ஜண்டா கி ஊஞ்சா சல்தே ஹம்
ஜேஹிந்த் ஜேஹிந்த்!

வெள்ளைமன (ஒன்றுமறியா) குழந்தைகளே! இது நமது ஹிந்துஸ்தானம்! நாம் துப்பாக்கி ஏந்தி, மலை மேல்செல்கிறோம், கொடிகளை உயர்த்திப் பிடித்தபடி! ஜெய்ஹிந்த் ஜெய்ஹிந்த்!'' என்பது அதன் பொருள். என்னைத் தட்டிக் கொடுத்தார்.

நான் அந்த இரண்டு மாம்பழங்களைக் கொடுத்தவுடன், ''ஒன் ஃபார் யூ, ஒன் ஃபார் மீ'' எனக் கூறினார். (ஒன்று உனக்கு, ஒன்று எனக்கு.) ''உங்கள் கையெழுத்திட்டபுகைப்படம் எனக்கு வேண்டும் எனக் கேட்டதுதான் தாமதம், என்னை அப்படியே அள்ளிக் கொண்டு நின்று கொண்டிருந்தோரைச் சுற்றி அவர்களுக்குப் பின்னால் கொண்டு நிறுத்தினார், அதற்குள் மற்றவர்களை, அதாவது என் பெற்றோர், பாட்டியை போட்டோகிராஃபர் அமரச் சொல்ல, ஆசாமைச் சேர்ந்த ஒரு குடும்பம், எங்களுடன் சேர்ந்து கொள்ள, கண்ணிமைக்கும் நேரத்தில் போட்டோ பளிச்சென்று எங்களைப் பிடித்துவிட்டது.

என் மனத்திலும் சந்தோஷ மின்னல் பளிச்சிட்டது! இதற்கு முன்பே—அதாவது என் இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடும் வேளையில் என் அப்பா இந்திரா காந்தியவர்களுக்கு, அவரின் ஆசி கோரி ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதற்குப்பிரதமரிடமிருந்து உடனே ஒரு பதில் கடிதம் வந்தது.

''என் பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். ஒரு வீட்டில் குழந்தை இருந்தால், எவ்வளவு சந்தோஷமானது என்பதை நான் அறிவேன். தங்கள் செல்வி தங்களுக்குப் பெரும் புகழும் வாங்கிக் கொடுக்கட்டும்'' என்று அந்தக் கடிதத்தில் எழுதிக் கையெழுத்திட்டிருந்தார். அந்தக் கடிதத்தையும் அவரைக் காணச் சென்ற

போது எடுத்துச் சென்றிருந்தோம். அதையும் பார்வையிட்டுப் புன்முறுவல் பூத்தார்.

மாலையில் என் தந்தை போட்டோவை வாங்கி வரச் சென்றிருந்த போது, ''நீங்கள்தானே இராஜ சியாமளாவின் தந்தை?'' எனக் கேட்டு அன்னையாரின் கையெழுத்திட்ட புகைப்படம் ஒன்றைக் கொடுத்தார் அங்கிருந்த ஒருவர்!

ஒரு சிறு குழந்தையின் ஆசையை ஒரு பிரதமர் நிறைவேற்றுவதென்றால்? அது மட்டுமா? நாலைந்து வருடங்கள் கழிந்து விட்டன. சென்னைக்கு மாற்றலாகி வந்துவிட்டோம். பிரதமர் இராஜ்பவன் வந்திருந்தார். டில்லியில் எடுத்த புகைப் படத்துடன் அவரைக் காணக் காத்திருந்தோம். முக்கிய பிரமுகர்களைப் பார்த்து அனுப்பிவிட்டுப் பிரதமர் நிமிர்ந்தார். சிறிது தொலைவில் நின்றிருந்த என்னைப் பார்த்துவிட்டார்.

குனிந்து கைகளால் அழைத்தார். அருகே நாங்கள் (நான், என் பெற்றோர்) சென்றவுடன், ''நீ இங்கிருக்கிறாயா? எப்போது டில்லியிலிருந்து வந்தாய்?'' எனக்கேட்ட அவரின் நினைவாற்றல்! எழுத்தாளர் என்ற முறையில் எனது தாயாரை, விசாரித்த அழகு! அப்பப்பா! நான் வைத்திருந்த போட்டோவை (பிரேம் போடப்பட்டது) பார்த்து, ''இது என்னிடம் இல்லையே!'' எனக் கூறினார். அவரை வைத்துக் கொள்ளச் சொன்னவுடன், அவர் சிந்தினாரே ஒரு குழந்தைச் சிரிப்பு! அதை என்னால் மறக்கவே முடியாது!

''நான் எங்கே வந்தாலும் அங்கு நீ இந்தப் போட்டோவையும் கடிதத்தையும் (அவரின் வாழ்த்துக் கடிதம்) காட்டு. நீ என்னைக் காணலாம்'' என எனக்குச் சலுகை வழங்கினார்.

ஆனால், அதற்குப் பிறகு அவரை ஒரு முறைகூடப் பார்த்துப் பேச முடியாமல் போனதை நினைத்து, காலனே தயவனாய் மாறியதை நினைத்து நினைத்து மிகவும் வருந்துகிறேன். ஆனாலும், அவரின் கொள்கைப்படி சோகத்திற்கு இடம் கொடுக்காமல், நாட்டிற்கு என்னால் முடிந்த அளவு அவரின் ஆசியோடு தொண்டு செய்ய வேண்டும் என நினைக்கிறேன்!

பேசிச் சொல்லிப் பிரதமர் கேட்டார்!

என். ரஜிகா, மயிலாப்பூர்.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இதே மாதிரி ஒரு நவம்பர் மாதம். தேசிய ஒருமைப்பாடு முகாம் (National Integration Camp) டில்லியில் நடந்தது. அதற்கு நான் சென்றிருந்தேன்.

பிரதமரைப் பார்க்க ஒரே ஆவல். ஆனால், அப்பொழுது ரஷ்ய அதிபரின் திடீர் மறைவினால் தம் பிரதமர் ரஷ்யா போயிருந்தார். 'சரி, இந்தத் தடவை அவரைப் பார்க்க முடியாது' என்று நினைத்து வருந்தினேன். 14ஆம் தேதி முகாமில் இருந்த குழந்தைகளை ஓர் இடத்திற்கு அழைத்துப் போவதாகச் சொன்னார்கள். போனால் அப்புறம்தான் தெரிந்தது. அது நேரு மாமா வாழ்ந்த தீன் மூர்த்தி பவன் என்று. அப்பொழுது எதிர்பாராத விதமாக தம் பிரதமர் காரிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்ததும், எங்களுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி. இரைந்து கத்தக்கூட ஆரம்பித்தோம். பிரதமர் ஒவ்வொரு குழந்தையிடமும் வந்து தட்டிக் கொடுத்தார். என்னிடம் வந்தபோது '''இந்த 'காம்ப்' உனக்குப் பயன் தருகிறதா?'' என்று கேட்டார்.

நான் ''ஆமாம், நிச்சயமாக'' என்று பதிலளித்தேன்.

''வருங்காலத்தில் நீ என்னவாக விரும்புகிறாய்?'' என்று அவர் கேட்ட போது, நான் தயங்காமல் 'விஞ்ஞானியாக' என்று கூறினேன். அன்று பிரதமரைப் பார்த்த பின் எனக்கு

இன்னும் அவரைப் பார்க்க வேண்டும்; அவரோடு பேசவேண்டும் என்று ஆசையாக இருந்தது. ஆனால், பிரதமரைப் பார்க்க இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்குமா என்று யோசித்தேன்.

குழந்தைகள் தினத்தன்று நேருஜியைப் பற்றிப் பேசி முதல் பரிசு வாங்கினேன். நம் பிரதமர் இந்த வருடம் மார்ச் மாதம் சென்னை வந்திருந்த போது, அவரிடம் இதைப் பேசிக் காட்ட என்னை அழைத்துச் சென்றிருந்தார்கள். நான் அவர் அறையில் நுழைந்ததும், புன்சிரிப்புடன் ''நீதான் நேருவைப் பற்றிப் பேச வந்திருக்கும் சிறுமியா?'' (you are the child who has come to speak on Nehru?) என்று கேட்டார். நான் ''yes Madam'' என்றதும், பிரதமர்என்னிடம்''நீ எப்படிப் பேச விரும்புகிறாய்—உட்கார்ந்தா அல்லது நின்றா?'' (would you like to sit or stand and talk?) என்று அன்போடு கேட்டார். நான் நின்று பேசுவதாகக் கூறி நேருஜியைப் பற்றிப் பேசினேன். பிரதமருக்கு நாம் என்ன புதிதாகச் சொல்லிவிடப் போகிறோம் என்று நான் நினைத்த போது, அவர் மிகவும் கூர்ந்து கவனித்து, என் ஒவ்வொரு வார்த்தையையும் உன்னிப்பாகக் கேட்டு மகிழ்ந்தார்.



சமீபத்தில் அணு ஆயுதக் குவிப்பைக் கண்டித்து. நம் பிரதமரும் இன்னும் ஐந்து உலகத் தலைவர்களும் விட்டிருந்த அறிக்கை என்னைக் கவர்ந்தது. குறிப்பாக நம் பிரதமர், ''அதிக மாணவர்கள், அதிலும் குறிப்பாக இளம் வயதினர் சேர்ந்தால் அது மிகப் பெரிய வெற்றியைத் தரும்'' என்று கூறியது என்னை ஈர்த்தது. 'Nuclear hazards on younger generation' (இளம் தலைமுறைக்கு அணு ஆயுத அபாயம்) என்பது பற்றி உடனே ஐ. நா. தலைமைச் செயலருக்கு ஒரு கடிதம் எழுதி அதை நம் பிரதமர் மூலம் அனுப்பினேன். அதில் ''வல்லரசுகளின் இந்தப் பலப்பரீட்சை நன்மைக்குஅல்ல. இந்தத் தலைமுறையின் தவற்றின் விளைவுகள் இளம் தலைமுறையைத் தான் அதிகம் பாதிக்கும்'' என்று குறிப்பிட்டிருந்தேன். மேலும், ''இன்றைய சிறுவர், சிறுமியர் நாளைய பிரஜைகள். அவர்கள் வாழ்க்கையை அமைதியான சூழ்நிலையில் அமைத்துக் கொடுப்பதே பெரியவர்கள் எங்களுக்குச் செய்யக்கூடிய அரும் பணியாகும்'' என்றும் எழுதினேன். என்ன ஆச்சரியம்! ஒரே வாரத்தில் என் ஈடுபாட்டை ஊக்குவித்துப் பிரதமரிடமிருந்து அவர் கையெழுத்திட்டுப் பதில் வந்தது.

இந்த நவம்பர் பதினான்காம் தேதி! ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் சிறுவர்கள் கலாசாரப் பிரதிநிதிகளாகப் பிரதமரைப் பார்க்க ஏற்பாடு ஆகியிருந்தது. தமிழ்நாட்டின் சார்பில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தேன்.. ஆனால்...? அக்டோபர் 31ஆம் தேதி நான் பள்ளியில் இருந்தபோது, பிரதமர் சுடப்பட்டார் என்று கேள்விப்பட்டதும், அதை என்னால் நம்பவே முடியவில்லை. அழுகையை அடக்க முடியாமல் வீட்டிற்குச் சென்றேன். எப்பொழுதும் நான் அழுதால் எனக்கு ஆறுதல் சொல்லும் என் அம்மாவும் அப்போது அழுதார்கள்.

எனக்குப் பிரதமர் நினைவு வரும் போதெல்லாம் அவர் எனக்கு எழுதிய கடிதத்தையும், நான் அவரைச் சந்தித்ததையும் நினைத்து... இப்பவும் அந்த மறக்க முடியாத காட்சி என் நினைவுக்கு வருகிறது!

பிறந்த நாள் வாழ்த்துக்குப் பிரதமர் வாழ்த்து!



கே. பத்மப்ரியா (1213), சென்னை-40.

நம் இனிய பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திரா காந்தியின் மறைவுச் செய்தி அப்படியே என்னை உலுக்கி விட்டது. நம்பவே முடியவில்லை: அவரை நான் பத்திரிகை, டி. வி., டாகுமெண்டரி மூலம்தான் பார்த்திருக்கிறேன். அவருடைய உரைகளைக் கேட்டிருக்கிறேன். அவர் எனக்கு மிகமிக நெருங்கியவராகத் தோன்றினார். அவருடைய சிரித்த முகமும், உற்சாகமும், கம்பீரமான தோற்றமும், அயராத உழைப்பும் என்னை மிகவும் கவர்ந்தன.

பிரதம மந்திரி தம் காலைப் பொழுதை எப்படிக் கழிக்கிறார் என்று ஒரு படம் பார்த்தேன். எவ்வளவு சுறுசுறுப்பு! அதிகாலையில் கன்றுக் குட்டியை அன்போடு தடவிக் கொடுக்கிறார். மீன்களுக்கு ஆகாரம் போடுகிறார். பூச்செடிகளை ரசிக்கிறார். தம் பேரக் குழந்தைகளுடன் ஆசையோடு விளையாடுகிறார். இல்லத்தில் தம்மைக் காண வந்துள்ள குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் பேட்டி அளிக்கிறார், அவர்களுடைய குறைகளைக் கேட்டு நிவாரணம் அளிக்கிறார் — அப்பப்பா! ஒரு பம்பரம் போலச் சுற்றுகிறார்! காரில் ஏறிப் பயணம் செய்யும் போதுகூடக் கோப்புகளைப் படித்துக்கொண்டே போகிறார். ஒரு காலைவேளையில் இத்தனை வேலைகளைச் செய்ய முடியுமா என்று அதிசயப்பட்டேன். அதைப் பார்த்த பிறகு நானும் காலை வேளைகளைப் பயனுள்ளதாகக் கழிக்கவும், சுறுசுறுப்பாக இருக்கவும் தீர்மானித்தேன்.

ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு நவம்பர் பத்தொன்பதாம் தேதி பிறந்தநாள். எனக்கு நவம்பர் பதின்மூன்றாம் தேதி பிறந்தநாள். சில வருஷங்களுக்கு முன்னால் நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். ''டில்லிக் குழந்தைகளைப் போல நான் அவ்வளவு அதிர்ஷ்டசாலி இல்லை. உங்களுடைய பிறந்த நாளில் நேரில் வந்து வாழ்த்த முடியவில்லை. நான் சென்னையில் இருப்பதால் தபால் மூலம் வாழ்த்துக்களை அனுப்புகிறேன்'' என்று சொல்லி எழுதினேன். என்னுடைய பிறந்த நாளும் அதே மாதத்தில் வருவதையும் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தக் கடிதத்தைத் தபால் பெட்டியில் சேர்த்ததுமே அதை மறந்துவிட்டேன். பதிலை எதிர்பார்க்கவில்லை. சில நாட்களில் என்ன ஆச்சரியம்! பிரதம மந்திரி பவனில் இருந்து என் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் என் கடிதத்திற்கு நன்றி தெரிவித்ததோடு, என் பிறந்த நாளுக்கும் வாழ்த்துக்கள் அனுப்பியிருந்தார்! மேலும், ''டில்லிக்கு வரும்போது நிச்சயமாக என்னைப் பார்க்கலாம்'' என்றும் அன்புடன் எழுதி, — 'இந்திரா காந்தி' என்று கையொப்பமிட்டிருந்தார்.

சென்ற ஆண்டு நாங்கள் பத்ரிநாத் செல்லும் வழியில், டில்லியில் தங்கினோம். ஆனால் ·எங்களுக்குப் போதிய அவகாசம் இல்லாததால், அருமை இந்திராவைப் பார்க்க முடியவில்லை. அடுத்த முறை டில்லி போகும்போது பார்க்கலாம் என்று அப்பா சொன்னார். ஆகவே, அடுத்த டில்லிப் பயணத்தை நான் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தேன். பிரதமரைப் பார்த்து என்னென்ன பேச வேண்டும் என்றெல்லாம் கற்பனைகள் செய்து கொண்டிருந்தேன்.

அந்தோ! இந்திராகாந்தியை இனி நான் பார்க்க முடியாது. என்னைப் போலவே இந்த நாட்டிலுள்ள பல கோடிக்கணக்கான குழந்தைகளும் இனி அவரைப் பார்க்க முடியாது. அவர் அனுப்பிய இனிய கடிதத்தைப் பத்திரமாகப் போற்றிப் பாதுகாக்கிறேன். அவரைப் பற்றிய இனிய நினைவுகளைப் பத்திரமாகப் போற்றிப் பாதுகாக்கிறேன். அவரைப் போலவே, சுறுசுறுப்பாகவும் பயனோடும் வாழ முயலுகிறேன்.

இந்தச் சமயத்தில் இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். எங்கள் பள்ளிக் கூடத்தில் ஒரு கண்

காட்சி நடந்தது. ஒவ்வொரு சிறுமியும் ஏதாவது ஒரு படம் வரைந்து காட்சியில் வைக்க வேண்டும். அப்போது 'பவன்ஸ் ஜர்னல்' என்ற ஆங்கில இதழில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது. அதில் திருமதி இந்திராகாந்தி தனக்குப் பிடித்த சில விஷயங்களைப் பற்றிக் குழந்தைகளிடம் பேசியிருந்தார். நான் அதைத் தமிழாக்கி வண்ண வண்ண எழுத்துக்களால் ஓர் அழகான சுவரொட்டி தயாரித்தேன். அதைப் பள்ளியில் கொடுத்தேன். அதைக் காட்சியில் முதல் இடத்தில் வைத்தார்கள். எனக்கு முதல் பரிசு கிடைத்தது. எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

கோகுலம் சிறுவர் சிறுமியர் படிப்பதற்காக அந்தச் செய்தியை மீண்டும் கீழே தருகிறேன்.

எனக்குப் பிடித்த சில விஷயங்கள்

-இந்திரா காந்தி

1. எனக்கு மழையைப் பிடிக்கும். மழையில் நனைந்து கொண்டே நடக்கப் பிடிக்கும்.
2. எனக்கு வண்ண வண்ண மலர்களைப் பிடிக்கும்.
3. எனக்கு வளைந்து, நெளிந்த அடிப் பாகத்தையும், பரந்த கிளைகளையும் உடைய மரங்களைப் பிடிக்கும்.
4. எனக்குப் பனி படர்ந்த மலைத்தொடர்களைப் பிடிக்கும்.
5. எனக்குக் கடினமான நீண்ட பயணமும், குதிரைச் சவாரியும், நீச்சலும் பிடிக்கும்.
6. எனக்கு மலைத் தடாகங்களும், பாய்ந்து செல்லும் ஆறுகளும், கடலின் கர்ஜனையும், எல்லையில்லாத சமுத்திரங்களும் பிடிக்கும்.
7. எனக்குப் புற்கள் மீது உட்காரப் பிடிக்கும்.
8. எனக்குத் தண்ணீரைச் சிதறடித்து மூழ்கியெழும் துடுப்பின் ஓசை பிடிக்கும்.
9. எனக்கு ரயில் வண்டிகளும், கப்பல்களும் போடும் 'கூ' என்ற சப்தம் பிடிக்கும்.
10. எனக்குப் பழைய கோட்டை கொத்தளங்களும், அவற்றின் கதைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வதும் பிடிக்கும்.

ஆதாரம்: **பவன்ஸ் ஜர்னல்.**





மின்மினிக் கதைகள்

சாட்டையின் சக்தியா?

மனிதனாக அவதரித்த கிருஷ்ண பகவானுக்கு அப்போது எண்பது வயது. அவர் கோலை ஊன்றிக் கொண்டு கடற்கரை வழியாகச் செல்லும்போது வழியில் ஒரு ஜட்கா வண்டியைக் கண்டார். குதிரை இடக்குச் செய்ததால், வண்டிக்காரன் குதிரையைச் சாட்டையால் அடித்து அடித்து ஓட்டிக் கொண்டிருந்தான்.

''அப்பனே, குதிரையை அடிக்காதே. கடிவாள வாரை அப்படி இழுக்காதே. லகுவாக விட்டுக் குதிரையைத் தட்டிக் கொடு'' என்றார்.

''கிழவா, நீ சும்மா ஓரமாக நடந்து போ. குதிரைசமாச்சாரம் உனக்கு என்ன தெரியும்?'' என்றான் வண்டிக்காரன். பிறகு, ''பார்த்தீர்களா இந்தக் கிழவனை. குதிரை ஓட்ட எனக்குக் கற்றுக் கொடுக்கிறான்'' என்றான்.

வண்டிக்குள் இருந்தவர்கள் சிரித்தார்கள்.

அப்போது, குதிரையின் கழுத்திலிருந்த ஈ பறந்து வந்து, வண்டிக்காரன் காதில் உட்கார்ந்து கொண்டு, ''வண்டிக்காரா, அவர் யார்? உனக்குத் தெரியவில்லையா! அவர்தான் 'அருச்சுனருக்குத் தேரோட்டியவர். அவருக்கா குதிரை விஷயம் தெரியாது?'' என்றது.

''இந்தக் கிழவன் அருச்சுனனின் குதிரையை ஓட்டியிருக்கலாம். ஆனால், இந்தக் குதிரை சமாச்சாரம் வேறு'' என்றான் வண்டிக்காரன்.

உடனே ஈ சிரித்தது. குதிரையும் சிரித்தது. குதிரைக்குத் தெரிந்து விட்டது, அந்தக் கிழவர் கிருஷ்ண பகவான்தான் என்பது. அந்த நிமிஷமே, அது தன் முரட்டுத்தனத்தை விட்டுவிட்டு ஒழுங்காக ஓட ஆரம்பித்தது.

''எப்படி என் சாட்டையின் சக்தி!'' என்று பெருமையாகக் கூறிக் கொண்டான் வண்டிக்காரன்.



நரியின் கேள்வி

''ஏ புலிகளே, சிறுத்தைகளே, நீங்கள் பசுக்களையும் மான்களையும் கொன்று தின்கிறீர்களே, இது மகாபாவம். இந்த வழக்கத்தை விட்டு விடுங்கள். என்னைப் போல் நீங்களும் வாழுங்கள்'' என்றார் சாமியார்.



''சாமியாரே, உங்களைப் போன்ற மனிதர்களும் ஆடு, கோழிகளைத் தின்கிறார்களே! அது பாவமில்லையா?'' என்று கேட்டது சிறுத்தை.

''அப்படிக் கேள்'' என்றது புலி.

''மனிதர்கள் ஆடுகளையும் கோழிகளையும் சமைத்தல்லவா சாப்பிடுகிறார்கள்! உங்களைப் போல் பச்சையாகவா சாப்பிடுகிறார்கள்? நீங்கள் செய்வது அநாகரிகம்'' என்றார் சாமியார்.

அப்போது அங்கிருந்த நரி, ''சாமியாரே, எல்லாம் படித்த நீங்கள் இப்படிப் பேசலாமா? பச்சையாக ஆடுமாடுகளைத் தின்று ஜீரணம் செய்யும் சக்தியை ஆண்டவன் புலிக்கும் சிறுத்தைக்கும் கொடுத்திருக்கிறான். மனிதனுக்கு அத்தகைய சக்தியைக் கொடுக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? இயற்கைக்கு விரோதமாக நெருப்பையும் தண்ணீரையும் உபயோகித்து மாமிசத்தை மிருதுவாக்கித் தின்பதுதான் பாவம். ஆண்டவன் உத்தரவுக்கு விரோதம்'' என்றது.

''செத்த மாமிசத்தைத் தின்னும் நரியே நீ சாமர்த்தியமாகப் பேசுகிறாய்.''

''செத்த பிறகு நான் தின்கிறேன். ஆனால், மனிதர்களோ உயிருடன் இருக்கும் ஆட்டை வெட்டித் தின்கிறார்களே, எது பாவம்?''

நரியின் கேள்வியைக் கேட்டதும், சாமியார் தலையைச் சொறிந்து கொண்டு யோசனை செய்தார்.

''சாமியாரே, போய் வருகிறீர்களா? இங்கே இன்னும் நீங்கள் தங்குவது அபாயம். இந்தச் சிறுத்தைக்குப் பசி வந்து விட்டது'' என்றது புலி.

சாமியார் வேகமாகவே போய் விட்டார்.

ஏழைகளுக்கு உதவி!

தாமரைப்புரத்துக் கல்லூரி மாணவர்கள், கணக்கு வாத்தியார் தலைமையில் 'ஸோஷல் சர்வீஸ்' செய்யப் புறப்பட்டார்கள். 'ஸோஷல் சர்வீஸ்' என்றால் ஏழைகளுக்கு உபகாரம் செய்வது.

பக்கத்திலுள்ள வேட்டுவன்பட்டிக்குச் சென்றார்கள். அங்கு மழை அதிகமாகப் பெய்து வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டிருந்தது.

அவர்களைக் கண்டதும், ''சுவாமி, வீடுகளெல்லாம் ஒழுகி ரொம்பக் கஷ்டப்படுகிறோம்'' என்றார்கள் அக்கிராமத்து மக்கள்.

''கவலைப்படாதீர்கள். எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுகிறோம்'' என்றார் கணக்கு வாத்தியார்.

கணக்கு வாத்தியாரும், மாணவர்களும் ஒரு குடியானவன் வீட்டின் மேலே ஏறினார்கள். ஓடுகளின் மேல் அவர்கள் ஏறி நிற்பதைப் பார்த்ததும் அந்த வீட்டுக்காரி, ''ஐயோ, ஈர ஓட்டின்மேல் இப்படி ஏறி நடந்தால் எல்லாம் உடைந்து போகுமே!'' என்று கதறினாள்.

அவ்வாறே நடந்தது. அவர்கள் நடந்த இடமெல்லாம் ஓடுகள் உடைந்தன.

''கீழே இறங்குங்கள், இறங்குங்கள்'' என்று அந்த வீட்டுக்கார ஏழை பலமாகக் கத்தினான்.

எல்லோரும் இறங்கினார்கள்.

''கவலைப்படாதீர்கள். புது ஓடுகள் வாங்கி வந்து சரிப்படுத்தி விடுகிறோம்'' என்றார் கணக்கு

வாத்தியார். எல்லோரும் தாமரைப்புரம் திரும்பினர்.

அன்று இரவு நல்ல மழை. அந்த ஏழை வீட்டில் குழந்தை குட்டிகள் மிகவும் அவதிப்பட்டார்கள்.

கணக்கு வாத்தியார் ஓடு வாங்குவதற்குப் பணம் கேட்டு, சர்க்காருக்கு எழுதிப் பார்த்தார். பணம் கிடைக்காததால், மாணவர்களும், வாத்தியார்களும் சேர்ந்து தங்களுக்குள்ளேயே பணம் வசூல் செய்து, ஏழையிடம் கொண்டுபோய்க் கொடுத்தார்கள்.

'இனிமேல் அவசரப்பட்டு நமக்குத் தெரியாத காரியங்களில் இறங்கக் கூடாது' என்று மாணவர்கள் தீர்மானித்தார்கள்.

செடியின் ஆசை

''அம்மா, நானும் உன்னைப் போல் கசப்பாகத்தான் வளருவேனு?'' என்று பக்கத்திலிருந்த வேப்ப மரத்தைப் பார்த்துக் கேட்டது, வேப்பஞ்செடி.

''வேறு எப்படி வளருவாய்! அப்படித்தான் வளருவாய்.''

''மருந்துக்கும் மந்திரத்துக்கும்தானே உன்னிடம் எல்லோரும் வருகிறார்கள், ருசிக்காக யாரும் வரவில்லையே?''

''மருந்தும் மந்திரமும்தானே துக்கத்தைத் தீர்க்கும்?''

''நான் வெறும் வேப்பஞ்செடியாக இருக்க விருப்பமில்லை. கறிவேப்பஞ்செடியாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.''

''குழந்தாய், வேண்டாம் அந்த ஆசை. என்னைப் போல் நீயும் நீண்ட நாள் வாழ்ந்து சுகமாக இருக்க வேண்டாமா?''

அம்மாவின் பேச்சைக் கேளாமல், வேப்பஞ்செடி கணேசரைத் துதி செய்து வரம் பெற்றுவிட்டது. வேப்பஞ்செடி கறிவேப்பஞ்செடியாக வளர்ந்தது.

மூன்று அடி வளருவதற்குள் பக்கத்து வீட்டில் உள்ளவர்களெல்லாம் செடியிலிருந்து சமையலுக்காகக் கறிவேப்பிலையைப் பறித்துக்கொண்டு சென்றுவிட்டனர். மிச்சம் மீதி இருந்த செடியையும் ஒருநாள் ஓர் ஆடு வந்து மேய்ந்துவிட்டது!

ஆயினும், மண்ணுக்குள் அதன் அடிவேர் இருந்தது. அது மெல்லிய குரலில், 'அம்மா, எனக்குப் புத்தி வந்துவிட்டது'' என்றது.

''குழந்தாய், நீ இன்னும் இருக்கிறாயா!'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டது தாய் மரம்.

''அம்மா, கசப்பு மரமாக இருப்பதே மேல் என்பதைத் தெரிந்து கொண்டேன். எனக்குப் பிழைக்கும் வழியைச் சொல்லித்தா அம்மா'' என்றது.

''கணேசரிடம் வேண்டிக் கொள்வோம்'' என்று அம்மா கூற, இரண்டும் கணேசரைத் துதி செய்தன.

வேர் துளிர்த்து வேப்பஞ்செடியாக நன்கு வளர்ந்தது.





தேகப்பயிற்சி வாத்தியார்

பாலசந்திரன் இனிப்புப் பண்டத்தை எங்கே கண்டாலும் விடமாட்டான். இனிப்பு அதிகமாகச் சாப்பிட்டதால், உடம்பு கெட்டு மிகவும் இளைத்துப் போனான்.

வைத்தியர்கள், ''இவன் சர்க்கரைப் பண்டங்களைத் தின்னவே கூடாது'' என்று கண்டிப்பாகக் கூறினார்கள்.

பாலசந்திரனால் ஆசையை அடக்க முடியவில்லை; எப்படியோ சர்க்கரைப் பண்டங்களைத் தேடிப் பிடித்துத் தின்றான். மேலும் உடம்பு கெட்டது.

மகன் பிழைப்பானா என்று தாயார் கவலைப்பட்டாள். தகப்பனார் புறப்பட்டுக் கும்பகோணம் சென்று சங்கராச்சாரியாரைக் கண்டார். விவரத்தைக் கூறினார்.

''பையனைக் கொண்டு போய் ஒரு மிட்டாய்க் கடையில் விட்டுவிடு. எவ்வளவு வேணுமோ அவ்வளவு சாப்பிடட்டும்''.

சங்கராச்சாரியார் சொன்னது தகப்பனாருக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனாலும், அவர் தம் நண்பரான ராம்லாலின் மிட்டாய்க் கடையில் வேலைக்குச் சேர்த்துவிட்டார். ''சம்பளம் கிடையாது. எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் சாப்பிடலாம்'' என்று கூறிவிட்டார் ராம்லால்.

பாலசந்திரனுக்கு ஒரே ஆனந்தம். நான்கு வேளையும் சர்க்கரைப் பண்டங்களாகத் தின்றான். வேலையில் சேர்ந்த - ஐந்தாவது நாள் அவனுக்குப் பேதி எடுத்தது. அன்ன ஆகாரம் வேண்டியிருக்கவில்லை. மிட்டாயை நினைத்தாலே அவனுக்கு வயிற்றைக் குமட்டியது. பிறகு ஏதேதோ மருந்துகள் சாப்பிட்டு நோய் ஒரு வழியாகத் தீர்ந்தது:

பிறகு, மிட்டாய்க் கடையிலிருந்து விலகி, கும்பகோணத்திற்குச் சென்று பெற்றோருடன் ஆசாரியார் முன் விழுந்து வணங்கி ஆசி பெற்றான்.

இப்போது பாலசந்திரன் மதுரைக் கல்லூரியில் தேகப்பயிற்சி வாத்தியார்! கொட்டாப்புளி போல் திடமாக இருக்கிறான்!


—ராஜாஜி எழுதி வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ள 'குழந்தைகளுக்கான குட்டிக் கதைகள்' என்ற புத்தகத்தில் காணப்படும் சில கதைகளே இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளன.

அப்படி அழுவது ஏன்?

''எதுக்கு உன் தம்பி எம்பிக் குதிச்சுக் குதிச்சு அழறான்?''

''ரப்பர் பந்து வேணும்னு தான் குதிச்சுக் குதிச்சு அழுறான்.''

-லலிதா செல்லப்பா.



உரக்கப் படித்த நெல்லையப்பன்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

அரையாண்டுத் தேர்வு வந்து கொண்டிருக்கிறது. நெல்லையப்பன் கத்திப் படித்துக் கொண்டு இருந்தான். திண்ணையில் அவன் தந்தை அமர்ந்திருந்தார். அவன் கத்திப் படித்தது தெரு முழுவதும் கேட்டது.

அந்த நேரத்தில் நெல்லையப்பனின் தலைமையாசிரியர் தெருவில் வந்து கொண்டிருந்தார். நெல்லையப்பன் படித்துக் கொண்டிருப்பதைத் தெருக் கோடியில் இருந்தே கேட்டுக்கொண்டு வந்தார். நெல்லையப்பனுடைய தந்தை அவரைப் பார்த்ததும் எழுந்து நின்று நெல்லையப்பனுக்கு அறிவித்தார். நெல்லையப்பன் வெளியே வந்து அவரை வணங்கினான். பணிவுடன் நின்றான்.

தலைமையாசிரியர் அவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறத்தொடங்கினார்: ''நெல்லையப்பா, இந்த அளவிற்குக் கத்திப் படிக்கக் கூடாது. நீ விரைவில் களைத்துப் போய் விடுவாய். களைப்பு வந்து விட்டால் எல்லாப் பாடங்களையும் படிக்க முடியாது.

''மாணவர்களில் சிலர் உரக்கப் படித்தால்தான் பாடம் மனத்தில் தங்கும் என்று கருதுகின்றனர். இது தவறாகும். உன் குடும்பத்தில் நீ ஒரே பிள்ளை. உனக்கு ஓர் அண்ணனும் தம்பியும் இருப்பதாக நினைத்துக் கொள். அப்படி அவர்கள் இருப்பார்களேயானால், அவர்களும் தேர்வுக்குப் படிப்பார்கள், அல்லவா? அப்பொழுது



நீ இவ்வாறு உரக்கப் படித்தால் அவர்கள் எவ்வாறு படிக்க முடியும்?

''மனத்தில் பாடங்கள் பதிய வேண்டுமானால் மனம் பாடத்தில் லயிக்க வேண்டும். மனத்தை வேறு விஷயத்தில் செலுத்தாமல் பாடத்தில் நிற்க வைக்க வேண்டும். அதிகாலையில் சுமார் நாலரை மணியளவில் எழுந்தால், மனம் அமைதியாக இருக்கும். அப்பொழுது படித்தால் மனத்தில் எல்லாப் பாடங்களும் நிற்கும்.

''மாலையில் கணக்குப் போடுதல் போன்ற எழுத்து வேலைகளை வைத்துக் கொள்ளலாம். காலையிலும் இரவிலும் பாடங்களைப் படித்து மனத்தில்நிறுத்தி வைத்துக் கொள்ள முடியும். இரவில் படிக்கும் பாடம் மனத்தில் சரியாகப் பதியவில்லை என்றால், மேலும் இரண்டு மூன்று முறை படிக்கலாம். அப்படியும் அது படியவில்லை என்றால், அப்பாடத்தை ஒரு முறை எழுதிப் பார்த்தால் பாடம் மனத்தில் பதிந்து விடும். ஒரு முறை எழுதுவது பத்து முறை படிப்பதற்குச் சமம்.

''மௌனமாகப்படித்தால் பாடங்கள் மனத்தில் பதியவில்லை என்றால், முணுமுணுத்துப் படிக்கலாம். மனநிலை சரியில்லை என்றால் படிப்பதை நிறுத்தி விட்டு வேலை ஒன்றை ஆர்வத்துடன் செய்ய வேண்டும். அவ்வேலை முடிந்தவுடன் பிறகு படிக்கத் தொடங்கினால் பாடம் மனத்தில் பதியும்.

''படிக்கவோ, எழுதவோ தொடங்கும் முன் கைகால்களைக் கழுவி, இறைவனை வணங்க வேண்டும். பிறகு படிக்கத் துவங்க வேண்டும். எப்பொழுதும் நிமிர்ந்து உட்கார்ந்து படிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் படுத்துக் கொண்டு படிக்கக் கூடாது. உலவிக் கொண்டு படிப்பது அவ்வளவு நல்லதல்ல.

''ஒரே வகுப்பு மாணவர் மூவர் அல்லது நால்வர் சேர்ந்து படிக்கும் பொழுது, ஒருவன் சற்று உரக்கப்படித்தால் மற்றவர்கள் உற்றுக்கேட்டு மனத்தில் பதித்துக் கொள்ளலாம். அவன் களைப்படைந்தால் மற்றவன் படிக்கலாம். இது உதவியாக இருக்கும். இதற்காகக் கத்திப் படிக்கக் கூடாது. சற்று உரக்கப் படித்தால் தடங்கல் இல்லாமல் பேச்சு வரும். சொற்களை உபயோகிக்கும் ஆற்றலும் வரும்.''

இவற்றையெல்லாம் நெல்லையப்பன் உணர வேண்டும் என்று தலைமையாசிரியர் கூறினார். நெல்லையப்பன் தலைமையாசிரியரின் அறிவுரையைக் கேட்டான். அதன்படி நடந்தான். தேர்விலே அதிக மதிப்பெண்கள் பெற்றான்.

விந்தையான செய்திகள்



- ✲ இரண்டு கண்களையும் திறந்துகொண்டு தும்ம முடியாது.
- ✲ யானைகள் கும்பல் கும்பலாகப் போகும்போது பெண் யானைதான் தலைமை தாங்கும்.
- ✲ ஒரு தலைமுறை என்பது 33 வருடங்களைக் குறிக்கும்.
- ✲ வெட்டுக்கிளியின் இரத்தம் வெள்ளை நிறமுடையது.
- ✲ ஜப்பானில் பத்து வயதுப் பையன்கூட ஒரு டிரான்ஸிஸ்டரை அசெம்பிள் செய்துவிடுவான்.
- ✲ அமெரிக்காவில் நண்பர்களுக்குக் கிறிஸ்துமஸ் அன்பளிப்பாகப் பலர் பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்துகின்றனர். இது நல்ல வழக்கம்.
- ✲ மரத்தில் கூடுகட்டி வாழும் மிருகம் கொரில்லா.
- ✲ நத்தை ஒரு மைல் தூரத்தைக் கடக்க மூன்று வாரங்களாகும்.
- ✲ குடிசைப் பகுதி அதிகமுள்ள நகரம் கல்கத்தா.
- ✲ ரூபாய் நோட்டுக்களில் உத்தரவாதம் கொடுக்கப்படாத நோட்டு ஒரு ரூபாய்.
- ✲ இத்தாலி முழுவதையும் வென்ற மாவீரன் நெப்போலியன், பூனை என்றாலே பயந்து ஓடுவான்.
- ✲ கடந்த 30 ஆண்டுகளில் மின் கட்டணம் உயர்த்தப்படாத ஒரே நாடு ரஷ்யாதான்.

பிருந்தாவனம்

ஒரு வயதுக் குழந்தைக்குப் பள்ளி!

ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நியூபட் (New Bud) எஜுகேஷன் ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு வயதுக் குழந்தைகளுக்காகவே இப்பள்ளி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'ஷிங்காகை எஜுகேஷன்' என்ற பெயருள்ள இப்பள்ளியை ஆரம்பித்து வைத்தவர், ஹிடியோ கோபோரி என்பவர்.
ஆதாரம்: ஹிந்து 12.6.84.

—எஸ். மாதவன் (204), திருச்சி-14.





கடைசி பெஞ்ச்

அப்பா: ஏன்டா, நீ கடைசி பெஞ்சிலே உட்கார்ந்திருக்கியாமே, வாத்தியார் சொல்றது காதில் விழாதேடா!

மகன்: முன்னாடி பெஞ்சிலே உட்கார்ந்தா, நான் பேசறதெல்லாம் வாத்தியார் காதிலே விழுமேப்பா.

—சாய் வெங்கடேஷ் (464), வேலூர்—
—632 006.

மழையைப் பொழிவது...?

மழையைப் பொழிவது வானம்.
மக்கள் காப்பது மானம்.
தருமத்தில் சிறந்தது தானம்.
தாகத்தைத் தீர்ப்பது பானம்.
உள்ளம் கவர்வது கானம்.
உயர்வை அடைய ஞானம்.

—பி. ஆர். வெங்கட்ராமன் (3086):
தாம்பரம்.





அரசர்கள்

மரங்களுக்கு அரசன் அரசமரம்.
நாகங்களுக்கு அரசன் நாகராஜன்.
பறவைகளுக்கு அரசன் கருடன்.
விலங்குகளுக்கு அரசன் சிங்கம்.
நதிகளுக்கு அரசன் கடல்.
தேவர்களுக்கு அரசன் இந்திரன்.

—ப. தினேஷ்குமார் (3312), சென்னை-7.

அயல்நாட்டுப் பழமொழிகள்

* சொந்த ஊரில் அவன் பெயருக்கு மதிப்பு. அயலூரில் அவன் சட்டைக்கு மதிப்பு. (ஸ்லோவேகியா)
* அனுபவம் என்கிற கல்வி இனாமாகக் கிடைக்காது. குட்டுப்பட்டால்தான் கிடைக்கும். (நார்வே)
* உன் பகைவன் உன்னை அறிவாளியாக்குகிறான். (இத்தாலி)
* கடனில்லா ஏழை ஓர் இளவரசனை விட மேலானவன். (துருக்கி)
* கெட்டிக்காரன் தவறுகள் வெளிக்குத் தெரியாது; முட்டாளின் தவறுகள் தானே தம்பட்டம் அடிக்கும்! (வர்ஜீனியா)

—பா. தேவேந்திரகுமார் (1418), புரசைவாக்கம்.





நான் கஞ்சனா?

ஒருவர் தம் நண்பரிடம் கூறுகிறார்:
''என்னய்யா அநியாயமா இருக்கு! ஒரு ஜப்பான்காரன் பாக்கெட் பாலை வாங்கிப் பாலைக் குடிச்சுட்டு, அந்தப் பாலிதீன் பையை எடுத்து வச்சுக்கிட்டால்,'' ''அவங்களெல்லாம் ஒரு பொருளையும் வீணாக்க மாட்டாங்க. திறமைசாலிகள். சிக்கனமானவங்க'' என்றெல்லாம் புகழுறாங்க. நான் எடுத்து வைத்தால், 'கஞ்சன்', 'கருமி' என்று பட்டம் கொடுக்கிறாங்களே, ஏன்?

—எஸ். பாலமுருகன் (6658), மயிலாடுதுறை.

கைது செய்த காரணம்?

முத்துசாமி ஒரு விவசாயி. அவனுக்குக் காளை மாடுகள் தேவைப்பட்டன. தனக்குத் தெரிந்த பால்சாமி என்பவரிடம் கூறினான். அவர் ''பண்ணையாரிடம் நிறைய மாடுகள் இருக்கின்றன. நான் அவருக்கு ஒரு கடிதம் தருகிறேன். கடிதத்துடன் போய்ப் பார்'' என்றார்.


முத்துசாமி பண்ணையாரிடம் கடிதத்தைக் கொடுத்ததும், அவர் அதைப் படித்துப் பார்த்தார். உடனே போலீசுக்கு ஆள் அனுப்பி முத்துசாமியைக் கைது செய்தார்.

தகவல் தெரிந்ததும் பால்சாமி ஓடிவந்தார். ''முத்துசாமியை என் கைது செய்தீர்கள்?'' என்று கேட்டார்.

பண்ணையார் பால்சாமி எழுதிய கடிதத்தைக் காட்டினார். அதில் ''இக்கடிதம் கொண்டு வருபவன் உங்களிடம் மாடுகளை வாங்க வருகிறான்'' என்று இருந்தது. ''அடடே, மாடுகள் என்பதில் 'ன்' என்ற எழுத்துக்குப் புள்ளி வைக்காமல் போனேனே!'' என்று பால்சாமி வருந்தினார்.

—பா. சுரேஷ்குமார் (3398), இலட்சுமியாபுரம்.





இந்தியாவில் எத்தனை புலிகள்?

புலிகள் எவ்வாறு கணக்கிடப்படுகின்றன?

புலிகள் காடுகளில் நடந்து செல்லும்போது அவற்றின் காலடிகள் மண்ணில் பதிந்திருப்பதைக் கண்டு கொண்டு, கணக்கிடுகிறார்கள். அவை ஒவ்வொன்றும் வேறுபட்டிருக்குமாம். காலடிகளை வைத்தே ஆணா, பெண்ணா, வயது, வலிமை ஆகியவற்றைக் கண்டு பிடித்து விடுகிறார்கள்!

இந்தியா முழுவதும் இருந்த புலிகளின் எண்ணிக்கை: 1972—ல் - 1827
1979—ல் 3015.

தமிழ்நாட்டில் உள்ள புலிகள் மொத்தம் 97. ஆனைமலைக் காடுகளில் 50—ம் முதுமலைக்காடுகளில் 27—ம் மற்றும் உள்ள காடுகளில் மீதம் 20-ம் இருக்கின்றனவாம்.

—இரா. சீனிவாசன் (972), பெரம்பூர்.


ஆடு திருடிய கள்ளன்!

வெளியூரிலிருந்த என் நண்பன் எனக்கு ஒரு கடிதம் எழுதி அதில் என்னை 'மலரும் மாலையும்' என்ற புத்தகத்தை அனுப்பும்படி கேட்டிருந்தான். நான் அப்புத்தகத்தை அனுப்பவில்லை. ஒரு மாதம் கழித்து அவனைப் பார்க்கும்படி நேர்ந்தது. உடனே நான் முந்திக் கொண்டு, ''நீ புத்தகம் அனுப்பும்படி எழுதிய கடிதம் எனக்கு வந்து சேரவே இல்லையே!'' என்றேன்.

''கடிதம் வந்து சேராவிட்டால் நான் புத்தகம் அனுப்பச் சொன்னது எப்படித் தெரியும்?'' என்று அவன் கேட்டான்.


நான் ஆடு திருடிய கள்ளன் போல் விழித்தேன்.

—ப. விஜயகுமார் (241), சென்னை—7.



பாட்டி தந்த திராட்சை

நபி நாயகத்தைக் காண வந்த ஒரு பாட்டி, தான் கொண்டு வந்திருந்த திராட்சைப் பழங்களை அவர் முன் காணிக்கையாக வைத்தாள். நபி நாயகம் ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார். தொடர்ந்து சீடர்களுடன் பேசிக் கொண்டே அத்தனை பழங்களையும் சாப்பிட்டுவிட்டார்.



பாட்டிக்கு ஒரே மகிழ்ச்சி. அவள் அவரது ஆசீர்வாதம் பெற்றுச் சென்ற பிறகு, சீடர்களில் ஒருவர், ''காணிக்கையாக வரும் எதையும் உடன் இருப்பவர்களுடன் பகிர்ந்து உண்பது தங்களின் வழக்கமாயிற்றே!'' என்று கேட்டார்.

அதற்கு நபிநாயகம் சிரித்துக் கொண்டே, ''பழம் முழுவதும் புளிப்பு! பழத்தைக் கொடுத்த பாட்டியின் மனத்திருப்திக்காக முகமலர்ச்சியுடன் ஒன்று விடாமல் நானே சாப்பிட்டு விட்டேன். உங்களுக்கும் இதில் பங்கு தந்திருந்தால், நீங்கள் முகத்தைச் சுளிப்பீர்கள். பாட்டியின் மனம் வருந்துமல்லவா?'' என்று பதிலளித்தார்.

—ஆர். எஸ். பானுப்ரியா (4242), மதுரை—1.



ஆத்திசூடி

ஆத்திசூடி எழுதி வழி காட்டியவர் ஔவையார். அவரைப் பின்பற்றிச் சிலர் ஆத்திசூடி எழுதியிருக்கிறார்கள். அவர்கள் யார், யார்? ஒவ்வொருவரும் எத்தனை வரிகளில் எழுதியிருக்கிறார்கள்?

ஔவையார்	109	வரிகள்
மகாகவி பாரதியார்	110	வரிகள்
பாரதிதாசன்	84	,,
வாணிதாசன்	95	,,
சுத்தானந்த பாரதியார்	110	,,
டாக்டர் வ. சு. ப. மாணிக்கம்	110	,,
டாக்டர் ந. சஞ்சீவி	108	வரிகள்

—கு. அன்புசெழியன் (1727), பன்னுருட்டி.

வடைக் கணக்கு

ஒரு ரூபாய்க்கு வடை வாங்கினால் ஒவ்வொருவருக்கும் ஒரு வடை கிடைக்கும். ஒன்றேகால் ரூபாய்க்கு வாங்கினால், ஒன்றேகால் வடையும் ஒன்றரை ரூபாய்க்கு வாங்கினால், ஒன்றரை வடையும், ஒன்றே முக்கால் ரூபாய்க்கு வாங்கினால் ஒன்றேமுக்கால் வடையும் 2 ரூபாய்க்கு வாங்கினால் 2 வடையும் கிடைக்கும்.

வடையின் விலை என்ன?

பகிர்ந்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

விடை: ஒரு வடையின் விலை கால் ரூபாய்; பகிர்ந்து கொண்டவர்கள் நால்வர்.


—ஆர். எஸ். ஆனந்தி (4243), கீரைத்துரை, மதுரை—1.



முதல் இரு எழுத்துக்கள்

இங்கே எட்டுச் சொற்கள் இருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு சொல்லிலும் இரண்டு எழுத்துக்களைக் காணோம். அந்த இரு எழுத்துக்களும் எல்லாச் சொற்களுக்கும் பொதுவானவை. கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்:

——ன்
——தம்
——ம்ப
——ம்பரை
——மபதம்
——ந்தாமன்
——மண்டலம்
——மபத்தன்.



விடை: பர.

—சி. கோபாலகிருஷ்ணன் (5055), ஆதம்பாக்கம்.

இப்படியும் ஏற்படலாம்!

"அப்பா, ஏதோ விநாயகருக்குப் பக்கத்திலே குடுமி வச்ச மாதிரி ஒன்னு இருக்கே, அது என்னப்பா?"

"ஓ, அதுவா! அதுதானப்பா தேங்காய் முன்பெல்லாம் அதிலே சட்னியெல்லாம் செய்வோம்."

—வலம்புரி நாகராசன் (2878) இடையன் காட்டு வலசு.



கேளுங்கள்; சொல்லுகிறோம்!

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு இங்கு பதில் அளிக்கப்படுகிறது. உங்களுக்கு அவ்வப்போது ஏற்படும் சந்தேகங்களை அகற்றவே இப்பகுதி. அஞ்சல் அட்டையில், 'கேள்வி—பதில் பகுதி' என்று தலைப்புக் கொடுத்து, அதன் கீழ் உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள்தான் எழுத வேண்டுமென்பதில்லை. யார் வேண்டுமானாலும் எழுதலாம். நீங்கள் கேட்கும் கேள்விகளால் உங்களுக்கு மட்டுமல்ல; மற்றவர்களுக்கும் பயன் ஏற்பட வேண்டும்.

—ஆசிரியர்.

● கடவுளுக்குப் படைக்கும்போது வாழைப் பழத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களே. என்ன காரணம்?

—என். ராதா, அருப்புக்கோட்டை.

வாழைப் பழம்தான் எல்லாக் காலங்களிலும் கிடைக்கக் கூடிய பழம். குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய பழமாகவும் அது இருக்... இல்லை, இல்லை, இருந்தது.

● முதல் விண்வெளி வீரரான யூரி ககாரின் இப்போது என்ன செய்கிறார்?

—ச. பூபதி, செஞ்சி

அவர் இப்போது இல்லை. 1968ஆம் ஆண்டு ஒரு விமான விபத்திலே இறந்து விட்டார்.

● பாரதியார் எழுத்து குண்டு குண்டாக இருக்கும் என்று சென்ற மாத கோகுலத்தில் படித்தேன். உங்கள் எழுத்து எப்படி இருக்கும்?

—கே. லீலாவதி, கும்மிடிப்பூண்டி.

குண்டு குண்டாக இராது. கொஞ்சம் இளைத்துப் போய்த்தான் இருக்கும். ஆனாலும், சிரமமில்லாமல் படிக்கலாம்.

● நம் பாரத நாட்டில் உள்ள ஜனத் தொகையில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் 75 சதவிகிதம் இருப்பார்களா?

—பி. கௌரிசங்கர், சென்னை 4.

சுமார் 84 சதவிகிதம் இருக்கிறார்கள்.

● 'கோனார் நோட்ஸ்' மிகவும் பிரபலமாக இருக்கிறதே. கோனார் என்றால் யார்? அவருடைய முழுப்பெயர் என்ன? இப்போது அவர் எந்த ஊரில் இருக்கிறார்?

—எஸ். கே. தாணு, திருநெல்வேலி.

அவரது முழுப்பெயர் ஐயன் பெருமாள் கோனார். திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். இப்போது அவர் இல்லை. அவருடன் கூட இருந்து பயிற்சி பெற்றவர்கள் எழுதி வருகிறார்கள்.

● நீங்கள் ரசித்த நகைச்சுவை ஒன்றைக் கூறுங்களேன். நாங்களும் ரசிக்கிறோம்.

—ஆர். டி. செல்வம், குடியாத்தம்பேட்டை.

மைதானத்தில் தேசப் பயிற்சி வகுப்பு நடக்கிறது. ஒருவருக்குப் பக்கத்தில் ஒருவராக சுமார் 50 மாணவர்கள் நிற்கிறார்கள். தேசப் பயிற்சி ஆசிரியர், ''வலது காலைத் தூக்குங்கள்'' என்று கட்டளையிடுகிறார். எல்லாரும் வலது காலைத் தூக்கி முன்னால் நீட்டியபடி நிற்கிறார்கள் — ஒரே ஒரு மாணவனைத் தவிர. அவனுக்கு வலது எது.



இடது எது என்று தெரியாததால். வலது காலுக்குப் பதிலாக இடது காலைத் தூக்கிக்கொண்டு நிற்கிறான். தேகப்பயிற்சி ஆசிரியர் மாணவர்களின் தூக்கிய கால்களைப் பார்க்கிறார். அடுத்து அடுத்து இரண்டு கால்களைக் கண்டதும் உடனே கேட்கிறார்: ''எவன்டா அவன் இரண்டு கால்களையும் தூக்கிக் கொண்டு நிற்பது?''

எப்படி இந்த நகைச் சுவை?

● கோகுலத்தில் சினிமா விமர்சனம் வருமா?

—எம். கோதை. தேவகோட்டை.

நிச்சயம் வரும். உங்களுக் கென்றே படங்கள் வெளிவரும் போது!

● 'நாதர் முடி மேலிருக்கும் நாகப் பாம்பே. நச்சுப் பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே' என்ற பாடலை எழுதியவர் பாரதியார் என்கிறான் என் நண்பன். உண்மையா?


—வே. பாண்டியன். மதுரை—3.

இல்லை. பாரதியாரின் நூற்றாண்டு விழாவை இப்போதுதானே கொண்டாடினோம்? ஆனால், இந்தப் பாட்டை எழுதியவர் 600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். பெயர் 'பாம்பாட்டிச் சித்தர்.'

● தொலைக் காட்சியை மிக அருகில் இருந்து பார்த்தால் கண்ணுக்குக் கெடுதி என்கிறார்களே, எவ்வளவு தூரத்தில் இருந்து பார்ப்பது நல்லது?

—ஏ. சித்தா. புதுக்கோட்டை.

படம் தெரிகின்ற பகுதி இருக்கிறதே, அதைப் போல் ஆறு மடங்கு தூரத்தில் இருந்து பார்ப்பது நல்லது.



● எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு வெளிவரும் புத்தகங்களைப் பற்றி அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கிறோம். ஆனால், எங்கள் பள்ளி நூலகத்தில் கேட்டால், அவை யெல்லாம் இல்லை என்கிறார்கள். என்ன செய்யலாம்?

—ஆர். ஸ்ரீநிவாசன். சென்னை—5.

புத்தகப் பிரியர்களான பத்துப் பேர் சேர்ந்து தலைமை ஆசிரியரிடம் சென்று இந்தக் குறையை எடுத்துக் கூறுங்கள்; பலன் கிடைக்கும்.

● உலகக் குழந்தைகள் ஆண்டு 1979-ல் கொண்டாடப்பட்டதே, அப்போது வெளி வந்த 25 காசு சிறப்புத் தபால் தலை ஒன்று எனக்குச் சமீபத்தில் கிடைத்தது. அந்த ஆண்டில் வேறு ஏதேனும் சிறப்புத் தபால் தலை வெளிவந்ததா?

சி. ஹரிதாஸ். திருவள்ளூர்.

ஒரு ரூபாய்த் தபால் தலையையும் அப்போது வெளியிட்டார்கள்.

● நான் ஒரு நல்ல கவிஞனாக ஆசைப்படுகிறேன். அதற்கு என்ன செய்யவேண்டும்?

—எம். சித்ரா. கோவில்பட்டி.

கவிஞனாவது 'பலருக்கு எளிதாக இருக்கலாம். ஆனால், நல்ல கவிஞனாவது அவ்வளவு எளிதன்று. ஏற்கெனவே உன்னிடம் கவிதை எழுதும் ஆற்றல் ஓரளவாவது இருக்க வேண்டும். பல புகழ் பெற்ற கவிஞர்களின் கவிதைகளைப் படித்துப் படித்து அவற்றிலே ஊற வேண்டும். சுயமாகச் சிந்தனை செய்து கருத்துச் செறிவும், கற்பனை வளமும் உடைய கவிதைகளை எழுத முயல வேண்டும். நாளடைவில் நல்ல கவிஞனாக வாய்ப்பு உண்டு.

● நேரு மாமாவுக்கும் கமலா மாமிக்கும் பிறந்தவர் இந்திரா ஒருவர்தானா?

—ப. மீனலோசனி. குளித்தலை.

இந்திராவுக்கு ஒரு தம்பி பிறந்தான். ஆனால், ஒரு வாரத்திலே அக்குழந்தை இறந்து விட்டது.

● நம் உடம்பிலே எத்தனை எலும்புகள் இருக்கும்?

—இ. செல்வகுமார். கோவை—6.

வளர்ந்த மனிதன் உடம்பிலே மொத்தம் 206 எலும்புகள் இருக்கும். ஆனால், சின்னக் குழந்தையின் உடம்பிலே 350 எலும்புகள்

இருக்கும். குழந்தை வளர, வளர எலும்புகளில் சில ஒன்றாகச் சேர்ந்து விடும்.

● 40 வயதிலே ஒரு மாமா இருக்கிறார். அவர், இது வரை எந்தத் தேர்தலிலும் நான் ஓட்டுப் போட்டதே இல்லை என்று பெருமையாகச் சொல்லுவார். ஓட்டுரிமை உள்ளவர்கள் இப்படி வீட்டுக்குள்ளே இருக்கலாமா?

—க. மதிவாணன், சென்னை-8.

கூடாதுதான். ஆஸ்திரேலியா, செக்கோஸ்லோவாக்கியா, பெல்ஜியம், மெக்சிகோ போன்ற நாடுகளில், தேர்தலில் ஓட்டுரிமை உள்ள ஒவ்வொருவரும் ஓட்டுப் போட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஓட்டுப் போடாதவர்கள் தக்க காரணம் காட்ட வேண்டும். இல்லாது போனால், அபராதமோ சிறைத் தண்டனையோ நிச்சயம்.

● 2-வது உலகப்போரில் ஜப்பானில் உள்ள ஹிரோஷிமாவில் அணுகுண்டு போடப்பட்டது என்று படித்திருக்கிறேன். அதற்கு முன்பு எங்கேனும் போட்டார்களா?

—வெ. மஞ்சுளா, சிங்கம்புணரி.

நியூ மெக்சிகோவில் உள்ள பாலைவனத்தில் முதல் முதலாக—அதாவது 1945 ஜூலை 16-ல் போட்டுப் பார்த்தார்கள். அது வெற்றிபெற்றதும், ஜப்பானிலுள்ள ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் போட்டார்கள்.

● எங்களுக்காகத் தமிழில் அதிகமான கதைகளை எழுதிய எழுத்தாளர் யார்?

—ப. குணசேகர், இராமநாதபுரம்.

திரு. தங்கமணிக்குத்தான் அந்தப் பெருமை சேரும்.

● நம் நாட்டிற்கு முதல் முதலாக ரயில் போக்குவரத்தை ஏற்படுத்தியவர் யார்?

—ஆர். வசந்தி, சிதம்பரம்.

ஆங்கிலேயர்தான். 1853-ஆம் ஆண்டு, பம்பாய்க்கும் கல்யாணுக்கும் இடையில் உள்ள 13 மைல் தூரத்துக்கு முதல் முதலாக ரயிலை ஓட விட்டார்கள்.

● நிலா வெளிச்சத்தில் படுத்துத் தூங்கினால் பைத்தியம் பிடித்துவிடும் என்கிறார்களே, உண்மையா?



முழுப்பொய். இது உண்மையாக இருக்குமானால், இலட்சக்கணக்கான ஏழைகள் இரவும் திறந்த வெளியில் படுத்துத் தூங்குகிறார்களே, அவர்களுக்கெல்லாம் பைத்தியம் பிடித்திருக்க வேண்டுமே!

● சங்கீதம் முதலில் தோன்றியதா? சங்கீதக் கருவிகள் முதலில் தோன்றினவா?

—சே. இராமசாமி, கும்பகோணம்.

சங்கீதம் தோன்றுவதற்கு முன்பே சங்கீதக் கருவிகள் தோன்றியிருக்க வேண்டும். காடுகளிலும், மலைகளிலும் ஆறுகளிலும் இயற்கையாகவே பல ஓசைகள் உண்டாகின்றன. அவற்றைக் கேட்டே ஆதி மனிதர்கள் இசைக் கருவிகளைச் செய்தார்கள் என்றும், அதன் பிறகே இசை தோன்றியது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

ஏன் பாடினார்?

ஆசிரியர்: சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள் ஏன் ''ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்'' என்று பாடினார்?


மாணவன்: அன்றைக்குத் தானே லீவு விடுறாங்க சார்?

-எஸ். லட்சுமிநரசிம்மன்.



நினைப்பதேன்?

ரா. பொன்ராசன்





ஆயப் இதை நினைத்துப் பார்க்காய்
அதிசயத்தில் அதிசயம்.
ஆகையாலே காரணத்தை
அறிந்து கொள்ள தவிப்பு!

ஆறு தலை முறைக்கும் முன்னே
வாழ்ந்த எங்கள் பாட்டனை
அம்மா, அப்பா, அண்ணா, அக்கா
யாருக் குமே நினைவில்லே!

நூறு தலை முறைக்கு முன்னே
வாழ்ந்த தெய்வப் புலவரை—
யாரும் யாரும் இங்கே
எந்த நாளும் மறக்கல்லே!

இரண்டு நூறு வருடம் முன்னே
இருந்தோ ரையே மறந்தவர்—
இரண்டா யிரம் ஆண்டு முன்னே
இருந்தோர் தம்மை நினைப்பதேன்?

இரத்த பந்தச் சொந்தத் தையே
எளிதில் மறந்து போனவர்,
எந்தச் சொந்தம் இல்லா மலும்
என்றும் சிலரை நினைப்பதேன்?





ஒரு பூனை புலியாகிறது

டாக்டர் பூவண்ணன்



①

காலைப் பிடித்த கை

தடதடவென்று மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கைதட்டிய ஒலி, இடிமுழக்கம் போல எங்கும் பரவி எதிரொலித்தது. சம்பிரதாயத்துக் கைதட்டுவதாக இருந்தால் அது சட்டென்று நின்றிருக்கும். மாணவர்கள்பேச்சாளரின் சொற்பொழிவைச் சுவைத்து ரசித்தனர்; அந்த ஈடுபாட்டால் பிறந்த கைதட்டொலி அது. அதனால் பேச்சாளர் ஒலிபெருக்கியின் முன்னிருந்து விலகி, மேடையில் தனக்குரிய இடத்தில் போய் அமர்ந்தபிறகும் கைதட்டல் நீடித்தது. இலக்கிய மன்றத்துச் செயலாளன் நன்றி கூற வந்த பிறகுதான் கைதட்டல்நின்றது.

செயலாளன் நன்றி கூறியவுடன், நாட்டு வாழ்த்துப் பாடப்பட்டது. பின்பு கூட்டம் கலைந்தது. மாணவர்கள் கலகலப்போடு கலைந்தார்கள். ஏறத்தாழ அத்தனை பேரும் அன்று நடந்த சொற்பொழிவைப் பற்றிப் பேசிக் கொண்டே வெளியே வந்தனர்.

சேரன் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தான். அவனுக்குப் பக்கத்தில் இன்னும் உட்கார்ந்தபடியிருந்த விஜய் குமாரைப் பார்த்தான்; அவன் தோளில் கை வைத்து உலுக்கி; 'என்ன விஜய்! புறப்படலையா? வீட்டுக்குப் போக வேண்டாமா?'' என்று கேட்டான். அதன் பிறகுதான் விஜய் தன் பையுடன் எழுந்தான்.

சேரனும், விஜயும் பள்ளிக்கூடத்து மாடியிலிருந்து இறங்கினர்; கட்டடத்தை விட்டு வெளியே வந்தனர்.

சாலையின் ஓரத்தில் நீலநிற பியட் கார் நின்றிருந்தது. அதன் டிரைவர் விஜயைப் பார்த்ததும், எழுந்து பின் சீட்டின் கதவைத் திறந்தான். விஜய் ஏறினான். சேரனும் ஏறினான். உடனே கார் புறப்பட்டது.

பள்ளிக்கூடம் இருந்த அழகேசன் சாலையிலிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்தில், பாரதி பூங்கா அருகே விஜயின் பெரிய பங்களா இருந்தது. நடந்தே போகலாம். நடந்து போக வேண்டும் என்று விஜயும் விரும்பினான். ஆனால், விஜயின் அம்மா ஒப்புக் கொள்ளவில்லை. 'கோமளேஸ்வரரின் குமாரன் நடந்து வர்றதா? கூடாது. காரிலேதான் வரணும். நடக்கணும்னு ஆசையிருந்தா காலையிலே வாக்கிங் போ' என்று கூறி விட்டாள். அதனால் விஜய் காரிலே வந்தான்; காரிலே சென்றான்.

கோமளேஸ்வரரின் மகனோடு நட்புக் கொள்ள எத்தனையோ பேர் முன்வந்தார்கள். ஆனால் விஜய் அத்தனை பேரையும் ஒதுக்கிவிட்டு, சேரனைத் தானே தேர்ந்தெடுத்து நண்பனாக்கிக் கொண்டான். மாலையில் சேரனைத் தன்னுடன் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, வீட்டிலே கொஞ்ச நேரம் அவனுடன் டேபிள் டென்னிஸ் ஆடுவான். பிறகு ஆறு மணி அளவில் தான் சேரனை வீட்டுக்கு அனுப்புவான். சேரனின் வீடு, பள்ளிக்கூடத்துக்கும் விஜய் பங்களாவுக்கும் இடையே, நெசவாளர் காலனியில் இருந்தது.

பையனின் யோசனை

''என்ன, உங்க பசுமாட்டுக்குப் பச்சைக்கலர் கண்ணாடியை மாட்டி வச்சிருக்கீங்க?''

''இது காய்ந்த வைக்கோலைத் தின்னாமல் சண்டித்தனம் பண்ணிக்கிட்டே இருந்தது. அதைத் தின்ன வைக்க நம்ம பையனோட யோசனை!''

-டி. எல். ரெட்டி



அன்றும் வழக்கம்போல் விஜய், சேரனை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனான். 'விளையாட்டைத் தொடங்கலாமா?' என்று கேட்டான் சேரன்.

''இன்றைக்கு விளையாட்டு வேண்டாம்.''

சேரன் விஜயின் முகத்தை உற்றுப் பார்த்தான். ''என்ன விஜய், பள்ளிக் கூடத்திலிருந்து புறப்பட்டது முதல் ஏதோ நினைவாக இருக்கே. என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

''சேரா! சென்னையிலிருந்து வந்த அறிஞர் பேசிய பேச்சு என் மனத்தில் அப்படியே நிறைஞ்சி நிற்குது. நீ அந்த அருமையான பேச்சை ஒரு காதிலே வாங்கி மறு காதிலே விட்டுட்டையா?''

விஜய் கேட்டான்.

சென்னை அறிஞர் பேச்சு வெறும் காற்றிலே கலக்கும் பேச்சல்ல. கூட்டத்தில் அக்கறையற்றவர், சொற்பொழிவுக் கேட்பதில் விருப்பமற்றவர் முதலிய அனைவரும், ஐந்து நிமிட நேரத்தில், அவர் பேச்சில் ஒன்றிவிட்டார்கள். 'இதுதான் கேட்டார்ப் பிணிக்கும் பேச்சு' என்று சொல்லத் தக்கது. செவியிலே நுழைந்து நெஞ்சிலே இறங்கி நிலைக்கும் பேச்சு அது. சேரன் நெஞ்சிலும் அந்தப் பேச்சு நின்றது. இப்போதும்கூட அவர் கூறிய சொற்கள் காதிலே ஒலித்தன. அதனால், ''இல்லை விஜய், அவர் பேச்சு, கல் மேல் எழுத்து போல என் மனத்திலே பதிந்திருக்கு'' என்று கூறினான்.

''சேரா! நமது வேலை — கடமை எல்லாம் படிப்பதும் ஆடிப் பாடி ஆனந்தம் கொள்ளுவதும்தான் என்று நினைத்தேன். அவர் நம்மை காந்தி— நேரு நிலைக்கு உயர்த்தி விட்டார்; திலகர் — பாரதியார் நிலைக்குச் சமமாக்கி விட்டார். ஏட்டைச் சுமக்கும் சிறுவர்களே, நீங்கள்தான் நாட்டைக் காக்க வேண்டும் என்று கூறினார். கூடவே கென்னடியின் பொன்மொழியையும் சொன்னாரே, நினைவிருக்கிறதா?''

சேரன் நினைவிலும் அது நிலைத்திருந்தது.

''நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே! நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்று உன்னையே கேட்டுக் கொள்' என்று கென்னடி சொன்னார்.''

அதைக் கேட்டதும் விஜயின் முகம் மலர்ந்தது.

''ஆமாம் சேரா! 'கென்னடி இப்படிப் பொதுவாகக் கூறினார். அது பெரியவர்களுக்கு உரியது என்று ஒதுக்காதீர்கள், அது உங்களையும் நோக்கிச் சொன்னதுதான். இளங்கன்றுதான் பயம் அறியாது. பயம் அறியாதவர்கள் தான் நாட்டுக்குச் சேவை செய்ய முடியும்' என்று கூறினார். சேரா! நம் நாட்டு விடுதலைக்காக நேதாஜி சிங்கப்பூரில் படை அமைத்துப் போரிட்ட போது பாலர்கள் செய்த சேவையை எப்படி விளக்கினார்!''

சென்னை அறிஞர் அந்தச் சம்பவத்தைச் சொல்லும் போது அரங்கத்திலும் அவையிலும் ஒரே அமைதி. சிங்கப்பூரில் இந்திய தேசிய இராணுவம் அமைத்த நேதாஜி வெள்ளையருடன் போரிட்டார். ஆண்களும், பெண்களும் நாட்டுப் பணியில் ஈடுபட்ட போது சிறுவர்கள் சும்மாயிருப்பார்களா? அவர்கள் வெள்ளையரின்

டாங்குப் படையை எதிர்த்துப் போரிட்டனர். பிணங்கள் நிறைந்த தெருவில் ஆங்கிலேயரின் டாங்கு பெரிய அரக்கன் போல வரும். பாலர் படையைச் சேர்ந்த சிறுவன் வெடி குண்டோடு, பிணங்களிடையே பிணமாகப் படுத்திருப்பான். டாங்கு அச்சிறுவன் மீது ஏறி அவனை நசுக்கும் போது, குண்டு வெடிக்கும். டாங்கும் சிதைந்து விழும். தற்கொலைப் படைபோலப் பாலர்கள் தம் உயிரை இழந்து செய்த தியாகத்தைச் சென்னை அறிஞர் சொன்ன போது, கண்கள் கலங்கின; உடல் சிலிர்த்தது. அறிஞர் ஒரு கணம் பேசாது நின்றாரே! சேரன் நினைவில் இவையெல்லாம் திரைப்படம் போல ஓடின.

''ஆமாம் விஜய். நாம் அனுபவிக்கும் சுதந்திரத்துக்கு அந்தச் சிங்கப்பூர் இந்தியச் சிறுவர்கள் செய்த தியாகமும் ஒரு காரணம்'' என்றான் சேரன்.

''உலகின் பல நாடுகளில் சின்னஞ் சிறுவர்கள், நாட்டுப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதைச் சொன்னார். முன்பு நடந்த வியட்நாம் போரில் பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள், தமக்காகத் தயாரிக்கப்பட்ட சிறிய துப்பாக்கிகளை ஏந்திப் போரிட்டதைச் சொன்னாரே! சேரா, நம் நாடு நமக்காக என்ன செய்தது என்று கேட்கவே கூடாது. நாட்டுக்கு நாம் என்ன செய்தோம் என்று கேட்டுக் கொள்ளவேண்டும்.''

விஜய் சொல்லி முடிக்கும் போது, சமையற்காரன் இரண்டு பிளேட்டில் கேக்கும், வறுத்த முந்திரிப் பருப்பும் கொண்டு வந்து இருவர் முன்பும் வைத்தான். கூடவே சூடான காப்பியும் வைத்தான்.

சேரன் சாப்பிடத் தொடங்கினான். விஜய் தன் பேச்சையே தொடர்ந்தான்.

''நான் நாட்டுக்குச் சேவை செய்யப் போகிறேன். என்னால் முடிந்ததைச் செய்யப் போகிறேன். இன்றைய பேச்சு என்னை மாற்றிவிட்டது.''

விஜய் சொன்னான். சேரன் ஏதும் பேசவில்லை. விஜய் விடவில்லை.

''என்ன சேரா! உன் மனத்தில் நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று தோன்றவில்லையா?''

சேரன் விஜயின் முகத்தை நேராகப் பார்த்துப் பேசினான்.

''விஜய்! என் மனத்தில் நினைப்பதை அப்படியே சொல்கிறேன். அதைத் தப்பாக நினைக்காதே. நீ பெரிய பணக்காரரின் மகன். நீ நினைத்தால் நாட்டுக்கும் சேவை செய்யலாம்; உலகத்துக்கும் சேவை செய்யலாம். என்னால் அது முடியுமா? என் வீட்டுக்கே நான் போதுமான சேவை செய்யாமல் சுற்றுவதாக அம்மா இட்டுகிறாள். நான் நாட்டுக்கு எப்படிச் சேவை செய்ய முடியும்?''


''நாட்டுச் சேவைக்குப் பணம் தேவையில்லை...''

விஜய் முடிக்கும் முன் சேரன் குறுக்கிட்டான்:

''பலம் கூடப் போதும். என்னைப் பார். நான் பல சாலியுமல்ல. சுமாரான உடம்பு. சின்னக் காய்ச்சல் வந்தால்கூட மூன்று நாள் படுத்து விடுவேன்.''

''உடல் பலம் கூட வேண்டாம். மனபலம் போதும்!''

''விஜய்! உன்னிடம் உண்மையைச் சொல்வதில் வெட்கப்படவில்லை. எனக்கு மனபலமும் இல்லை. இருட்டில் தனியே போகப் பயப்படுவேன். வீட்டில் யாரும் இல்லாமல், தனியே பகலில் இருக்கவும் பயந்தான். தெருவில் யாராவது சண்டை போட்டால், என்



மனம் நடுங்கும். நான் எங்கே! தன் உயிர் போனாலும் ஒரு டாங்கு உடைய வேண்டும் என்று வெடிகுண்டோடு வீதியில் படுத்துத் தியாகம் செய்த வீரர்கள் எங்கே! என்னால் நாட்டுக்கு எதுவும் செய்ய முடியாது! நீ நாட்டுக்குச் சேவை செய்! நான் உன் சேவையைப் புகழ்கிறேன்.''

''நீ ஒரு கோழை.''

விஜய் வெறுப்போடு சொன்னான். சேரன் மறுக்கவில்லை. என்றாலும் அவன் மனம் புண்பட்டது.

''நேரமாகுது. நான் கிளம்பறேன்.'' என்று சேரன் புறப்பட்டு விட்டான்.

விஜய் அதன் பின்பும் நாட்டுக்குச் சேவை செய்த சிறுவர்களைப் பற்றியே நினைத்தான். அன்றிரவு அவன் இன்னது என்று தெரியாத இடத்திலே துப்பாக்கி ஏந்திப் பகைவர்களைச் சுட்டு வீழ்த்துவதாகக் கனவு கண்டான்.

நான்கைந்து நாட்கள் விஜய், நாட்டுச் சேவையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான். பேச்சு மெல்லக் குறைந்தது. ஒரு வாரத்துக்குப் பின்பு அவன் சென்னை அறிஞரை — கென்னடியின் பொன் மொழியை — நேதாஜியின் பாலர் படையை முற்றிலும் மறந்து விட்டான். 'நீ ஒரு கோழை! நீ பாயும் புலியல்ல; பதுங்கும் பூனை! உனக்குப்போய் வீர மன்னன் சேரன் பெயரை வைத்தார்களே!'' என்றெல்லாம் சேரன் மீது விஜய் தொடுத்த குற்றச்சாட்டுக்களும் குறைந்து, மறைந்தன.

இது பிரசங்க வைராக்கியம் போலும்! பேரறிஞர்கள் நாவன்மையோடு பேசுவதைக் கேட்டு, அந்தக் கணத்தில், அந்த இடத்தில் அவர்கள் கூறியபடி நடக்க எத்தனையோ பேர் தீர்மானிப்பார்கள். கூட்டம் கலையும் போது, கொள்கையும் கலையும்! அப்புறம் அதைப் பற்றிச் சிந்திக்கவும் மாட்டார்கள். பெரியவர்கள் நிலையே இப்படி! விஜய் சிறுவன்தானே! அவனும் உணர்ச்சி வசப்பட்டு மேற்கொண்ட கொள்கையை ஒரு வாரத்தில் மறந்து விட்டான், ஏன், துறந்து விட்டான் என்றும் சொல்லலாம்.

அதன் பிறகுதான் சேரன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். தினசரி அவனுடைய சொல்லம்புகளால் தாக்கப்பட்டுத் தவித்துப் போனவன் அவன் தானே! விஜய் பழைய விஜயாகி, டேபிள் டென்னிஸ், படிப்பு, வீடியோ என்று திரும்பிய பிறகு சேரன் முன் போலவே அவனுடன் கலகலப்போடு பேசி, விளையாடிக் களிப்புக் கொண்டான்.

ஒரு மாதம் ஓடியது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. தேதி, நவம்பர் மூன்று. பிற்பகல் நேரம்.

சேரன் விஜய் வீட்டுக்குப் போனான். விஜய் அம்மாவுடன் வெளியே போயிருப்பதாகக் காவல்காரன் கூறினான். 'திரும்பிப் போகலாமா? விஜய் வரும் வரை காத்திருக்கலாமா?' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே, 'லொள், லொள்' என்று குரைத்துக் கொண்டு ஓடிவந்த ஒரு நாய் அவன் மீது தாவியது. சேரனின் உடலை யாரோ மலர்ச் செண்டால் வருடியது போல உணர்ந்தான். அந்த நாயைத் தழுவிக் கொண்டான்.

அது விஜய் வளர்க்கும் காக்கர்ஸ்ப்பானியல் என்னும் உயர் ரக நாய். வெள்ளையும் கறுப்பும் கலந்த அந்த நாய் பார்ப்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். உடல் முழுவதும் சடை சடையாய் முடி. காதுகள் இரண்டும் நீண்டு கீழ் நோக்கித் தொங்கிக் கொண்டிருந்தன. காதுகளிலும் அடர்த்தியான — நீளமான முடி. நாய் கொஞ்சம் குனிந்தாலும் காதுகள் தரையைப் பெருக்கும். அதற்கு ஒரு வயது. அது பத்து நாள்


எப்படித் தெரியும்?


பாபு: 'ரோஜாப்பூ' பத்திரிகை ஆசிரியருக்கு என் வீட்டுவிலாசம் நன்றாகத் தெரியுமே!

சீனு: அடடே, அப்படியா!

பாபு: ஆமாம், நான் அந்தப் பத்திரிகைக்கு எழுதிய 32 ஜோக்குகள், 24 கதைகள், 12 துணுக்குகள் எல்லாவற்றையும் அவர் திருப்பி அனுப்பியிருக்கிறாரே, என் வீட்டு விலாசம் தெரியாது போனால் அனுப்ப முடியுமா?

-கே. எம். தியாகராசன் (6097),
திருப்பத்தூர், (தெ. ஆ.).





குட்டியாய் இருந்த போது, சென்னையிலிருந்து, அதை வாங்கி வந்து விஜய்க்குப் பிறந்த நாள் பரிசாகக் கொடுத்தார், அவன் தந்தை. விலை இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்!

''இவ்வளவு விலையா?'' என்று கேட்டான் சேரன்.

''பின்னே! இதன் தந்தை சிறந்த நாய் என்று சாம்பியன் பட்டம் பெற்றது. தாயும் ஒரு சாம்பியன்! அதனால் இவ்வளவு விலை. கோயமுத்தூரில் காக்கர்ஸ் ஸ்பானியல் மிகக் குறைவு தெரியுமா?''

விஜய் பெருமையோடு சொன்னதை வியப்போடு கேட்ட சேரன், அன்றே அதனிடம் அன்பு செலுத்தினான்.

காக்கர்ஸ் ஸ்பானியலுக்கு விஜய் வைத்த பெயர் டாலர்! பைசாவும் ரூபாயும்வைத்திருப்பவர்களால்வளர்க்க முடியாத நாய்க்கு டாலர் என்பது பொருத்தமான பெயர்தானே! சேரனுக்கு டாலரைப் பிடித்தது போலவே டாலருக்கும் சேரனைப் பிடிக்கும். அதனால்தான் அன்றும் அவன் மீது தாவிப் பாய்ந்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

சேரன் டாலரைக் கொஞ்சினான்.

சில நிமிடங்களில் விஜய் வந்து விட்டான்.

சேரனும், விஜயும் பங்களாவின் முன்னே இருந்த புல்வெளியில், நாற்காலியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். சேரன் மடியில் டாலர் வீற்றிருந்தது.

''சேரா! டாலர் என்னிடம் எப்போது வந்தது என்று நினைவிருக்கிறதா?''

''ஓ! சென்ற ஆண்டு உன் பிறந்த நாளின்போது! சரியாகச் சொன்னால் நவம்பர் ஒன்பதாம் தேதி!''

''இன்றைக்குத் தேதி என்ன?''

''நவம்பர் மூணு. விஜய்! இன்னும் ஆறு நாளில் உனக்கு பர்த்டே வருகிறது! என் அட்வான்ஸ் வாழ்த்தை ஏற்றுக் கொள். ஹாப்பி பர்த் டே டு யூ!''

''நன்றி! ஆனாலும் வழக்கம் போல் என் பிறந்த நாள் விழாவுக்கு நேரில் வந்து வாழ்த்த வேண்டும்.''

''நிச்சயமாக விஜய்! உன் பிறந்த நாளுக்கு வருவேன்! பிரியம் நிறைந்த வாழ்த்தையும் தருவேன்!'' என்று நாடக வசனம் போல் பேசினான், சேரன்.

''சேரா! சொன்னதை மறக்கக் கூடாது. இந்த முறை எனது பிறந்த நாள் விழாவை ஊட்டியில் கொண்டாட அப்பா ஏற்பாடு செய்திருக்கிறார். அதனால் நீ எட்டாந்தேதி மாலையே என்னுடன் ஊட்டிக்கு வருகிறாய்...''

''ஊட்டிக்கா...!''

''ஆமாம். சாக்குப் போக்குச் சொல்லக் கூடாது. வேண்டுமானால் நானே உன் அம்மாவிடம் அனுமதி கேட்கிறேன்'' என்றான் விஜய்.

அதற்குத் தேவை ஏற்படவில்லை. விஜய்குமாருடன் உதகைக்கு அல்ல, இமயத்துக்கே போவதானாலும் சேரனின் பெற்றோர் அனுமதிப்பார்கள்; அனுமதித்தார்கள்.

நவம்பர் 8, வியாழக் கிழமை இரவு!

உதகமண்டலத்தில், அரசினர் பூங்காவை ஒட்டிய பகுதியில் கம்பீரமாக உயர்ந்திருந்த பங்களாவில் குளிருக்கு இதமான கம்பளிக்குள்ளே விஜய் குமார் கண்ணுறங்கினான். அதே அறையில் ஒரு தனிக் கட்டிலில், அதே மாதிரி கம்பளிக்குள்ளே உடலைக் குறுக்கி உறங்கினான், சேரன்.

நவம்பர் 9, வியாழக்கிழமை!

பகல் பத்து மணிக்கு விஜய் குமாரின் பிறந்த நாள் விழா நடந்தது.

விஜய், மெழுகுவர்த்திகளை ஊதி அணைக்க, 'ஹாப்பி பர்த் டே டு யூ' பாடல் ஒலிக்க, வெகு கோலாகலத்துடன் விழா நடந்தது. விழாவுக்கு வந்தவர்கள் பெரும்பாலோர் விஜயின் தந்தைக்கு நண்பர்கள்.

விஜய்குமாரின் தந்தை வெங்கடேசன் கோவையில் உள்ள பெரும் பணக்காரர்கள் சிலரில் ஒருவர். அவர் தமது தொழில் வளர்ச்சிக்காக ஏதேதோ காரணங்களைச் சொல்லி விழா நடத்துவார். இம்முறை ஊட்டிக்கு வந்திருக்கும் பெரிய புள்ளிகள் சிலரை வளைத்துப் பிடிக்க மகனின் பிறந்த நாள் விழாவை ஊட்டியில் வைத்துக் கொண்டார்.

சேரன், தன் நண்பனுக்கு டாக்டர் மு. வரதராசனாரின் திருக்குறள் தெளிவுரையைப் பரிசளித்தான். அது ஒன்று தான் புத்தகப் பரிசு. மற்றவை, பொருள்கள்! வண்ணத் தாள்களில் சுற்றப்பட்டு, வழுவழுப்பான டேப்புகளால் கட்டப்பட்ட பொருள்கள்!

விழாவுக்குப் பின்னே பகல் விருந்து மிகச் சிறப்பாக இருந்தது. விலாப் புடைக்க விருந்துண்ட சேரன், சற்று நேரம் கண் அயரலாம் என்று படுத்தான். ஆழ்ந்த உறக்கம் அவனை ஆட்கொண்டது.

சேரன் விழித்து எழுந்த போது, அந்த மாளிகை அமைதியாக இருந்தது. மணி பார்த்தான். நான்கு. 'ஏறத்தாழ இரண்டு மணி நேரம் தூங்கியிருக்கிறோம்' என்று நினைத்தபடி அறையிலிருந்து வெளியே வந்து வரவேற்பு அறையில் உட்கார்ந்தான்.

சமையற்காரன் வந்து, ''டிபனும் காப்பியும் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டான்.

''பகல் சாப்பிட்டதே இன்னும் ஜீரணமாகவில்லை. அதனால் 'காப்பி மட்டும் போதும்'' என்றான். காப்பி வந்தது. அதைக் குடித்துக்கொண்டே, சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்தினான். விஜய் — விஜயின் அப்பா — அம்மா, யாரும் அங்கே இருப்பதாகத் தெரியவில்லை.

விஜய் நம்மை விட்டுவிட்டு எங்கே போயிருப்பான்?

சேரன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே கதவைத் திறந்து கொண்டு டிரைவர் ஒருவன் உள்ளே வந்தான்.

''பெரியய்யா மாலையிலே ஒரு பார்ட்டி கொடுக்கறாரு. அதுக்கு அவங்க முன்னாடியே ஓட்டலுக்குப் போயிட்டாங்க. நீங்க எழுந்த பிறகு, சின்னையா உங்களை ஓட்டலுக்கு அழைச்சுட்டு வரச் சொன்னாரு.''

விஜயின் தந்தை அன்று மாலை ஓட்டலில் ஒரு விருந்து தரப் போவதை முன்னரே விஜய் சொல்லியிருந்தான். அது இப்போதுதான் நினைவுக்கு வந்தது.

''எனக்கும் விஜய்க்கும் எத்தனை பெரிய ஏணி வைத்தாலும் எட்டாத வித்தியாசம். விஜயின் அன்பைப் பெற்றிருப்பதே என் அதிர்ஷ்டம். ஊட்டியிலேயே மிகப் பெரிய ஓட்டலில் பார்ட்டி என்றான். பெரிய பெரிய அதிகாரிகளும் தொழில் அதிபர்களும் வருவார்களாம். அங்கே போகாமல் இருப்பதே நல்லது என்று நினைத்தான் சேரன்.

''இல்லைங்க டிரைவர், நான் வரலைங்க. இங்கேயே இருந்துடறேன்'' என்றான்.

''காருக்கு அங்கே வேலை இருக்கும். நான் ஓட்டலுக்குப் போறேங்க.''

டிரைவர் போய் விட்டான்.

சேரன் சிறிது நேரம் அங்கிருந்த தமிழ், ஆங்கில வார இதழ்களைப் புரட்டினான்.

நேரம் எருமையாக நகர்ந்தது.

'இரவு மணி ஏழு இருக்கும்' என்று நினைத்துக் கடிகாரத்தைப் பார்த்தால் மணி ஐந்தரைதான்!

அதற்கு மேலும் அவனால் அறைக்குள் அடைபட்டிருக்க முடியவில்லை. எழுந்தான்.

'கொஞ்ச நேரம் வெளியே நடந்துட்டுச் சீக்கிரம் திரும்பி வந்துடறேனுங்க.'

சொல்லிவிட்டுப் பங்களாவின் வெளியே வந்தான். இரண்டு பக்கமும் பல வண்ணப் பூக்கள் மலர்ந்து மணம் வீச, இடையே இருந்த வழியே நடந்து கேட்டுக்கு வெளியே வந்தான்.

ஊட்டியின் காற்று எப்போதும் சில்லென்று இருக்கும். உடலுக்கு ஊறு

பறவைகள் பலவிதம்.



பசிபிக் தீவுகளிலுள்ள ஃபிஞ்ச் என்ற பறவைகளின் அலகுகள் மரங்கொத்தி பறவைபோல நீண்டவை. ஆனால் நாக்கு சிறியது. எனவே மரங்களின் இடுக்கிலிருக்கும் புழுக்களை வெளியே எடுக்க அச்சிலையைப் பயன் படுத்தும்.

ஹொண்டு

ஹொண்டு என்ற இச்சிகப்பு கோழி பச்சை நிற முட்டையிடுமாம்.



மிமிக்ரி பறவை

தரையில் கூடுகட்டும் ஸ்க்ரப் பர்ட் (SCRUB BIRD) எனும் ஆஸ்திரேலியப்பறவை எந்தப் பறவையின் குரலையும் எளிதாக, துல்லியமாக பிரதிபலிக்குமாம்.

கோவி_





செய்யாமல், . ஆரோக்கியம் தரும். தூய்மையும் குளிர்ச்சியும் பெற்ற அந்தக் காற்று சேரனின் உடலைத் தாக்கியது.

மலைக்காற்றின் குளிர்ச்சியை அனுபவித்தவாறு, மலைகளின் அரசியான நீலகிரியின் கோலத்தை ரசித்தவாறு மேலேறிச் செல்லும் சாலை வழியே நடந்து கொண்டிருந்தான்.

அரை மணிநேரம் நடந்திருப்பான். திடீரென்று எங்கும் இருள் கவிந்து விட்டதை உணர்ந்தான். அவன் சென்ற சாலையில் விளக்குகள் இல்லை.

விஜயின் பங்களா கீழே இருக்கிறது. திரும்பவும் அரை மணி நேரம் நடக்க வேண்டும். சேரன் திரும்பி நடந்தான். இரண்டே நிமிடத்தில் அவன் நடை தடைப்பட்டது.

காரணம்?

அவனுக்கு முன்னே அவன் உயரத்தில் முக்கால் உயரம் கொண்ட இரண்டு நாய்கள் சாலையின் நடுவே நின்றிருந்தன. அவற்றின் வால் ஒட்ட நறுக்கப்பட்டிருப்பதைப் பார்த்ததும், அவை டாபர்மேன் என்னும் காவல் நாய்கள் என்பதைப் புரிந்து கொண்டான். அவற்றைப் போல ஒரு டாபர்மேன் விஜயின் பங்களாவில் உண்டு. பகலிலே கூண்டிலே அடைத்து வைத்திருப்பார்கள். இரவில் திறந்து விடுவார்கள். டாபர்மேனின் ஓட்டமும் திறமையும் விஜய் சொல்லக் கேட்டிருந்தான். அது குரைத்தாலே குலை நடுங்கும். சேரன் டாபர்மேன் இருக்கும் கூண்டுப் பக்கமே போக மாட்டான்.

இப்போது சாலையை மறித்துக் கொண்டு நிற்கும் டாபர்மேன்கள் அவனுக்கு இரண்டு புலிகளாகத் தெரிந்தன.

அவற்றை எப்படிக் கடப்பது?

முன்னும் பின்னும் யாரும் இல்லை. அரசினர் பூங்காவை ஒட்டிய அந்தச் சாலையில் ஆள் நடமாட்டம் அபூர்வம் என்பது அவனுக்குத் தெரியாது.

சில நிமிடம் நின்றான். டாபர்மேன்கள் அங்கேயே விளையாடின.

அவற்றை நெருங்கச் சேரன் பயந்தான்.

'நாய்களுக்கு மோப்ப சக்தி உண்டு. யாராவது பயந்தால் அவர்களைத் தாக்க முற்படும். அதனால் நாயைப் பார்த்தால் பயப்படக் கூடாது' என்று எங்கோ – எப்போதோ படித்திருந்தான்.

''பயத்தோடு நாயை நெருங்கினால் அது நம் மீது பாயும்'' என்று திடமாக நம்பிய சேரன் சில அடிகள் பின் வாங்கினான்.

கீழே நகரத்தில் விளக்குகள் எரியத் தொடங்கின. நட்சத்திரங்கள் நிறைந்த வானம் திடீரென்று மண்ணுக்கு வந்து விட்டதைப் போன்ற அழகான காட்சி. அதை ரசிக்கும் மனநிலைதான் சேரனுக்கு இல்லை.

சேரன் இன்னும் சில அடிகள் பின்னேறினான்.

அங்கே ஒரு ஒற்றையடிப் பாதை சாலையிலிருந்து இறங்கி மலைச் சரிவில் செல்வதைக் கண்டான். சரிவில் இறங்கி நடந்தால் விஜயின் பங்களாவை

அடையலாம் என்ற நம்பிக்கையோடு சேரன் சரிவில் இறங்கினான்.

சில அடி சென்றதும் கால் வழுக்கியது. சிறுசிறு கற்கள் உருண்டன. எங்கே காலை வைப்பது என்று தெரியவில்லை. வானத்தில் நட்சத்திரங்களும் தெரியாத மேக மூட்டம்.

சேரன் மெதுவாக நகர்ந்தான். காலைப் பத்திரமாக ஊன்றினான். எச்சரிக்கையோடு எடுத்தான். இத்தனை ஜாக்கிரதையாக இருந்தும் அவன் கால் சறுக்கியது.

மறுகணம்...

சேரன் அந்தச் சரிவிலே விழுந்து புரண்டு, உருண்டு பொத்தென்று எதன் மீதோ விழுந்தான்!

மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். 'நாம் எதன் மீது விழுந்தோம்' என்று தடவிய சேரன் திடுக்கிட்டான்.


அது ஒரு மனித உடம்பு! ஒருவேளை பிணமோ?

சேரன் கிலியோடு எழுந்தான். இன்னொரு முறை உருண்டாலும் சரி, அங்கிருந்து உடனே ஓடி விடலாம் என்று ஒரு அடி எடுத்துவைத்தான். மறு அடியை எடுக்க முனைந்தபோது—


கீழே கிடந்த உடம்பின் கை மெதுவாக அசைந்து வந்து அவனது காலைக் கபக்கென்று பற்றியது.


சேரன் 'அம்மா!' என்று அலறினான்.


(தொடரும்)




1. பழைய காலத்தையும், நிகழ் காலத்தையும் ஒருவன் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவன் ஐந்து வண்டிப் புத்தகங்கள் படிக்க வேண்டும். —சீனா.
2. முப்பது வயதிற்கு முன்னால் புத்தகங்களை விரும்பாதவன், பின்னால் அவற்றைப்படித்துப் புரிந்து கொள்வது கடினம். —கிளாரண்டன்.
3. புதிய நூல் ஒன்று வந்தால் நான் பழைய நூல் ஒன்றைப் படிப்பது வழக்கம் —ரோஜர்ஸ்.
4. நண்பர்களைப் போலவே புத்தகங்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டியவை. —ஜயினாரியானு.
5. எனக்குப் பிடித்த புத்தகங்களோடு என்னை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் வருத்தப்பட மாட்டேன். —மாஜினி.
6. உலகில் சாகாவரம் பெற்றவை புத்தகங்களே —கதே.
7. படிக்கத் தகுந்த புத்தகங்களைவிட படிக்கத் தகாத புத்தகங்களே உலகில் ஏராளம். —ரவீந்திர நாத் தாகூர்.
8. சட்டைப் பையிலுள்ள ஒரு பூந்தோட்டத்தைப் போன்றது புத்தகம் —பாரசீகம்.
9. மோசம் செய்யாத நண்பன் புத்தகம்-பிரான்ஸ்
10. கெட்ட புத்தகங்கள் திருடனைவிட மோசம். —இத்தாலி.
11. புத்தகமும் நண்பர்களும் குறைவாகவும், நல்லதாகவும் இருக்க வேண்டும். —ஸ்பெயின்.
12. நல்ல நூல் நிலையம் ஒன்றின் பாதிப் பகுதியைத் திரட்டினால்தான் ஒரு புத்தகம் எழுத முடியும். —ஜான்சன்.
13. எனக்கு மிகவும் பிடித்தமான பொருள் புத்தகம். புத்தகத்திற்காகப் பணம் செலவழிப்பதில் நான் ஊதாரி என்ற பட்டத்தைப் பெறவும் தயார் —ஜவஹர்லால் நேரு.
14. ஏராளமான மக்கள் இக்காலத்தில் எப்படிப் படிப்பது என்பதைத் தெரிந்து கொண்டார்கள். எதைப் படிப்பது என்பதைத்தான் தெரிந்து கொள்ளவில்லை. —வில்லியம்ஸ் பேக்மேன்.



கோகுலத்தில் கண்ணன்
கதை: ஆனந்தி படம்:
'கோகுலம்' படிக்கும் சிறுவர் சிறுமியர்களுக்குக் கோகுலத்தில் ஆடிப் பாடிக் குறும்புகள் செய்து விளையாடிய கோபாலனிடம் தனியான அன்பு இருக்குமல்லவா? கண்ணபெருமானுடைய பால லீலைகளைக் காணலாம் வாருங்கள்!
கோபியர் யசோதையிடம் புகார் செய்தனர்.
கன்றுக்குட்டியை அவிழ்த்து விட்டான்.
பானையைக் கல் எறிந்து உடைத்தான்.
வெண்ணெய் திருடினான்
போதாக் குறைக்குப் பலராமன் வேறு....
அம்மா! கிருஷ்ணன் மண் தின்கிறான்!
யசோதைக்கு ஒரே கோபம்.
வாயைத் திற?
நான் மண் தின்னவே இல்லை. நீயே பாரு.
கண்ணனுடைய வாயில் சகல உலகங்களையும் கண்டு திகைத்துப் போனாள் யசோதை.


இது என்ன மாயம்! கண்ணனுடைய வாயினுள் நானும் கண்ணனும் கூட இருக்கிறோமே! இவன் குழந்தையா? தெய்வமா!
அடுத்த கணத்தில் புத்திர வாஞ்சை என்ற மாயையினால் எல்லா வற்றையும் மறந்து குழந்தையை அணைத்துக் கொண்டாள்.
இன்னொரு நாள்....
இப்ப என்ன பண்ணுவே போக்கிரி உனக்கு எட்டாத உயரத்தில் வெண்ணெயை வைச்சிருக்கேன்.
பால் பொங்கு வதைக் கண்டு இறக்க ஓடினாள் யசோதை குறும்புக்காரக் கண்ணன் மத்தினால் பானையை அடிக்க....
கை நிறைய வெண்ணெய்!
யசோதை திரும்பிப் பார்த்தாள்...
நீ படுத்தற பாடு தாங்க முடியலே உன்னை என்ன பண்ணுகிறேன் பார்.
இனிமே எப்படி விஷமம் பண்றேன்னு பார்க்கலாம்.


கண்ணனா கலங்குவான்? உரலைத் தள்ளி படுக்க வைத்தான்.
உரலையும் இழுத்துக் கொண்டு தவழ்ந்தான்.
இரு மரங்களின் இடையில் உரல் மாட்டிக் கொள்ள அப்போதும் இலகுவாக இழுத்தான் கண்ணன்.
காதைப் பிளக்கும் ஓசையுடன் இரண்டு மரங்களும் வேரோடு சாய்ந்தன.
நளகுபேரன் மணிக்ரீவன் என்ற இரு தேவர்களும் சாப விமோசனம் அடைந்தார்கள்.
பிரபோ! தங்கள் கருணையால் சாபம் நீங்கியது.
சத்தம் கேட்டு ஓடி வந்தாள் யசோதை.
என்ன ஆயிந்து?
கிருஷ்ணன் அந்த மரங்களுக்கு நடுவில் சிக்கிய உரலை இழுத்தான். மரமே விழுந்துடுத்து. அதிலே யிருந்து ரெண்டுபேர் வந்தா. கிருஷ்ணன் கிட்டே ஏதோ சொன்னா. பறந்து போயிட்டா.



யசோதை பாசமுடன் அணைத்தாள் கண்ணனை.
கண்ணா! நீ தெய்வக் குழந்தையே தான். பாசத்தினால் அதை மறந்து போயிட்டேன். இனிமே உன்னைக் கட்டிப்போடவே மாட்டேன்.
கண்ணன் கோகுல பாலர்களைத் தன் சாமர்த்தியமான விளையாட்டுக்களால் மகிழ்வித்து வந்தான்.
ஒரு நாள் ஒரு ஏழைக் கிழவி நாகப் பழம் விற்றுக் கொண்டு வந்தாள்.
நாகப்பழம்! நாகப்பழேம்!
பழக்காரி! எனக்கு நாகப் பழம் ரொம்பப் பிடிக்கும் தரயா?
தரேன்! என் ராஜா! ஆனா நெல்லு கொடுத்தாத்தான் தருவேன்!
கிழவி கூடையை இறக்க நெல் கொண்டுவர ஓடினான் கண்ணன்.
இந்தப் பிள்ளை என்ன அழகு! திருஷ்டி வராம இருக்கணும்.
பிஞ்சுக் கரங்களில் நெல் அள்ளி வந்தான் கண்ணன்.
இந்தா! பழம் கொடு!
நீ உன் கையாலேயே வேணுங்கற அளவு எடுத்துக்கோ ராஜா.


நஷ்டத்தைப் பார்க்காமல் நல்ல பழங்களை எல்லாம் பொறுக்கி எடுத்து கண்ணனிடம் கொடுத்து விட்டு சந்தோஷமாக வீட்டுக்கு நடந்தாள் கிழவி.
அப்பா! என்னமாய்க் கனக்கிறது.
வீடு சென்று கூடையை இறக்கியதும் அது கனத்ததன் காரணம் புரிந்தது. கூடையில் மீதமிருந்த நாகப் பழங்கள் ரத்தினங்களாய் மாறியிருந்தன.
இது என்ன அதிசயம்!
கோகுலத்தில் பல முறை கண்ணனுக்கு ஆபத்து வந்ததால் பெரியோர்கள் சேர்ந்து வேறு இடத்துக்குப் போய் விடத் தீர்மானித்தார்கள்.
கிருஷ்ணா! இது தான் கோவர்த்தன மலை!
யமுனை நதி என்ன அழகாய் இருக்கு!
பிருந்தாவனத்தில் பசுக்களையும் கன்றுகளையும் மேய்க்க இடைச் சிறுவர்கள் தினம் நதிக் கரைக்குப் போனார்கள். கண்ணனும் பலராமனும் கூடச் சென்றார்கள்.
சில சமயம் கண்ணன் மரத்தில் சாய்ந்து நின்று குழல் ஊதுவான். மாடுகளும் கன்றுகளும் சிறுவர்களும் மதி மயங்கி அப்படியே கேட்டுக் கொண்டிருப்பார்கள்.


ஒருநாள் கன்று உருவில் ஓர் அசுரன்....
ஐயோ! அசுரன்! ஓடுங்கள்! ஓடுங்கள்!
கண்ணன் மட்டும் கலங்க வில்லை. ஓடி வந்த முரட்டுக் காளைக் கன்றின் பின்கால்களைப் பிடித்துச் சுழற்றி எறிந்தான்.
விளா மரத்தில் மோதி இறந்த கன்று அசுர வடிவமடைந்தது. வத்ஸனை வதம் செய்த கண்ணனை தேவர்கள் பூ மழை பொழிந்து வாழ்த்தினர்கள்.
மற்றொரு நாள் பகாசுரன் என்பவன் கிருஷ்ணனைக் கொல்வதற்காகக் கொக்கு வடிவத்துடன் காத்திருந்தான்.
திடீரென்று கொக்கு கண்ணனை விழுங்கி விட்டது!
ஐயோ! கண்ணா!



தோழர்கள் மகிழ்ந்தனர்.
பலராமன் கட்டி அணைத்தான்.



மற்றொரு நாள் கண்ணன் ஆயச் சிறுவர்களுடன் வனபோஜனத்துக்குப் புறப்பட்டான். ஆடிப் பாடிச் சென்றனர். கன்றுகாலிகள் பின் தொடர்ந்தன.









குகைக்குள் மாடு கன்றுகளுடன் எல்லாரும் நுழைந்தார்கள்.
குகைதானா இது? அசுரனா இருக்குமோ?
பயப்படாதே! அசுரனா இருந்தால்கூட கிருஷ்ணன் கொன்று போட்டுடுவான்.
கண்ணன் உள்ளே காலடி வைத்ததும் அகாசுரன் மின்னல் வேகத்தில் வாயை மூடிக் கொண்டான். வானுலகில் தேவர்கள் கலங்கினர்கள்.
கிருஷ்ணா! கிருஷ்ணா! ஹே ப்ரபோ!
அகாசுரனின் உடலைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்தான் கண்ணன்
மாண்டு போன அசுரனின் ஜோதி கண்ணனுடைய பாதகமலத்தில் கலந்தது.
தேவருலகில் எல்லாரும் ஆடிப் பாடி மகிழ்ந்தார்கள். கண்ணனுடைய ஆற்றலைப் பார்த்து பிரும்மாவே வியந்தார்.


ஒன்றுமே நடக்காதது போல் கண்ணன்....
எல்லோரும் நதிக்கரையிலே போய் சாப்பிடலாம்
ஆமாம் கண்ணா! ரொம்பப் பசிக்கிறது.
கண்ணனைச் சுற்றி எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.
கண்ணன் விரலின் இடுக்குகளில் ஊறுகாய் வைத்துக் கொண்டு யசோதை கொடுத்த தயிர் சாதத்தை ஆசையாய்ச் சாப்பிடத் தொடங்கினான். அப்போது...
ஐயையோ! கண்ணா! மாடுகளை யெல்லாம் காணுமே!
காட்டுக்குள் போய் விட்டால் துஷ்ட மிருகங்கள் கொன்று விடுமே!



பயப்படாதீர்கள். நீங்கள் சாப்பிடுங்கள். நான் போய்ப் பார்த்து ஓட்டிக் கொண்டு வருகிறேன்!
கிருஷ்ணன் மாடுகளைத் தேடி காணாமல் அலுத்துத் திரும்பி வந்தான்.
இது என்ன? கோவர்த்தன மலை முழுவதும் தேடியாச்சு. மாடுகளைக் காணவில்லையே! இங்கே வந்தால் இவர்களையும் காணவில்லை!
இது பிரும்ம தேவனின் வேலை! சரி. நான் யாரென்பதை பிருமாவுக்குக் காட்டுகிறேன்.
கண்ணன் தானே அத்தனை சிறுவர்களாகவும் கன்றுகளாகவும் பசுக்களாகவும் உருவத்தைப் பெருக்கிக் கொண்டான். ஒன்றுமே நடக்காதது போல எல்லாரும் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.


வீட்டு வாசல்களில் கோபிகள் குழந்தைகள் வரவு நோக்கிக் காத்திருந்தார்கள்.
இன்றைக்கு என்னவோ என் மகன் ரொம்ப அழகாயிருப்பது போல் தோன்றுகிறதே!
இன்று இந்தப் பிள்ளை ரொம்ப சுறுசுறுப்பா இருக்கானே!
என்ன ஆச்சரியம்? இன்று இந்த முரட்டுப் பசு முரண்டு பண்ணாமல் பாலைப் பொழிகிறதே!
பலராமனுக்கு ஒரே வியப்பு.
இன்று கோகுலம் என்ன அமைதியாக இருக்கிறது! இந்தப் பசுக்களிடமும் சிறுவர்களிடமும் அலாதியான பாசம் உண்டாகிறதே! இது ஏதோ கண்ணனின் மாயம்தான்.
பலராமன் சந்தேகம் தீர்ந்தது.
கண்ணா! நிஜத்தைச் சொல்லு. எல்லாரும் எங்கே போய் விட்டார்கள்?
எல்லாம் பிரும்ம தேவனின் காரியம். எல்லாரையுமே ஒளித்து வைத்திருக்கிறார்.
பிரும்ம தேவருக்கு ஒரு சங்கடமான நிலைமை சத்திய லோகத்தில் ஏற்பட்டது.
உள்ளே பிரவேசிக்கக் கூடாது.
என்ன இது? என் வீட்டுக்கு நான் வருவதைத் தடுக்க நீங்கள் யார்?
இதோ பாருங்கள். நீங்கள் பிரும்மா மாதிரியே தான் இருக்கிறீர்கள். ஆனல் எங்களை ஏமாற்ற முடியாது. அவர் ஏற்கெனவே உள்ளே இருக்கிறாரே!




இது என்ன முட்டாள் தனம்? நான் வெளியே இருக்கும் போது உள்ளே பிரும்மா எப்படி இருக்க முடியும்?
கதவுகள் திறந்ததும் தான் அமர வேண்டிய ஆசனத்தில் இன்னொரு பிரும்மா இருப்பதையும் ஸரஸ்வதி வீணை வாசிப்பதையும் ரிஷிகள் தேவர்கள் அனைவரும் இசையைக் கேட்டு மெய் மறந்திருப்பதையும் கண்டு திகைத்தார் பிரும்மா.
சரி நீங்களே பாருங்கள்.
ஆத்திரத்தோடு பிருந்தாவனம் வந்தார் பிரும்மா.
இதென்ன மாயம்? நான் ஒளித்து வைத்து தூக்கத்தில் ஆழ்த்திய சிறுவர்கள் இங்கேயே இருக்கிறார்கள்...
அதே சமயம் கிருஷ்ணனோடு நதிக்கரையிலும் அத்தனை பேரும் இருக்கிறார்களே!
பிரும்மதேவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கண்ணன் இருந்த இடத்தில் சங்கு சக்கர தாரியாய் ஸ்ரீமந் நாராயணன் காட்சியளித்தார். திரும்பிய இடமெல்லாம் விஷ்ணு!
பிரும்மதேவர் மனம் தெளிந்து கண்ண பெருமானை மூன்று முறை வலம் வந்து தொழுது ஸத்தியலோகம் திரும்பினார்.



ஒரு நாள் அலைந்து களைத்த பலராமன் கண்ணனின் மடியில் தலை வைத்துப் படுத்திருக்க நண்பர்கள் ஸ்ரீதாமனும் சுபலனும் வந்தார்கள்.
கண்ணா! பக்கத்திலே ஒரு பெரிய பழக்காடு இருக்கு. வாசனை கம் என்று வரது.
எங்களுக்குப் பசிக்கிறது. கிட்டே போனா தேனுகாசுரன் துரத்தறான்.
துள்ளி எழுந்தான் பலராமன்.
எங்கே அந்தக் காடு? நான் பழம் பறித்துத் தருகிறேன்.
பலராமனைக் கழுதை வடிவ தேனுகாசுரன் ஆத்திரத்துடன் எதிர்த்தான்.
உதைக்க வந்த அசுரனின் கால்களைப் பிடித்துச் சுழற்றி எறிந்தான் பலராமன். தேனுகாசுரன் விழுந்து மாண்டான்.
கோகுலத்துச் சிறுவர்கள் பசியாறப் பழங்களை உண்டனர்.



ஒரு நாள் கண்ணனும் இடைச்சிறுவர்களும் யமுனைக் கரைக்குச் சென்றார்கள். பலராமன் அன்று போகவில்லை. வெய்யில் கடுமை. எல்லோருக்கும் தாகம். சிறுவர்கள் யமுனையை நெருங்கினார்கள்.
அந்த மடுவில் காளிங்கன் என்ற கொடிய பாம்பு வசித்து வந்தது. அந்த மடுவே விஷ மயமாக இருப்பதை அறியாமல் சிறுவர்கள் பலர் நீரைக் குடித்தார்கள்.
வேறு சிலர் கண்ணன் குழலூதக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது...
கண்ணா! நதியில் தண்ணீர் குடித்த எல்லாரும் மயங்கி விழுந்துட்டா. வாயேன்.
கண்ணன் கதம்ப மரத்தின் மீது ஏறி...
நீரில் பாய்ந்தான்....
ஐயோ! கண்ணன் காளிந்தி மடுவில் விழுந்துட்டானே.



ஆரவாரம் கேட்ட காளிங்கன் சீறி எழுந்து கண்ணனைத் தன் வாலால் சுற்றிக் கொண்டான்.
காளிங்கனின் பிடியிலிருந்து தப்பிய கண்ணன் அவனுடைய விரித்த படத்தின் மீது தாவி ஏறினான்.
ஒவ்வொரு தலையிலும் துள்ளித் துள்ளிக் குதித்து ஆடினான்.
செய்தி அறிந்து யசோதையும் பலராமனும் பிறரும் ஓடி வந்தனர்.
கண்ணா! உன்னை விட்டு எப்படி இருப்பேன். நானும் வருகிறேன்.
அம்மா! யாரும் கண்ணனை ஒன்றும் செய்ய முடியாது. சற்றுப் பொறுமையாக இருங்கள்.


வெகு நேரம் கண்ணன் நர்த்தன மாடப் பாரம் தாங்காமல் காளிங்கன் களைத்துப்போய் சரணடைந்தான். காளிங்கனுடைய பத்தினிகள் கண்ணனைத் துதித்தார்கள்.
பிரபோ! எங்கள் கணவரை மன்னித்து விடுங்கள்.
தேவர்கள் பூ மாரி பொழிய...
காளிங்கா! நீ கடலில் உள்ள ரமணகத் தீவுக்குப் போய் விடு. உன் தலைகளில் என் பாதச் சுவடு பதிந்திருப்பதால் கருடனும் உனக்குத் தொந்தரவு தர மாட்டான்.
கரையில் தாவிய கண்ணனைத் தழுவிக் கொண்டு யசோதை ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.
நந்தகோப நந்தன ஸ்ரீ கிருஷ்ண கிருஷ்ண – யது நந்தன பக்த சந்தன கிருஷ்ண கிருஷ்ண

பெரிய எதிர்பார்ப்புகள்

உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை – 21



மூலம்: சார்லஸ் டிக்கன்ஸ்
தமிழ்ச் சுருக்கம்:
எஸ். கிருஷ்ணமூர்த்தி

என் முழுப்பெயர் பிலிப் பிரிப். அது என் வாயில் நுழையவில்லை. ஆகவே, என் பெயரைப் பிப் என்று மாற்றிக்கொண்டேன். மற்றவர்களும் என்னைப் பிப் என்றே அழைத்தனர். நான் சின்னக் குழந்தையாக இருக்கும் போதே என் அம்மா, அப்பா இறந்தனர். அவர்களுடைய முகம் எனக்கு நினைவில்லை. ஆனால், மாதா கோவில் சுற்றுப்புறத்திலிருந்த அவர்களுடைய கல்லறை மட்டும் தெரியும். நான் அடிக்கடி அங்கே போய் விளையாடினேன். கல்லறைக்கு அருகிலிருந்த விசாலமான சதுப்பு நிலத்தில் நான் சுற்றித் திரிவது வழக்கம்.

குளிர்காலத்தில் ஒருநாள். மாலை வேளை. கல்லறையைச் சுற்றிக் காற்று ஊளையிட்டது. தன்னந்தனியாக அங்கே இருந்த என்னை இனந்தெரியாத ஒரு பயம் பிடித்துக் கொண்டது. நான் ஓவென்று அழத் தொடங்கினேன்.

''அழுகையை நிறுத்து!'' என்று அதட்டிக் கொண்டே ஒரு பயங்கர மனிதன் என் முன்னால் தோன்றினான்.

''சப்தம் செய்யாதே! செய்தால் உன் மென்னியை முறித்து விடுவேன!'' என்று அவன் என்னை மிரட்டினான். நான் பயத்தால் நடுங்கிப் போனேன்.

அந்த மனிதனுக்கு உடம்பெல்லாம் புழுதி, அழுக்கு. முரட்டுத் துணியில் பழைய உடை. ஒரே கிழிசல். தலையைச் சுற்றி ஒரு கந்தல் துணியைக் கட்டியிருந்தான். ஒரு காலில் இரும்பு வளையமும் அறுந்த சங்கிலித் துண்டும் காட்சி அளித்தன. அவன் என்னை முரட்டுத்தனமாகப் பற்றினான்.

''என் கழுத்தை முறித்து விடாதீர்கள், ஐயா, விட்டு விடுங்கள், ஐயா!'' என்று நான் கெஞ்சினேன்.

''உன் பெயர் என்ன?''

''பிப், ஐயா!''

''நீ எங்கு வசிக்கிறாய்?''

மாதா கோவிலுக்கு அப்பால் இருந்த கிராமத்தைச் சுட்டிக் காட்டினேன்.

அவன் என்னைத் தூக்கி ஒரு கல்லறையின் மீது உட்கார வைத்து என் சட்டைப் பைகளைச் சோதனை போட்டான். அதில் ஒரு ரொட்டித் துண்டு இருந்தது. அதை எடுத்து ஆசையோடு சாப்பிட்டான்.

''உன் அப்பா அம்மா எங்கே?'' என்று கேட்டான்.

''அதோ!'' என்றேன்.

அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"அதோ! அந்தக் கல்லறையிலே இருக்கிறார்கள்" என்றேன்.

"ஓ...! நீ யாருடன் இருக்கிறாய்?"

"என் அக்கா, திருமதி ஜோ கார்கரியுடன் வசிக்கிறேன், அவள் ஒரு கருமானின் மனைவி", என்றேன்.

அவன் யோசித்தான். பிறகு, "நாளைக் காலையில் கொஞ்சம் உணவும், ஓர் அரமும் எடுத்துக்கொண்டு இங்கே வா. யாருக்கும் தெரியக் கூடாது. என்னைப் பற்றி யாரிடமாவது பேசினால், உன்னைக் கொன்று உன் குடலை வெளியே எடுத்து விடுவேன். ஜாக்கிரதை!" என்று பயமுறுத்தினான். அவ்வாறே உறுதி அளித்துவிட்டு வீட்டுக்கு ஓடினேன்.

என்னுடைய அக்கா திருமதி ஜோ கார்கரி என்னைவிட இருபது வயது மூத்தவள். என்னைத் திட்டி, அடித்து மிகவும் கண்டிப்போடு வளர்த்தாள். என்னிடம் மட்டும் அல்லாமல் அவள் தன் கணவனிடத்திலும் மிகவும் கண்டிப்பாக இருந்தாள். அவளுடைய கணவன் ஜோ மிகவும் நல்லவர். அமைதியும், பொறுமையும் மிக்கவர். என்னிடம் மிகவும் அன்பாக இருந்தார்.

நான் மாதா கோவிலிலிருந்து திரும்பியதும் எனக்காகக் காத்துக்கொண்டிருந்த அக்காவிடம் அகப்பட்டுக் கொண்டேன். வழக்கம் போல் அவளிடம் வசவும் அடியும் வாங்கிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தேன். எனக்குப் பசித்தாலும் நான் சாப்பிடவில்லை. கல்லறையில் இருந்த மனிதனுக்காக என் ரொட்டியை ஒளித்து வைத்தேன்.

கூடத்தில் தீச்சட்டியின் அருகில் உட்கார்ந்து நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தோம். வெளியே துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டது.

"அத்தான், எதற்காகத் துப்பாக்கி சுடுகிறார்கள்?" என்று நான் கேட்டேன்.

"இன்னொரு கைதி தப்பியிருக்கிறான்", ஜோ பதிலளித்தார்.

"இன்னொரு கைதி என்றால்...?"

"நேற்றிரவு ஒரு கைதி தப்பி ஓடினான். அப்போது நம்மை எச்சரிக்கை செய்வதற்காகச் சுட்டார்கள். இப்போது இன்னொருவன் தப்பிவிட்டான் போலிருக்கிறது."

"யார் சுடுகிறார்கள்?" மீண்டும் கேட்டேன்.

"சதுப்பு நிலத்திற்கு அப்பால் ஆறு ஓடுகிறது. ஆற்றில் சிறைச் சாலையாகப் பயன்படும் கப்பல்கள் உள்ளன. அவற்றிலிருந்து சுடுகிறார்கள்."

"யாரைச் சிறையில் அடைப்பார்கள்? எதற்காக அடைப்பார்கள்?" என்று நான் தொடர்ந்தேன்.

என்னுடைய கேள்விகள் அக்காவின் பொறுமையைச் சோதித்தன. அத்தான் ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அதற்குள் அக்கா குறுக்கிட்டு, "திருட்டு, கொலை முதலிய கெட்ட காரியங்கள் செய்பவர்களைச் சிறையில் அடைப்பார்கள். அவர்கள் நிறையக் கேள்வி கேட்டுத்தான் முதலில் வாழ்க்கையைத் தொடங்குவார்கள். சரி, சரி. நேரமாகிறது. போய்த் தூங்கு" என்று விரட்டினாள்.

நான் தூங்கப் போனேன். ஆனால் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும் என்ற பரபரப்பில் எனக்குத் தூக்கம் வரவில்லை. 'வாக்குக் கொடுத்தபடி நான் ரொட்டியும், அரமும் திருடியாக வேண்டும். அந்தத் திருட்டுக்கு என்னைச் சிறைக்கு அனுப்புவார்களோ!' என்று நான் குழம்பினேன். விடியற்காலையில் கொஞ்சம் வெண்ணெய், ரொட்டி, கேக்குகள், பிராந்தி முதலிய உணவுப் பொருள்களையும் அத்தானின் பட்டறையிலிருந்து ஓர் அரத்தையும் எடுத்துக்கொண்டு பனி படர்ந்த சதுப்பு நிலத்தை நோக்கி ஓடினேன்.

கல்லறையின் கதவுகளைக் கடந்து உள்ளே நுழைந்தேன். வழியில் இருந்த மேட்டின் மேல் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு ஒருவன் உட்கார்ந்தவாறே உறங்கினான். அருகில் சென்று அவனை மெதுவாகத் தொட்டேன். உடனே அவன் குதித்து எழுந்தான். முதல் நாள் நான் பார்த்த மனிதன் அல்ல அவன்! முரட்டுக் கந்தல் துணியும், காலில் வளையமும், அறுந்த சங்கிலியும் அவனைப் போலவே இருந்தாலும், முகத்தில் காயங்களுடன் பயங்கரமாகக் காணப்பட்டான். தலையில் தொப்பி வைத்திருந்தான். என்னை நன்றாகத் திட்டிவிட்டு அவன் மூடுபனியில் ஓடிமறைந்தான்.

சிறிது தூரம் உள்ளே சென்றதும், நான் தேடி வந்த ஆசாமியைக் கண்டேன். அவன் எனக்காகக் காத்திருந்தான். உணவுப் பொட்டலத்தையும், அரத்தையும் கொடுத்தேன். பசியோடு இருந்த அவன் பொட்டலத்தைப் பிரித்தான். ஒரு மிருகத்தைப் போல அவசர அவசரமாகச் சாப்பிட்டான். பிறகு அரத்தை எடுத்துக்

காலில் இருந்த இரும்பு வளையத்தை அறுக்கத் தொடங்கினான். நான் அங்கிருந்து நழுவினேன்.


அன்று கிறிஸ்துமஸ் பண்டிகை. விருந்திற்காகப் பல உறவினர்கள் வந்திருந்தனர். அக்கா என்னுடைய திருட்டைக் கண்டுபிடித்து விடுவாள் என்ற நினைப்பு ஒவ்வொரு வினாடியும் என்னைப் பயமுறுத்தியது. அந்தச் சமயத்தில் ஒரு விலங்கை நீட்டிக் கொண்டே சில போலீஸ்காரர்கள் எங்கள் வீட்டிற்குள் நுழைந்தனர். என் சப்த நாடிகளும் ஒடுங்கின.

''இங்கு இரும்பு வேலை செய்பவர் யார்? இந்த விலங்கைக் கொஞ்சம் சீர் செய்ய வேண்டும்'', என்று ஒரு போலீஸ்காரர் கேட்டார். அத்தான் விரைவிலேயே அதைச் சரி செய்தார். ''இரண்டு கைதிகள் தப்பி விட்டனர். அவர்களைத் தேடிப் பிடிக்க வந்திருக்கிறோம். சதுப்பு நிலத்திற்குக் கொஞ்சம் வழிகாட்ட வர முடியுமா?'' என்று அவர்கள் கேட்டனர். அத்தானும் நானும் அவர்களுடன் போனோம். சதுப்புத் தாழ் நிலத்தில் அந்தக் கைதிகள் இருவரும் வெறி பிடித்தாற் போலச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

என் இளமைப் பருவத்தில் இன்னொரு நிகழ்ச்சியும் நடந்தது. அது என் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்தது. அதையும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்த ஊரிலிருந்த எங்கள் மாமா ஒருநாள் ஓர் உற்சாகமான செய்தியுடன் எங்களைப் பார்க்க வந்தார். அவர் என்னைச் சுட்டிக் காட்டி, ''மிஸ் ஹாவிஷம் இந்தப் பிள்ளையை அழைத்து வரச் சொல்லியிருக்கிறார். இவன் அங்கே போய் விளையாட வேண்டுமாம்'' என்றார். அதைக் கேட்ட அக்காவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

நான் மிஸ் ஹாவிஷம் பெயரைக் கேட்டிருந்தேன். எங்கள் வட்டாரத்தில் இருந்த அனைவருமே அந்தச் சீமாட்டியை அறிவார்கள். அவள் பெரிய பணக்காரி. மிகவும் கடுமையானவள். தான் வசித்த அந்த இருண்ட மாளிகையை விட்டு அவள் வெளியில் போனதே இல்லை. எங்கள் மாமா ஒரு முறை அந்தச் சீமாட்டியைப் பார்க்கப் போயிருந்தபோது அவள் பொழுது போவதற்கும், விளையாட்டுத் துணைக்கும் ஒரு சிறுவனை அனுப்பச் சொல்லியிருந்தாளாம். அவர்



கோயில் யானைக்கு

மு. வை. அரவிந்தன்

கோயில் யானை, குளிப்பதற்கு
சோப்பு கொடுங்க!
புதிய செங்கல் கொண்டு வந்து
போட்டுத் தேயுங்க!

யானை, பல்லைத் தேய்ப்பதற்கு
என்ன செய்யலாம்?
மென்மையான தழையைப் போட்டு
மெல்லச் சொல்லுங்க!

துடைத்துக் கொள்ள யானை கையில்
துண்டு தாருங்க!
கோணிப் பையைக் கொண்டு வந்து
கொடுத்து விடுங்க!

வேட்டி சட்டை அதற்கு வேணும்;
விரைவில் தாருங்க!
ஆடை எதற்கு? பிறந்த மேனி
அழகாய் இருக்குங்க!

என்னை அனுப்புவதாகச் சொன்னாராம். ''சீமாட்டியின் மூலம் எனக்குப் பெரிய எதிர்காலம் வரப்போகிறது'' என்று அவர்கள் பேசிக் கொண்டனர்.

அக்கா அவசர அவசரமாக என்னைக் குளிப்பாட்டி, ஒரு புதிய சட்டையை மாட்டினாள். அடுத்த ஊருக்கு மாமாவுடன் என்னையும் அனுப்பி வைத்தாள். அத்தானை விட்டுப் போவது எனக்குக் கஷ்டமாக இருந்தது. ஏனென்றால் அதுவரையில் நாங்கள் பிரிந்து இருந்ததே இல்லை. மேலும் சில நாட்களாகவே அத்தானுக்கு உதவியாளனாக இருந்து பட்டறை வேலைகளை நான் கற்று வந்தேன்.

அடுத்த நாள். காலை வேளை. மாமாவும், நானும் சீமாட்டியின் மாளிகைக்குப் போனோம். பெரிய

மாளிகை. கதவுகளும், ஜன்னல்களும் அடைக்கப்பட்டு இருந்தன. ஏகப்பட்ட தாழ்ப்பாள் பூட்டு. எல்லாம் துரு வேறியிருந்தன. மாமா அழைக்கும் மணியை அடித்தார். ஓர் அழகிய சிறுமி வந்தாள்.

''இவன்தான் பிப்'' என்று மாமா என்னை அறிமுகம் செய்தார்.

''உள்ளே வா, பிப்!'' என்றாள் அந்தப் பெண். மாமா விடைபெற்றுச் சென்றார்

நான் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டு நின்றேன். ''என்னடா நிற்கிறாய்! சீக்கிரம் வா!'' என்று அந்தப் பெண் அதட்டினாள்.

அவளுக்கு என் வயதுதான் இருக்கும். இருந்தாலும், அழகு, பணம், அந்தஸ்து — இவை யாவும் படைத்த அவள் தன்னை ஓர் அரசியைப் போலவும், என்னை மிகவும் கேவலமாகவும் மதித்தாள். பல இருட்டுக் கூடங்களையும், மாடிப்படிகளையும் கடந்து ஓர் அறையின் கதவை அடைந்தோம். ''உள்ளே போ'' என்று சொல்லிவிட்டு, அவள் மெழுகு வர்த்தியுடன் கீழே இறங்கிப் போய் விட்டாள்.


நான் தயங்கிக் கொண்டே கதவைத் தட்டினேன். அழைப்பு வந்தது. உள்ளே போனேன். பெரிய அறை. பகல் வெளிச்சம் துளிக் கூட உள்ளே நுழைய வில்லை. மெழுகுத்திரிகள் எரிந்துகொண்டிருந்தன. ஒரு பெரிய கண்ணாடியின் முன்னால் ஹாவிஷம் சீமாட்டி விசித்திரக் கோலத்தில் வீற்றிருந்தாள். கடிகாரங்கள் நின்று போயிருந்தன. தலை முதல் கால் வரையில் வெள்ளை வெளேரென்று பட்டும், வைரமும் பூண்டு அவள் ஒரு கல்யாணப் பெண்ணைப் போல அலங்கரித்திருந்தாள். அவளுடைய தலைமுடி நரைத்திருந்தது. ஆடை ஆபரணங்கள் பழுப்பேறியிருந்தன. அவளுடைய உடம்பு எலும்பும் தோலுமாகக் குறுகியிருந்தது. கண்கள் மட்டும் பிரகாசித்தன.

''யாரது?'' சீமாட்டி கேட்டாள்.

''பிப், அம்மா, விளையாடுவதற்காக வந்திருக்கிறேன்.''

''அருகில் வா, பார்க்கலாம்'' என்றாள். பிறகு ''என் மனம் உடைந்து போயிருக்கிறது. உலகத்திலுள்ள மனிதர்களைப் பார்த்து அலுத்து விட்டது. எனக்கு ஒரு பொழுது போக்கு தேவை. ஏதாவது விளையாடேன்'', என்றாள்.

எனக்கு என்ன விளையாடுவதென்றே தெரியவில்லை, மறுக்கவும் பயமாக



இருந்தது. அப்புறம் அக்காவுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். தயங்கினேன். அதற்குள் சீமாட்டி எஸ்டெல்லா என்னும் பெயருடைய அந்த அழகிய சிறுமியை வரவழைத்தாள். அவளை என்னோடு சீட்டு விளையாடச் சொன்னாள். நாங்கள் விளையாடுவதைச்சீமாட்டி வேடிக்கை பார்த்தாள்.

எஸ்டெல்லா வேண்டா வெறுப்போடு விளையாட உட்கார்ந்தாள். எனக்குத் தெரிந்த முறையில் நான் ஆடினேன். அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டே, ''இவனுடைய முரட்டுக் கைகளும்,தடித்த காலணியும் எனக்குப் பிடிக்கவே இல்லை'', என்று கேலி செய்தாள். நான் அழுகையையும் கோபத்தையும் வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டேன்.

சீமாட்டி ஆறு நாட்கள் கழித்து மறுபடியும் என்னை வரச் சொன்னாள். போனேன். எஸ்டெல்லா வழக்கமான கர்வத்தோடு கதவைத் திறந்தாள். என்னை அலட்சியமாக மாடிக்கு அழைத்துச் சென்றாள். சீமாட்டியின் அறையில் நுழைந்தேன்.

''விளையாடுவதற்குத் தயாரா?'' என்று கேட்டாள்.

''இன்று வேண்டாம்'', என்றேன்.

''ஏதாவது வேலை செய்கிறாயா?'' என்று கேட்டாள். ''சரி'' என்று தலை அசைத்தேன்.

சீமாட்டியும் நானும் அடுத்த அறைக்குச் சென்றோம். அதுவும் பெரிய அறை. நடுவில் நீண்ட மேசை. அதன்மேல் என்றோ ஒருநாள் விருந்துக்காக வரிசையாக வைக்கப்பட்ட பொருள்களெல்லாம் அப்படியே கிடந்தன. புழுதியும், ஒட்டடையும் மண்டி இருந்தன.

சீமாட்டி என் தோளைப் பிடித்துக் கொண்டு நடந்தாள். நான் அவளை அழைத்துக் கொண்டு அந்த அறையில் சுற்றிச் சுற்றி வந்தேன். பல வருஷங்களுக்கு முன்னால் சீமாட்டியின் கல்யாண நாளுக்காகச் செய்யப்பட்ட ஒரு பெரிய கேக் மூலையில் சிதறிக் கிடந்தது. அதன்மேல் சுண்டெலிகள் ஓடிக் கொண்டிருந்தன. ''இந்தக் கேக் அழிந்து போவதைப் போல நானும் அழிந்து வருகிறேன். ஆனால், எலியின் பற்களை விடக் கூர்மையான கவலையின் பற்கள் என் மனத்தை அரிக்கின்றன,'' என்று சொல்லிப் பயங்கரமாகச் சிரித்தாள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. வழக்கமான அலட்சியத்துடன் நாய்க்கு உணவிடுவதைப் போல எஸ்டெல்லா எனக்கு உணவிட்டாள்.

அடுத்த முறை சீமாட்டியைப் பார்க்கப் போன போது அவள் ஒரு சக்கர நாற்காலியில் இருந்தாள். நான் அவளை ஒவ்வொரு அறையாகத் தள்ளிக் கொண்டு போனேன். சீமாட்டி என்னைப் பற்றியும், என் படிப்பைப் பற்றியும் பல கேள்விகள் கேட்டாள். ''படிக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆனால் வசதிதான் இல்லை. ஆகவே, அத்தானுக்கு உதவியாளனாக இருந்து பட்டறை வேலைகளைக் கற்று வருகிறேன்'', என்று சொன்னேன். உடனே சீமாட்டி என் பள்ளிப் படிப்புக்கு ஏதாவது உதவி செய்வாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அவள் பதிலே சொல்லவில்லை. எனக்குக் கிடைத்ததெல்லாம் ஒரு கேவலமான சாப்பாடும், சிறு தொகையும்தான்.

சீமாட்டியின் மாளிகைக்குப் போகத் தொடங்கியதிலிருந்து எனக்கு என் எளிய கிராமிய வாழ்க்கை பிடிக்கவில்லை. வறுமை சூழ்ந்த அக்காவின் வீட்டையும், அவளுடைய கணவனின் பட்டறையையும், படிக்க வசதிகள் இல்லாத அந்தக் கிராமத்தையும் — எல்லாவற்றையும் நான் வெறுத்தேன். பட்டணம் சென்று, நன்றாகப் படித்து, நல்ல உடைகளை அணிந்து, வசதியாக வாழ வேண்டும் என்ற ஆசைகள் என் மனத்தில் வேர் விட்டன.

ஒருநாள் அத்தானைத் தேடி ஒரு சீமான் வந்தார். அவர், ''என் பெயர் ஜாகர்ஸ். நான் லண்டனில் வக்கீலாக இருக்கிறேன். ஒரு முக்கிய விஷயமாக என் கட்சிக்காரர் என்னை இங்கு அனுப்பினார். உங்கள் பட்டறையில் வேலை செய்யும் பிப் என்னும் சிறுவனுக்குப் பெரிய எதிர்பார்ப்புகள் உள்ளன. அவன் இந்தப் பட்டறை வேலையை உடனே விடவேண்டும். லண்டனில் அவனுக்குச் சொத்துக்கள் காத்திருக்கின்றன. அவன் படித்து, வளர்ந்து, ஒரு செல்வச் சீமானாகத் திகழ முடியும்'', என்றார். என் கனவுகள் பலிக்கும் வேளை வந்து விட்டது! அத்தானும், நானும் உடனே அந்தத் திட்டத்திற்குச் சம்மதம் தெரிவித்தோம்.

வக்கீல் தன் கட்சிக்காரரின் பெயரைச் சொல்லவில்லை. அவ்வளவு உயர்ந்த உள்ளத்தோடு உதவ முன் வந்த கட்சிக்காரர் ஹாவிஷம் சீமாட்டிதான் என்று நாங்கள் நம்பினோம்.

சாதாரணமான என்னை ஒரு சீமானாக ஆக்கி, எதிர்காலத்தில் எஸ்டெல்லாவை மணப்பதற்கு ஏற்றவனாக மாற்றுகிறாரா என்று நாங்கள் கற்பனை செய்தோம்.

லண்டனில் எனக்கு ஓர் இல்லம் தயாராக இருந்தது. சீமாட்டியின் தூரத்து உறவினனான எர்பர்ட் பாக்கெட் என்னும் இளைஞன் எனக்குத் தோழனாக இருந்தான். அவன் படித்து விட்டு வேலை தேடிக் கொண்டிருந்தான். அவனுடைய அப்பாவிடம் தான் நான் கல்வி கற்பதற்கு ஏற்பாடாகி இருந்தது.

பாக்கெட்டும், நானும் நெருங்கிப் பழகினோம். என்னுடைய பழைய வாழ்க்கையையும், பெரிய எதிர்பார்ப்புகளையும் அவனிடம் சொன்னேன். அவன் சீமாட்டியின் கதையை எனக்கு விரிவாகச் சொன்னான்.

கதை இதுதான்:

''மிஸ் ஹாவிஷம் பெரிய செல்வந்தரின் குடும்பத்தில் பிறந்தவள். இளமையிலேயே பெற்றோரை இழந்தாள். சிறு வயது முதலே செல்வச் செருக்கோடு வளர்ந்தாள். தன் குடும்ப நண்பர் ஒருவரது மகன் மீது அவள் அன்பு செலுத்தினாள். திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டாள். அவன் தீய பழக்கங்கள் கொண்டவன். ஆகவே அவன் வேண்டாம் என்று நண்பர்கள் அறிவுரை கூறினர். சீமாட்டி பிடிவாதமாக இருந்தாள். யாருடைய அறிவுரையும் அவளுடைய காதில் ஏறவில்லை.

''திருமண நாள் வந்தது. பெண்ணின் தோழிகள், பரிசுகள், ஆடை, ஆபரணங்கள், விருந்து — எல்லாம் தயாராக இருந்தன. கல்யாணப் பெண்ணும் தோழிகளும் காத்திருந்தனர்; காத்திருந்தனர்; காத்திருந்தனர். ஆனால், மாப்பிள்ளை வரவே இல்லை! அவனிடமிருந்து ஒரு கடிதம் மட்டும் வந்தது. அப்புறம் அவனைப் பற்றிய தகவலே இல்லை.

அந்த அதிர்ச்சியில் சீமாட்டி நோயுற்றாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு உடம்பு குணமானாலும், அவள் மாளிகையிலிருந்து வெளியில் வரவே இல்லை. அன்று முதல் அவள் கொடூரமாக மாறிவிட்டாள். தான் ஒரு கொடிய ஆடவனிடம் அடைந்த கஷ்டத்திற்காக அவள் ஆண் குலத்தையே வஞ்சம் தீர்த்துக் கொண்டிருக்கிறாள். எஸ்டெல்லா என்னும் வளர்ப்புமகள் மூலம் எல்லோரையும் பழிக்குப் பழி வாங்குகிறாள்.''

பகட்டான ஆடைகளை அணிந்து ஒய்யார வாழ்க்கை வாழும் லண்டன் நகரச் சீமான்களின் சமூகத்தில் நானும் ஒருவனாகச் சேர்ந்து கொண்டேன். எனக்குப் பணம் தேவைப்படும் போதெல்லாம் மிஸ்டர் ஜாகர்சைச் சந்தித்துப் பெற்றுக் கொண்டேன். அவர்தான் எனக்குக் காப்பாளராக இருந்தார். பாக்கெட்டின் அப்பாவிடம் முறைப்படி கல்வி பயின்றேன்.

என்னை ஆதரித்த கொடை வள்ளலின் பெயரைச் சொல்லும்படி மிஸ்டர் ஜாகர்சிடம் நான் பலமுறை வேண்டினேன். ''நீ இப்போது ஒன்றும் கேட்காதே. தகுந்த சமயம் வரும்போது அவரே உன்னிடம் வருவார்'' என்று அவர் பதிலளித்தார்.

என்னைப் பார்ப்பதற்காக அத்தான் ஒருமுறை லண்டனுக்கு வந்தார். என்னுடைய பழைய பழக்கவழக்கங்களெல்லாம் போய், நான் முற்றிலும் ஒரு லண்டன் வாசியாக மாறியிருந்தேன். அன்போடு என்னைப் பார்க்க வந்த கிராமவாசியான அத்தானைக் கண்டு நான் அவமானமடைந்தேன். அவருடைய வருகை எனக்குத் தொந்தரவாகப்பட்டது. ஆனால், பாக்கெட் நிலைமையைச் சமாளித்து, அத்தானை அன்போடு உபசரித்தான்.

என்னுடைய இருபத்தொன்றாம் பிறந்த நாளன்று நான் மிஸ்டர் ஜாகர்சைச் சந்தித்தேன். என்னுடைய வளர்ப்புத் தந்தை பிறந்த நாள் பரிசாக எனக்கு ஐந்நூறு பவுன்களை அனுப்பியுள்ளார் என்றார். மேலும், ஐந்நூறு பவுன்களைக் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளார் என்றும், வயதுக்கு வந்து விட்டதால், இனிமேல் நானே அந்தத் தொகையைப் பெற்றுச் செலவு செய்யலாம் என்றும் வக்கீல் கூறினார். என் வளர்ப்புத் தந்தையின் பெயர் இன்னும் ரகசியமாகவே இருந்தது. எனக்குப் பரிசாக வந்த தொகையை முன் பணமாகக் கட்டி என் அன்புத் தோழனை பாக்கெட்டுக்கு ஒரு நல்ல வேலையை வாங்கிக் கொடுத்தேன்.

ஒருநாள் இரவு, முரட்டுத் துணியும், விகார முகமும் படைத்த ஒரு முதியவன் என்னைப் பார்க்க வந்தான். அவனை யாரென்று எனக்கு முதலில் அடையாளம் தெரியவில்லை. விளக்கு வெளிச்சத்தில் பார்த்தேன். அவன் வேறு யாருமல்ல; சதுப்புநிலக் கல்லறையில் அநேக ஆண்டுகளுக்கு முன்னால் நான் உதவி செய்த அதே கைதிதான்! அவன் பேசியதிலிருந்து




எனக்கு வளர்ப்புத் தந்தையாக இருந்து பொருளுதவி செய்து வருவது அவன் தான் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டேன்!

அந்த முரட்டுக் குற்றவாளியிடம் பண உதவி பெற்று, நான் வாழ்க்கையில் உயர்ந்துள்ளேன் என்ற உண்மை எனக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அந்தக் கைதி மேலும் பேசினன்:

''நான் செய்த குற்றத்திற்காக எனக்குத் தீவாந்திர சிட்சை கிடைத்தது. நான் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டேன். அங்கு ஆட்டு மந்தைகளை வளர்த்தேன். பெரிய பணக்காரன் ஆனேன். இருந்தாலும், அன்று கல்லறையில் நீ எனக்குச் செய்த உதவியை மறக்கவில்லை. ஆகவே, எனக்கு வாழ்க்கையில் கிடைக்காத வசதிகளை எல்லாம் உனக்குக் கிடைக்க ஏற்பாடுகள் செய்தேன். என் வளர்ப்பு மகனை உன்னை ஒரு தரம் கண்ணாரப் பார்ப்பதற்காகவே நான் இவ்வளவு தூரம் இங்கிலாந்துக்கு வந்துள்ளேன். தீவுக்கு அனுப்பப்பட்ட நான், மீண்டும் இங்கிலாந்துக்குத் திரும்பியதைப் போலீசார் அறிந்தால், என்னைப் பிடித்துச் சட்டப்படி தூக்கில் போடுவார்கள். என்னை இங்கு இன்னொரு ஆபத்தும் தொடருகிறது. நீதான் காப்பாற்ற வேண்டும்.''

என் மனத்துள் ஒரு பூகம்பம் ஆடியது. எரிமலை சீறியது. சீமாட்டி, எஸ்டெல்லா ஆகியோரைப் பற்றி நான் கட்டியிருந்த மனக்கோட்டைகள் இடிந்து சரிந்தன. என்னுடைய பெரிய எதிர்பார்ப்புகளுக்கும், அந்தச் சீமாட்டிக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பது வெட்ட வெளிச்சமாகியது. அந்த முரட்டுக் கைதியை எனக்குப் பிடிக்காவிட்டாலும், நன்றிக் கடனுக்காக நான் அவனைக் காப்பாற்றத் தீர்மானித்தேன்.

கைதி தன் பேச்சைத் தொடர்ந்தான்: ''என் இயற்பெயர் ஏபெல் மெக்விட்ச். என்னை மறைத்துக் கொள்வதற்காக நான் பிரோவிஸ் என்ற புதிய பெயருடன் இங்கு வந்துள்ளேன். எனக்குக் காம்பீசன் என்ற விரோதி உண்டு. அன்று கல்லறையில் பயங்கர முகத்தோடு ஒருவனைப் பார்த்தாயே, அவன்தான் காம்பீசன். அவன் என்னை அழிப்பதென்றே திட்டமிட்டிருக்கிறான். எப்போதும் என்னைத் தொடருகிறான். அவனிடமிருந்தும் நான் தப்பியாக வேண்டும்.''



பிரோவிசை என்னுடைய அறையிலேயே தங்க வைத்தேன். அவனுக்கு எல்லா உதவிகளையும் செய்து காப்பாற்றுவதாக உறுதி அளித்தேன். திருமண தினத்தன்று அந்தச் சீமாட்டியைக் காக்க வைத்து விட்டு மறைந்து போன மாப்பிள்ளையின் பெயரும் காம்பீசன் என்று என் நண்பன் கூறியது என் நினைவுக்கு வந்தது.

நான் எல்லா உதவிகளையும் அவனிடமிருந்து பெறுவது போல என்னைப் பல விதங்களிலும் நம்ப வைத்தாளல்லவா? அந்தச் சீமாட்டியின் மீது எனக்கு ஆத்திரமாக வந்தது. என் ஆத்திரம் தீர அவனிடம் இரண்டு வார்த்தை பேசுவதற்காகப் புறப்பட்டேன்.

நான் போன வேளை சரியாக இல்லை. ஒரு விபத்து ஏற்பட்டு அந்த இருண்ட மாளிகை தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. நான் எவ்வளவோ முயன்றும் அந்தச் சீமாட்டியைக் காப்பாற்ற முடியவில்லை. மாளிகை அழிந்தது. சீமாட்டி மாண்டாள். அந்தச் சமயத்தில் எஸ்டெல்லா வெளியூர் போயிருப்பதாக அறிந்தேன்.

நான் லண்டன் திரும்பியதும் பல தகவல்கள் கிடைத்தன. பிரோவிசைத் தொடர்ந்து காம்பீசன் என்னும் கைதியும் லண்டனுக்கு வந்துள்ளதாகவும், அவன் பிரோவிசைக் கொல்லத் தருந்த நேரத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் அறிந்தேன். என் வளர்ப்புத் தந்தையை எப்படிக் காப்பாற்றுவது என்று பாக்கெட்டுடன் கலந்து ஆலோசித்தேன்.

பாக்கெட், பிரோவிசை ரகசியமாகப் பிரான்சுக்கு அழைத்துச்செல்வது. பிறகு, நான் அவர்களை அங்கு போய்ச் சந்திப்பது என்று திட்டம் தீட்டினோம். எங்களுடைய திட்டம் காம்பீசனுக்கு எப்படியோ தெரிந்து விட்டது.

பிரோவிசை நாங்கள் படகில் ஏற்றும் போது, காம்பீசன் அவனைப் பிடித்து விட்டான். இருவரும் நீரில் குதித்துக் கடுமையாகப் போரிட்டனர். போரில் காம்பீசன் இறந்தான். பிரோவிஸ் காயத்தோடு தப்பினாலும், போலீஸிடம் சிறைப்பட்டான். ஆனால், விசாரணை தொடங்கு முன்பே அவன் சிறையில் இறந்து போனான்.


இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு என் மனம் மிகவும் சோர்வுற்றது. நான் நோய்வாய்ப்பட்டேன். செய்தி அறிந்த என் அத்தான் கிராமத்திலிருந்து வந்து எனக்கு உறுதுணையாக இருந்தார். அவரின் உண்மையான அன்பு — உள்ளத்தை உணர்ந்து நெகிழ்ந்து போனேன். என் உடல்நலம் சீரானதும் பாக்கெட் பணி ஆற்றும் நிறுவனத்திலேயே நானும் வேலைக்குச் சேர்ந்தேன். நன்றாக உழைத்து அந்த நிறுவனத்தில் ஒரு கூட்டாளி ஆனேன்.

நீண்ட நாட்கள் கழித்து அத்தானைப் பார்க்கப் போனேன். அவர் தம்முடைய மகனுக்குப் பிப் என்று பெயர் வைத்திருந்தார். பிறகு, அங்கிருந்து காலஞ்சென்ற சீமாட்டியின் மாளிகைக்குச் சென்றேன். தீவிபத்தில் உண்டான சேதத்தோடு அது அலங்கோலமாக இருந்தது. தோட்டத்தில் நடந்தேன்.

அநேக ஆண்டுகளுக்கு முன்னால் சிறு வயதில் எஸ்டெல்லாவுடன் அங்கு விளையாடியது நினைவுக்கு வந்தது. எதிர்பாராத விதமாக எஸ்டெல்லாவும் அங்கு வந்து சேர்ந்தாள். பல கசப்பான அனுபவங்களுக்குப் பிறகு அவள் முற்றிலும் மாறியிருந்தாள். அவள் விழிகளில் கர்வம் நீங்கிக் கருணை குடிகொண்டிருந்தது. பழைய கொடுமைகளுக்காக அவள் வருந்தி மன்னிப்புக் கேட்டாள். நான் என்றைக்குமே அவளுடைய உண்மையான நண்பன் என்று சொன்னேன். பிறகு, நாங்கள் பிரியவே இல்லை. திருமணம் செய்து கொண்டோம்.

Charles dickens எழுதிய **Great Expectations** என்ற ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது.

புதிர் 33 :



திருக்குறள் புதிர்

புதிர் 34 :



மேலே இருக்கும் படங்களில் எந்தப் படம் எந்தக் குறளை நினைவூட்டுகிறது? யோசித்துப் பாருங்கள். தனியாக ஒரு தாளில் எழுதுங்கள். பிறகு 73ம் பக்கத்தைப் புரட்டிப் பாருங்கள்.

மாவட்ட வினா விடை



புவனை கலைச்செழியன்

கேள்வி கேட்பவர்: புவனை கலைச்செழியன்.

பங்கு பெறுவோர்: பூ. செந்தில்குமார்,
கோ. பாக்கியராஜ்,
வி. அன்னாள் சௌந்தர ராணி.

புவனை கலைச்செழியன்: தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன, தெரியுமா?

செந்தில்: ஆர் என்பது ஆத்தி மரத்தைக் குறிக்கும் சொல். ஆத்தி மரங்கள் காடுகளாக அடர்ந்த பகுதி ஆர்க்காடு எனப்பட்டது. முஸ்லிம்கள் ஆண்ட இந்தப் பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றி வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு என இரண்டாகப் பிரித்தனர். நம் மாவட்டம் தென் ஆர்க்காடு.

புவனை: அருமையான பதிலைச் செந்தில் சொன்னான். நம் மாவட்டத்தின் தலைநகர் எது?

அன்னாள்: கடலூர்.

புவனை: கடலூருக்கும் பெயர்க் காரணம் உண்டு, தெரியுமா?

பாக்கியராஜ்: கெடிலம் ஆறும் உப்பனாறும் ஒன்று கூடுமிடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. அதனால் இது கூடலூர் என்று அழைக்கப்பட்டு, நாளடைவில் கடலூர் என்று மாறிவிட்டது.

புவனை: விஷயத்தை நன்றாக அறிந்து வைத்திருக்கிறாயே! கடலூருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.

அன்னாள்: அது ஒரு துறைமுகம்.

புவனை: அழகான பதில் அன்னாள் சொன்னது. வேறு சில துறைமுகங்களும், இம்மாவட்டத்தில் உள்ளன. அவைகளைச் சொல்லுங்கள், டார்க்கலாம்.

செந்தில்: பரங்கிப் பேட்டை, மரக்காணம்,

புவனை: சரியாகப் பதில் சொன்னாய். நம் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை வட்டங்கள் உள்ளன?

பாக்கியராஜ்: பதின்மூன்று.

புவனை: சபாஷ்! நம் மாவட்டத்திலுள்ள சிதம்பரம் உலகப் புகழ் பெற்றது. என்ன காரணம்?

பாக்கியராஜ்: நடராஜர் கோயில்.

புவனை: பலே! நடராஜர் நடனக்கலையின் சின்னம். சிவபெருமான் நடனம் புரிந்த ஐந்து இடங்களுள் சிதம்பரமும் ஒன்று. பொற்சபை அல்லது கனகசபை என்றும் இந்த ஊரைச் சொல்வர்.

அன்னாள்: சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்கூட இருக்கிறதே!

புவனை: ஆம், கொடைவள்ளல் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் நிறுவிய கல்விக் கூடட இது. சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அடுத்து தமிழகத்தில் பழைமை வாய்ந்த, புகழ் மிக்க நிறுவனம்... சிதம்பரம் கோயிலின் கருவறைக்குப் பொன்னால் கூரை வேய்ந்தார் ஒரு மன்னர். அவர் பெயர் தெரியுமா?

பாக்கியராஜ்: பராந்தக சோழன்.

புவனை: ஆம். விஜயநகரை ஆண்ட கிருஷ்ணதேவ ராயரும் இக்கோவிலுக்குத் திருப்பணிகள் செய்திருக்கிறார். ஆலயத்தின் வடக்குக் கோபுரத்தை அவர் கட்டியதாகவும் கூறுவர். ஆருத்திரா தரிசனம் மிகவும் பிரபலமாக நடைபெறும்

திருவிழா. தஞ்சை மாவட்டத்தை விட மிகுதியாக நெல் விளையும் பூமியைக் கொண்டது சிதம்பரம் வட்டம். நம் மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரியைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்களே!

அன்னுள்: அது வீராணம் ஏரி.

புவனை: சென்னைக்கு இந்த ஏரியி லிருந்து குழாய் மூலம் குடிநீர் கொண்டு போகும் திட்டம்கூட இருந்தது. ஆனுல், அது கைவிடப் பட்டு விட்டது. காட்டுமன்னர் கோயில் வட்டத்தில் அரபுமொழிக் கல்லூரி இருக்கிறது. அந்த ஊரின் பெயர்...?

பாக்கியராஜ்: லால்பேட்டை.

புவனை: சரியாகச் சொன்னுய். அந்த ஊரில் விளையும் வெற்றிலை விசேஷ மானது. அகத்திக் கீரையும் அங்கு பயிரிடப்படுகிறது. நம் மாவட்டத் தில் வியாபாரத்தில் சிறந்த நகரம் எது?

அன்னுள்: பண்ணுருட்டி.

புவனை: பண்ணுருட்டியின் மற்ற சிறப் புக்கள் என்னென்ன?

பாக்கியராஜ்: முக்கனிகளுள் ஒன்ருகிய பலாப்பழம் இங்கு பயிராகிறது. பண்ணுருட்டிப்பொம்மைகள்விசேஷ மானவை.

அன்னுள்: இங்கு முந்திரி மிகுதியாக விளைகிறது. அதனுல் முந்திரிப் பருப்புத் தொழிற்சாலை நிறுவியுள் ளனர்.

புவனை: இருவரும் சிறப்பாகப் பதில் சொன்னீர்கள். இந்த மாவட்டத் தில் பிரசித்தி பெற்ற வேறு கோயில்கள் எவை?

செந்தில்: மயிலம் முருகன் கோயில்.

பாக்கியராஜ்: திருப்பாதிரிப்புலியூர் பாடலீஸ்வரர் ஆலயம். இந்தக் கோயிலில் கோடையில் நடை பெறும் வெள்ளித் தேர் உற்சவம் சிறப்பானது.

அன்னுள்: விருத்தாசலம் நகரில் உள்ள விருத்தகிரிஸ்வரர் அல்லது பழமலை நாதர் ஆலயம். அது மணிமுத் தாற்றின் கரையில் உள்ளது.

புவனை: தென் ஆர்க்காடு மாவட்டத் தின் தொழில் நகரம் என்று எதைச் சொல்கிருேம்? ஏன்?

மூவரும்: (ஒரே குரலில்) நெய்வேலி. அங்கு நிலக்கரிகிடைப்பதால்அப்படிச் சொல்கிருேம்.

புவனை: பழுப்பு நிலக்கரிக்கு வேறு பெயர்?

மூவரும்: லிக்னைட்.

புவனை: கெட்டிக்காரப் பிள்ளைகள்! நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறது. அப்புறம்...?

செந்தில்: அங்கே அனல் மின் நிலையம் உள்ளது.

பாக்கியராஜ்: உரத் தொழிற்சாலை ஒன்றும் இருக்கிறது.

புவனை: ஜோர்! ஜோர்! நம் மாவட் டத்திலிருந்து ஆந்திர மாநிலம் வரை நீண்ட கால்வாய் ஒன்று செல்கிறது. அதன் பெயர் யாருக்குத் தெரியும்?

பாக்கியராஜ்: பெத்தகஞ்சம்.

புவனை: தவறு. கால்வாய் போய்ச் சேரும் இடம் அது. பெயர் பக்கிங் ஹாம் கால்வாய். இக்கால்வாயில் படகுகள் மூலம் உப்பு, தேங்காய், நெல் முதலியன சென்னைக்கு அனுப்பப்படுகின்றன... மரங்கள் மிக நீண்ட காலம் வளர்ந்து, முதிர்ந்து, கல்லாக மாறிவிடும் அதி சயத்தைக் கேள்விப்பட்டிருக்கிறீர் களா? திண்டிவனம் வட்டத்தில் அவ்வாறு கல்லாய் மாறிய மரங்கள் உள்ளன. கல்லால மரம் என்று அவை அழைக்கப்படுகின்றன. கல் லால மரம் நிறைந்த அந்த ஊரின் பெயர்...?

மூவரும்: (தயக்கம் காட்டுகின்றனர்.)

புவனை: திருவக்கரை. போகட்டும். கடையெழு வள்ளல்களில் ஒருவர் திருக்கோவிலூரை ஆண்டவர். அவர் பெயரென்ன, பாக்கியராஜ்?

பாக்கியராஜ்: பாரி.

அன்னுள்



பாக்கியராஜ்



செந்தில்



புவனா: பாரி இல்லை. அந்த ஊருக்கு வெகு அருகில் வாழ்ந்து கொண்டு அவர் பெயர்தெரியவில்லையே உனக்கு! மலையமான் திருமுடிக்காரி தான் அந்த மன்னர்.

செந்தில்: பாரியின் பெண்கள் அங்கவை, சங்கவை இருவருக்கும் ஔவை மணம் முடித்து வைத்ததும் இந்த ஊர்தான்.

புவனா: அருமையாகச் சொன்னாய் செந்தில். இவ்வூருக்கு வேறு சிறப்புகளும் உண்டு; மத்துவத் துறவி ரகோத்தம சுவாமிகளின் சமாதி பிருந்தாவனம் என்ற பெயரில் அமைந்துள்ளது. ஞானானந்த சுவாமிகள் நிறுவிய தபோவனம் இங்கு இருக்கிறது. பெண்ணையாற்றில், 'கபிலர் குன்று' என்ற பெயரில் குன்று ஒன்று உச்சியில் சிறு கோயிலுடன் விளங்குகிறது. அந்தக் குன்று அவ்வாறு அழைக்கப்படுவது ஏன் தெரியுமா?

பாக்கியராஜ்: புலவர் கபிலர் இக்குன்றில் வடக்கு நோக்கி இருந்து உயிர் நீத்ததால், கபிலர் குன்று என்று இதை அழைக்கிறார்கள். சைவ சமய ஆசாரியர்களான திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அவர்களுள் இரண்டு பேர் நம் மாவட்டத்தில் பிறந்தவர்கள். அவர்கள் யார், யார்? எங்கெங்கே பிறந்தார்கள்?

மூவரும்: (மௌனம்).

புவனா: பெருமைக்குரிய இந்த விவரம் தெரியாமலிருப்பது நல்லதல்ல. அப்பர் என்ற திருநாவுக்கரசர் திருவாமூரில் பிறந்தார். சுந்தரர் திருநாவலூர் என்னும் ஊரில் தோன்றினார்... திருவெண்ணெய் நல்லூர், திருக்கோயிலூரை அடுத்து உள்ள ஊர். அதன் சிறப்பு என்ன, தெரியுமா?

செந்தில்: கம்பரை ஆதரித்து ராமாயணம் பாடச் செய்த சடையப்ப வள்ளல் பிறந்த ஊர் இது.

புவனா: அபாரம், நம் மாவட்டத்திலுள்ள ரயில்வே சந்திப்புகளுள் பெரியது விழுப்புரம். அதைத் தலைநகராகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக இருக்கிறது. அம்மாவட்டத்திற்கு என்ன பெயர்?

செந்தில்: வள்ளலார் மாவட்டம்.

புவனா: ஆமாம். வள்ளலாரின் இயற்பெயர் இராமலிங்க அடிகள். அவர் பெருமை கூறும் ஊர் எது? ஏன்?

செந்தில்: வடலூர். அங்கே அவர் நிறுவிய சத்திய ஞான சபையும் தர்ம சாலையும் உள்ளன.

புவனா: உண்மை. அவர் போதித்த கொள்கை சுத்த சமரச சன்மார்க்கம். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய இராமலிங்கர் பிறந்த இடம் மருதூர்; முக்தி பெற்ற ஊர் மேட்டுக்குப்பம்... நம் மாவட்டத்தில் மன்னர் ஒருவர் ஆண்ட கோட்டை இன்றும் உள்ளது. அந்த இடம் எது? அந்த மன்னர் யார்?

அன்னாள்: செஞ்சிக்கோட்டை. அதை ஆண்ட மன்னர் தேசிங்குராஜன். அவரைப் பற்றிய பாடலைத் துவக்கப் பள்ளியில் படித்திருக்கிறோம். செஞ்சிக்கு இன்பச் சுற்றுலாவும் சென்று வந்திருக்கிறோம்.

புவனா: அப்பரும் சுந்தரரும் பக்தி இலக்கியம் படைத்தனர். இராமலிங்க அடிகள் அருட்பா பாடினார். வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார் ஆகிய இருவரையும் போல் தென்பாதி டி. எஸ். கனக சபாபதி பிள்ளை என்ற நாவலாசிரியர் ஒருவரும் நம் மாவட்டத்தில் இருந்தார். தற்சமயம் சிறந்த எழுத்தாளராக விளங்கும் ஒருவர் இந்த மாவட்டத்துக்காரர். அவர் பிறந்த ஊர் எது?

பாக்கியராஜ்: ஜெயகாந்தன். கடலூரில் பிறந்தவர்.

புவனா: ஆகா! சிறந்த தமிழறிஞரான காலம் சென்ற ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களும் நம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். ஔவையார்குப்பம் அவரது பிறப்பிடம்... தற்போது விமானம் இறங்காத விமான நிலையம் எங்கே இருக்கிறது?

அன்னாள்: உளுந்தூர்ப்பேட்டையில். அது இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்டது.

புவனா: மிகவும் சரியான விடை. 1954-ல் பாரதப் பிரதமர் பண்டித நேருவையும், 1961-ல் ருஷ்யக் குடியரசுத் தலைவர் பிரஷ்னேவையும் இறக்கி இருமுறை பயன்பட்டிருக்கிறது. உளுந்தூர்பேட்டையைச் சாலைப் போக்குவரத்துச் சந்திப்பு என்று கூறலாம்... நம் மாவட்டத்தில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகத்தின் பெயர் என்ன? அது எங்கே அமைந்துள்ளது?

பாக்கியராஜ்: தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், விழுப்புரத்தில் அது அமைந்துள்ளது.

புவனா: தென் ஆர்க்காட்டில் மழை பெய்யும் காலம் எது? அதிக மழை எங்கே பெய்கிறது?

அன்னுள்: வடகிழக்குப் பருவக்காற்று அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நம் மாவட்டத்திற்கு மழையைத் தருகிறது. அதிக மழை பெறும் இடம் 'பரங்கிப்பேட்டை'.

புவனா: பரங்கிப்பேட்டையில் மீன் பிடிக்கும் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான உயிரியல் ஆராய்ச்சி நிலையம் (Biological Research Station) அங்கு உள்ளது. நம் மாவட்டத்தில் மூன்று வகையான மண்கள் உள்ளன. அவை யாவை?

செந்தில்: கரிசல் மண், செம்மண், மணல் கலந்த மண்.

புவனா: தென் ஆர்க்காட்டின் விளை பொருட்கள் என்னென்ன?

பாக்கியராஜ்: நெல், கம்பு, கேழ்வரகு, கரும்பு, தினைவகை, பருப்பு, எள், ஆமணக்கு, மிளகாய், நிலக்கடலை.

புவனா: இவற்றுள் மிகுதியாக விளைபவை.

செந்தில்: கரும்பும், வேர்க்கடலையும்.

புவனா: நம் மாவட்டத்தின் தொழில் வளம் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!

அன்னுள்: கடலூரில் நிலக்கடலை எண்ணெய்த் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை, நெய்வேலியில் லிக்னோ கரித் தொழிற்சாலை, வடலூரிலும், விருத்தாசலத்திலும் பீங்கான் தொழிற்சாலைகள், விக்கிரவாண்டி, சின்னசேலம் ஆகிய இடங்களில் நூற்பு ஆலைகள் உள்ளன.

செந்தில்: நெல்லிக்குப்பம், பெரிய செவலை, பெண்ணாடம் (எறையூர்), மூங்கில்துறைப்பட்டு ஆகிய ஊர்களில் சர்க்கரைத் தொழிற்சாலை உள்ளது.

பாக்கியராஜ்: விழுப்புரத்தில் மாட்டு எலும்பு உரத் தொழிற்சாலை ஒன்றும், ரயில்பெட்டி, எஞ்சின் ஆகியவற்றைச் சீர் செய்யும் தொழிற்சாலை ஒன்றும், வனஸ்பதி தொழிற்சாலையும் இருக்கின்றன.

புவனா: தென் ஆர்க்காடு எந்த எந்தப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறது?

அன்னுள்: நெல், அரிசி, சர்க்கரை, இரும்பு, உலர்ந்த மீன், உப்பு...

பாக்கியராஜ்: நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, புண்ணாக்கு, வெல்லம்...

செந்தில்: மணிலா எண்ணெய், எள் ளெண்ணெய் வித்துக்கள், பீட்டாய் வகைகள்.

புவனா: நெசவுத் தொழில் எங்கெங்கே நடைபெறுகிறது?

அன்னுள்: புவனகிரி, குறிஞ்சிப்பாடி, கண்டாச்சிபுரம்...

புவனா: சிறுவந்தாடு, மணலூர்ப் பேட்டை ஆகிய இடங்கள் பட்டு நெசவுக்குப் பெயர் போனவை... நம் மாவட்டத்தின் மக்கள் தொகை என்ன?

பாக்கியராஜ்: 36 லட்சம்.


புவனா: மாவட்ட கிராமங்களில் நடைபெறும் சிறு தொழில்கள் யாவை?

அன்னுள்: பாய் பின்னுதல், மண் பாண்டங்கள் செய்தல், உப்பு எடுத்தல்...

செந்தில்: பொம்மைகள் செய்தல், வெல்லம் காய்ச்சுதல், கைத்தறி நெசவு, செங்கல் தயாரித்தல்.

புவனா: பல வகையிலும் வளர்ச்சி பெற்று வரும் தென் ஆர்க்காடு நம் சொந்த மாவட்டம் என்று நினைக்கும்போது உங்களுக்கு எத்தனை மகிழ்ச்சி! சிறப்பாக விடை கூறிய உங்கள் மூவருக்கும் வாழ்த்துக்கள்.

மூவரும்: நன்றி. வணக்கம்.



பிருந்தாவனக் கதையரங்கம்



கண்ணாடி

சுரேஷ் எப்பொழுதும் 'சிடுசிடு' என்றிருப்பான். யார் என்ன கேட்டாலும் நேராய்ப் பதில் சொல்ல மாட்டான். பொறுமை சிறிதும் கிடையாது.

இதனால் பள்ளியிலும், வீட்டிலும் அவனை யாருக்கும் பிடிக்கவில்லை.

சுரேஷ் எந்நேரமும். 'கடுகடு'வென்றிருப்பதால், அவன் முகம் சுட்ட அப்பளம் போல இருக்கும்!

ஒருநாள்,

சுரேஷின் அம்மா, அப்பா, அக்கா, அண்ணன் எல்லோரும் ஒரு 'ரகசிய மாநாடு' கூட்டிக் 'கிசுகிசு'த்துக்கொண்டார்கள்.

சுரேஷ் சயன்ஸ் நோட்டு, பென்சில், புத்தகம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு அண்ணனிடம் வந்தான்.

''அண்ணா, இந்தப் படத்தைப் போட்டுத் தா!'' என்றான் அதிகாரமாக.

அண்ணன், ''போடா, போ, எனக்கு ஏகப்பட்ட வேலையிருக்கு! என்னால படமெல்லாம் போட முடியாது. நீ பெரிய கெட்டிக்காரனாச்சே! நீயே போட்டுக்கோ'' என்றான் -வெடுவெடுவென்று.

சுரேஷ் வெற்றிகரமாய்ப் பின்வாங்கினான்.

மெதுவாக அக்காவிடம் போனான்.

''அக்கா! அக்கா! இந்தப் படத்தைப் போட்டுத் தாக்கா!'' என்றான் சிறிது கொஞ்சலாக.

கோலம் சரியாய் வரைய வராததால் கோபத்துடனிருந்த அக்கா, ''சீச்சீ! போடா அந்தப் பக்கம். நான் கிடந்து திண்டாடுறேன்! இவன் வேறே'' என்றாள்.

சுரேஷ் நோட்டுப் புத்தகம் எல்லாவற்றையும் 'மூட்டை கட்டி' வைத்துவிட்டுச் சமையலறைக்குப் போனான்!

''அம்மா! ஏதாவது திங்கிறதுக்குத் தாம்மா!'' என்றான்.

''எந்நேரமும் என்ன தீனி! பிடுங்காம அந்தண்டை போ. 'வேலைக்காரி வரலை, போய்ப் பாருடா'ன்னா மாட்டேன்னுட்டே! என்னாலே ஒண்டியா வேலை செய்ய முடியல்லே'' என்று அம்மா 'முணுமுணு'க்க ஆரம்பித்துவிடவே, விட்டால் போதும் என்று ஓடி வந்துவிட்டான் சுரேஷ்.

அதோ, அப்பா வந்து விட்டாரே!

''அப்பா, நான் ஸ்கெட்ச் பாக்கெட் கேட்டேனே! வாங்கிட்டு வந்தீங்களா?'' ஆவலுடன் வினவினான்.

''ச், மாசக் கடைசி! பத்து ரூபாய்க்கு நான் எங்கே போவேன்? குடும்பக் கஷ்டம் தெரியாமே என்ன பிள்ளை நீ!'' என்று அப்பா தொடர் ராமாயணம் வாசிக்க...

நைஸாய் நழுவினான் சுரேஷ்.

வாசற்படியில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

'எல்லோரும் 'சிடு, சிடு' என்று எரிந்து விழுந்தால், நமக்கு எப்படி இருக்கு? அது மாதிரிதானே நாமும் செய்கிறோம்! நாம செய்யறதையே

மத்தலங்களும் திருட்பிச் செய்தால் நல்லாவே இல்லையே!'

என்றெல்லாம் தனக்கெதிரே 'சறுப்புச் சட்டை' அணிந்த தன் மனச்சாட்சி பேசுவது போலிருந்தது சுரேஷுக்கு.

விளக்குப் போட்டதும் பாடம் படிக்க வந்தமர்ந்த சுரேஷ், 'இனிமேல் யார் என்ன கேட்டாலும் பொறுமையாகப் பதில் சொல்லுவேன்! எரிஞ்சு எரிஞ்சு விழமாட்டேன்!' என்று மனசுக்குள் உறுதி எடுத்துக் கொண்டான்.

திருந்திய சுரேஷைக் கண்டு 'திட்டம்' பலித்ததென மகிழ்ந்தனர் குடும்பத்தினர்.

ஆர். நாச்சியப்பன் (75) தென்னூர்: திருச்சி.

நல்லதொரு நாடகம்

அன்று விடுமுறைநாள். வயிற்று வலியால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தன் நண்பரான ராமசாமியைப் பார்க்கச் சென்றார், தியாகராஜன்.

ஆஸ்பத்திரியில் ராமசாமியும் தியாகராஜனும் பேசிக்கொண்டு இருந்த போது, ராமசாமி தியாகராஜனிடம் ரூபாய் ஆயிரம் ஆபரேஷனுக்காகத் தருமாறும், உடம்பு சரியானதும் அலுவலகத்திலே கடன் பெற்றுத் திருப்பித் தருவதாகவும் கூறினார். தியாகராஜனும் உயிர் நண்பரான ராமசாமிக்குச் சில இடங்களில் பணம் புரட்டித் தந்தார். மறுநாள் தியாகராஜன் ஆபீஸ் வேலை விஷயமாக ஒரு மாதம் வெளியூர் சென்றார்.

தியாகராஜன் ஊர் திரும்பியதும் ராமசாமி குணமடைந்ததைக் கேட்டு மகிழ்ந்தார். நேரில் போய்ப் பார்த்தார். அப்போது, தான் கொடுத்த ரூபாய் ஆயிரத்தைத் திருப்பித்தருமாறு கேட்டார்.



''நானா! உன்னிடம் பணம் வாங்கினேனா! எப்போது?'' என்று அடித்துக் கூறினார் ராமசாமி. இதைக் கேட்ட தியாகராஜன் திடுக்கிட்டார். 'பணத்திற்காக நட்பையே தியாகம் செய்கின்றானே!'' என வருத்தம் அடைந்து, தனக்குத் தெரிந்த ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் விவரத்தைக் கூறினார்.

இன்ஸ்பெக்டர், ''கவலைப்படாதீர்கள். உங்கள் பணத்தை நான் வாங்கித் தருகிறேன்'' எனக் கூறினார்.

மறுநாளே ராமசாமி உண்மையை ஒப்புக்கொண்டு ஆயிரம் ரூபாயைத் தியாகராஜனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

தியாகராஜன் ஆச்சரியப்பட்டு, போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் நடந்ததைக் கேட்டார், அவர் சொன்னார்: ''நான் ராமசாமிக்கு சிகிச்சையளித்த டாக்டரிடம் விவரத்தைக் கூறி, 'நீங்கள் ராமசாமியிடம், ''என்னய்யா, எனக்குக் கள்ள நோட்டைக் கொடுத்து ஏமாற்றிவிட்டாயே!'' என்று கேட்கும்படி சொன்னேன். டாக்டரும், அவ்வாறே செய்ய, ராமசாமி பயந்து, ''அந்தப் பணத்தை நான் தியாகராஜனிடம்தான் வாங்கினேன்'' என்று கூறிக் கொண்டிருக்கும்போது நான் சென்று விட்டேன். உடனே நான் ராமசாமியிடம், ''அது தியாகராஜன் கொடுத்த பணம்தானா? தியாகராஜனிடம் நீங்கள்பணம் வாங்கினீர்கள் என்பதை ஒப்புக்கொள்ளும்படி செய்யவே நானும், டாக்டரும் இப்படி நாடகமாடினோம். இனியும் தாமதம் செய்யாதீர்கள். பணத்தைத் தியாகராஜனிடம் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்'' என்று கூறினேன். உடனே உங்களைத் தேடிப் பணத்துடன் வந்துவிட்டார் ராமசாமி'' என்றார், இன்ஸ்பெக்டர்.

டி. ரமேஷ்பாபு (5937), கோவை—2.

திருந்திய அரக்கன்

முன்னொரு காலத்தில் மஞ்சளாபுரி என்னும் நாட்டை ஓர் அரக்கன் ஆண்டு வந்தான். அவன் பெயர் கதம்பன் என்பதாகும். அவன் பேராசைக்காரன்; கொடுமைக்காரன். எனவே, மக்கள் அவனை வெறுத்தனர். தனக்கு நிகர் எவருமில்லை என்ற இறுமாப்புடன் இருந்தான்.

அப்பொழுது இரு அரக்கர்கள் கதம்பனைவிட எல்லா வகையிலும்



சிறந்து விளங்கினார்கள். எனவே கதம்பன் அவர்கள் இருவரையும் அழித்து விட்டால், தனக்கு எதிராக எவரும் சிறந்து விளங்க மாட்டார்கள் என்று எண்ணி, தன் அமைச்சரிடம் தன் எண்ணத்தைக் கூறினான்.

அதற்கு அமைச்சர் கதம்பனிடம், ''மன்னர்பெருமானே! நீங்கள் அவர்களை மட்டும் அழித்தால் போதுமா? மற்றும் உள்ள எதிரிகள் அனைவரையும் அழிக்க வேண்டாமா? அதற்கு நீங்கள் ஒரு யாகம் நடத்துங்கள். வெற்றி கிடைக்கும்'' என்று கூறினார்.

இந்த யோசனையை ஏற்ற மன்னன் பதினாறு நாட்கள் ஒரு யாகம் நடத்தினான். முடிவில் யாக குண்டத்திலிருந்து காளிதேவி தோன்றி, ''மன்னா, உனக்கு வேண்டும் வரம் கேள்'' என்று கூறினாள். கதம்பன் மனம் மகிழ்ந்து, ''தாயே, என்னுடைய எதிரிகள் அனைவரையும் அழிக்க வேண்டும்'' என்று கூறினான்.

''மன்னா, உன் முதல் எதிரி உன்னுடைய பேராசையும், மற்றவர்களைக் கொடுமைப்படுத்தும் குணமும்தான். எனவே இவற்றை நான் முதலில் அழிக்கிறேன். பின்பு, உனக்கு எதிரிகள் தோன்ற மாட்டார்கள்'' எனக் கூறி கமண்டலத்தில் இருந்து தண்ணீரை எடுத்து மன்னன் மீது வீசினாள். மன்னனின் தீய குணமான பேராசையும், பிறரைக் கொடுமைப் படுத்தும் குணமும் அவனை விட்டு நீங்கின.

திருந்திய மன்னன் கதம்பன், 'என்னுடைய எதிரிகளை நானேதான் தேடிக் கொள்கிறேன்' என்று உணர்ந்து காளிதேவியிடம் மன்னிப்புக் கேட்டான். காளிதேவி அவனை வாழ்த்தி மறைந்தாள்.

இ. மு. தியாகராஜன் (6097) திருப்பத்தூர் (வ.ஆ.)

ஆயிரத்தில் ஒருவர்!

மாலை நான்கு மணியிலிருந்தே ''ராஜேஸ்வரி கல்யாண மண்டபம்'' மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ''இப்போதே இப்படியென்றால் விழா ஆரம்பிப்பதற்குள் எப்படிக் கூட்டத்தைச் சமாளிக்கப் போகிறோம்?'' என்று காவல் துறையினர் கவலைப்பட்டனர்.

அப்படியென்ன விசேஷம் அங்கே?

அன்று அங்கே பிரபல தொழில் அதிபரும் கொடைவள்ளலுமான ராஜசேகருக்குப் பாராட்டு விழா நடக்கப் போகிறது. அதனால்தான் அங்கு அத்தனை உற்சாகத்தை ஒவ்வொருவர் முகத்திலும் காண முடிந்தது.

சரியாக எட்டு மணிக்கு ராஜசேகரின் கார் மண்டபத்திற்குள் நுழைந்தது. ''அன்று போல் இன்றும் எவ்வளவு எளிமையாக இருக்கிறார்!'' என்று அனைவரும் வியப்போடு அவரைப் பார்த்துக் கொண்டிருக்கையில் எல்லோருக்கும் தம் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு மேடையில் ஏறி அமர்ந்தார் அவர்.

பலரும் அவரைப் பாராட்டிப் பேசினார்கள். மாலை அணிவித்தார்கள். கடைசியில் ராஜசேகர் பேசுவதற்காக எழுந்தார்: ''உங்கள் பாராட்டுக்கு என் நன்றி; 'தான் பாதி; தெய்வம் பாதி' என்பார்கள். கடவுள் மேல் பாரத்தைப் போட்டு நாம் பேசாமல் இருந்தால் எந்த முன்னேற்றமும் இராது. இது நான் கற்ற பாடம். உழைப்போடு ஆண்டவன் கருணையும் என் பக்கம் இருந்ததால் தான் இந்தக் குறுகிய இடைவெளியில், என்னால் இந்த நிலைக்கு உயர முடிந்தது.

''சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் வேலை தேடிப் பட்டணம் வந்தேன். ஒரு சின்ன வேலை கிடைத்துவிடும் போல் இருந்தது. ஆனால், அந்த வேலை கிடைக்கக் கல்வித் தகுதியோடு,





அன்று ஆயிரம் ரூபாய் கேட்டார்கள். மனமுடைந்து வீட்டிற்கு வந்தேன. பொறுமையுடன் எல்லாவற்றையும் கேட்ட என் தாய், தான் சேர்த்து வைத்திருந்த ஆயிரம் ரூபாயை என்னிடம் தந்தார். ''மகனே! பணத்தைக் கொடுத்து வேலையை வாங்காதே! இந்தப் பணத்தைப் போட்டு ஒரு வியாபாரத்தையோ தொழிலையோ துவக்கு'', என்று கூறி வாழ்த்தினார்.

''அவருடைய வாக்கை வேத வாக்காக எடுத்துக்கொண்டு ஒரு சிறு தொழில் ஆரம்பித்தேன். அந்த ஆயிரம் ரூபாயில் ஆரம்பித்த தொழில்தான் இன்று என்னைக் கோடீஸ்வரனுக்கி இருக்கிறது. அன்று அந்த ஆயிரம் ரூபாயைக் கொடுத்து வேலையில் சேர்ந்திருந்தால், இன்று இந்த ராஜசேகரன் எங்காவது ஒரு சாதாரண வேலையில் இருந்திருப்பான். பலருக்கும் முடிந்த வரை உதவ வேண்டுமென்ற எண்ணமே தோன்றியிருக்காது. இந்தப் பாராட்டு விழாவுக்கும் அவசியம் இருந்திருக்காது. 'தன் கையே தனக்குதவி', 'பிறருக்கு உதவுவதே பிறவிப் பயன்' என்ற கொள்கைப்படி நடப்பவன் நான். இதையேநான் எல்லோருக்கும் சொல்லவிரும்புகிறேன்வணக்கம்.''

'ராஜசேகர் போல் ஆயிரத்தில் ஒருவர் இருப்பதால்தான் உலகம் இந்த நிலையிலாவது இருக்கிறது'', என்று யாரோ கூட்டத்தில் சொல்வது கேட்கவில்லையா உங்களுக்கு?

—மீனு இராமச்சந்திரன் (158), அண்ணாமலைநகர்.

ஆணவம் அழிந்தது!

ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். எல்லா மாணவர்களும் அமைதியாகக் கேட்டுக்கொண்டு இருந்தனர் — ஒருவனைத் தவிர. அவன் தான் மாதவன். மாதவன் ரொம்பவும் சுட்டிப் பயல்.

வகுப்பில் கவணில் கல் வைத்து, தனக்கு முன்னே இருக்கும் மாணவனின் முதுகைப் பதம் பார்ப்பான். யாரும் அவனை எதிர்க்க மாட்டார்கள். அவ்வளவு பயம் மற்றவர்களுக்கு!

''இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்''

—ஆசிரியர் திருக்குறளை நடத்திய வாறே பாபு என்ற மாணவனிடம், ''இந்தக் குறளுக்குப் பொருள் சொல், பார்ப்போம்'' என்றார்.

''ஒருவன் தனக்குத் தீமை செய்தாலும், அவனுக்கு நாம் நல்லதே செய்ய வேண்டும். இதுதானய்யா பொருள்'' என்றான் பாபு.

பாபு வகுப்பில் தலைசிறந்தவன். வகுப்பிலேயே கடை மாணுக்கனை மாதவனுக்கு இது பொருமையாக இருந்தது.

பாபுவை அடிக்கடி வம்புக்கு இழுப்பான். பாபுவோ பொறுமையாக இருப்பான் — அவனது செயல்களுக்கெல்லாம்.

ஒருநாள்...

பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு முன்னால், மாதவன் பள்ளியின் வாசலில் வெடி வெடித்துக் கொண்டிருந்தான். தந்தையிடம் புத்தகம் வாங்க வேண்டும் என்று பணம் வாங்கி, வெடி வெடித்துக் கொண்டிருந்தான்.

தூரத்தே பாபு வருவதைக் கண்டதும், அணுகுண்டு வெ யை வைத்து அவனைக் காயப்படுத்... வேண்டும் என்ற குரூர ஆசையால் அவன் வருகிற நேரத்தில், திரியில் தீயை வைத்தான்.

அந்தோ பரிதாபம்! பாபுவைப் பார்த்தவாறே, திரியில் தீ வைத்ததால், திரியில் தீ வேகமாகப் பரவியதைக் கவனிக்கவில்லை.


இதை பாபு கவனித்துவிட்டான். மின்னல் வேகத்தில் ஓடிவந்து மாதவனை அப்புறமாகத் தள்ளினான். உடனே வெடியும் வெடித்தது.

மாதவன் மிரள மிரளப் பார்த்தான். 'நான் பாபுவை அழிக்க நினைத்தேன். ஆனால், அவன் என்னையே காப்பாற்றி விட்டானே!' என்று நினைத்து மனம் திருந்தி அழுதான்..

அவனுள் குடிகொண்டிருந்த ஆணவம் அழிந்தது.

''இன்னு செய்தாரை ஒறுத்தல்அவர் நாண
நன்னயம் செய்து விடல்.''

—அ. பி. குமார் ராஜசேகர் (501), கரந்தை.



நாட்டைக் காப்போம்!

'ஒன்று பட்டு வாழுவோம்;
உலகம் போற்ற மகிழுவோம்.
என்ற எண்ணம் மனத்திலே
என்றும் நிலைக்கப் பாடுவோம்.

ஐக்கி யத்தைக் காக்கவே
அஸ்தி வாரம் போடுவோம்.
பக்தி யோடு என்றுமே
பார தத்தைப் பேணுவோம்.

நா டு பெற்ற சுதந்திரம்
நமது அருமைத் தலைவர்கள்.
பாடு பட்டுப் பெற்றது.
பலனைக் கண்டு மகிழ்கிறோம்.

இமயம் குமரி எல்லையே
நமது தேச எல்லையாம்.
இமையைப் போல நாமுமே
என்றும் காக்க வேண்டுமே!

—ஆர். சி. தாணு (6555), கொட்டாரம்.

மதுரை கண்டேன்!

ஆண்டுத் தேர்வு விடுமுறை வரவே
அடியேன் சென்றேன் மதுரைக்கு.

அழகிய அன்னை மீனாட்சியவள்
அருளே எங்கும் தவழ்கிறது!

அம்மன் ஆலய அழகினைக் கூற
அடியேன் தகுதி போதாது.

சூரிய ஒளியால் தங்கக் கோபுரம்
சுடர்ஒளி வீசித் திகழ்கிறது!

ஆயிரங் காலில் மண்டபம் கண்டேன்;
அடடா! அதிசயம்! அதிசயமே!

கருத்தைக் கவரும் அரும்பொருள்
காட்டும்
கலையகம் கண்டு களிப்புற்றேன்.

வல்லிய நோய்கள் அனைத்தும் தீர்க்கும்
வண்டியூர் மாரி யம்மனையும்,


மகாத்மா காந்தி பெயரில் விளங்கும்
மகிமை மியூசியக் காட்சியையும்,

மன்னர் நாயக்கர் அரண்மனை தன்னில்
மனமகிழ் வூட்டும் ஒலி—ஒளியும்

நீங்களும் கண்டு களித்தது உண்டோ?
நிச்சயம் காண வேண்டுமென்பேன்.

—எஸ். பாலமுருகன் (3445), மதுரை—1





பிருந்தாவனக் கவியரங்கம்

தெய்வம் ஆனார்!

இந்தியரெல்லாம் அன்னையெனச்
சொந்தம் கொண்டு போற்றியவர்,
இந்திரா காந்தி எனும்ஒளியை
இழந்தே நாமும் தவிக்கின்றோம்!

தந்தை ஜவஹர் போல்இவரும்
தரணியில் மிகவும் புகழ்பெற்று,
இந்திய நாட்டை ஆண்டனரே
ஈரெட்டு ஆண்டுகள் சிறப்புடனே!

செய்வன திருந்தச் செய்பவராம்;
சீரிய நோக்கம் கொண்டவராம்;
தெய்வம் ஆனார் இப்பொழுது!
தேம்புதல் இன்றிச் செயல்புரிவோம்.

—ஏ. ஆர். ஆனந்த் (421) விருதுநகர்.





அம்மா!

அம்மா என்று நீஅழைத்தால்
ஆவும் நிமிர்ந்து உனைப் பார்க்கும்.
ஆவல் பொங்க உன் அம்மா
அணைப்பாள் உன்னைப் பாசமுடன்.

அம்மா என்னும் சொல்லாலே
ஆயுள் முழுதும் மகிழ்வாயே.
அன்பு என்னும் பண்பாலே
ஆனவள் உன்தன் எழில்தாயே.

அமைதி, அன்பு, அடக்கத்தால்
அகத்தை நிறைத்தவள் உன்தாயே.
அன்னை அவளைத் தெய்வமென
அனுதினம் போற்றுதல் நம் கடமை.

—எஸ். என். சியாமளா (6415). அரும்பாக்கம்.

சொக்கன் கடத்திய விமானம்!

சொக்கன் கடத்தினான் விமானத்தை;
சொல்லப் போனால் வேடிக்கை!

தாக்கித் தகர்க்கக் குண்டுமில்லை;
தாவி மிரட்டப் பிஸ்டலில்லை!


அக்கா ஹோஸ்டஸ் அலறவில்லை!
அண்ணன் பைலட் பதறவில்லை!

விக்கிப் பயணிகள் விம்மவில்லை!
விமானம் எங்கும் இறங்கவில்லை!


சீக்கிரம் செய்தி பரவவில்லை!
டி.வி., வானொலி பரப்பவில்லை!

சொக்கன் கடத்திய விமானம் எது?
சும்மா பொம்மை விமானம் அது!

—எஸ். அருண் (219), பரங்கிப்பேட்டை



பிரெஞ்சு விடுகதைகள்



1. ஆடிக் கொண்டே இறங்குவேன்; அழுதுகொண்டே ஏறுவேன் நான் யார்?

2. எனக்கு நிறையப் பற்கள் உண்டு; ஆனால், என்னால் கடிக்க முடியாது. நான் யார்?

3. எனக்குக் கல்வியறிவு இல்லை. ஆனால் நான் எல்லா மொழிகளையும் பேசுவேன். நான் யார்?

4. எனக்குத் தலை இல்லை; கை, கால்களும் இல்லை; ஆனால் கதவுகளையும் ஜன்னல்களையும் திறப்பேன். நான் யார்?

5. நாங்கள் உடன் பிறப்புக்கள். ஆனால், எங்களால் சேர்ந்து இருக்க முடியாது. நான் பிறந்தால் அவன் இறப்பான். அவன் பிறந்தால் நான் இறப்பேன். நாங்கள் யார்?

6. எனக்கு ஐந்து விரல் உண்டு. ஆனால், அவற்றில் எலும்போ, சதையோ இல்லை. நான் யார்?


7. என் தோற்றம் அழகானது. நிறமோ வெள்ளை, நான் உழைத்துக்கொண்டே இறப்பேன். நான் யார்?

8. மரத்தைச் சுற்றியிருப்பேன். ஆனால், அதனுள் நுழையமாட்டேன். நான் யார்?

9. எல்லோரையும் கோயிலுக்கு வரும்படி அழைப்பேன். ஆனால், நான் மட்டும் கோயிலின் உள்ளே வர மாட்டேன். நான் யார்?

விடைகள்: 1. கிணற்றுவாளி 2. அறுக்கும் வாள் (ரம்பம்) 3. தொலைபேசி, 4. காற்று, 5. இரவும் பகலும், 6. கை உறை, 7. மெழுகுவர்த்தி, 8. மரப்பட்டை, 9. மாதா கோவில் மணி.

-புதுச்சேரி சாரதானந்தன்.



கடவுள் வந்தார்

வேலையன் ஒரு சோம்பேறி. ஒரு வேலையும் செய்யாதவன்; செய்ய விரும்பாதவன். திண்ணையில் உட்கார்ந்து, தினம் தெருவில் போகிறவர்களைக் கூப்பிட்டு, 'உழைக்காமல் வாழும் வழிக'ளைக் கேட்டுக் கொண்டிருப்பான்.

ஒருநாள், ஒரு பெரியவர் அவனுடைய நச்சரிப்புத் தாளாமல், ''உன்னைப் படைத்த கடவுளிடம்தான் கேட்க வேண்டும். எங்களுக்கு அப்படி ஒரு வழியும் தெரியவில்லை'' என்று கூறினார்.



வேலையனுக்கும் அது சரியென்றே பட்டது. ஏனென்றால், அந்தக் காலத்தில் கடவுளை நோக்கித் தவம் செய்து, வேண்டிய வரம் பெற்றவர்களைப் பற்றி அவன் கதைகள் கேட்டிருந்தான்.

எனவே, தானும் கடவுளிடம் 'உழைக்காமல் வாழ' ஒரு வரம் வாங்க வேண்டும் என்று எண்ணினான்.

வேலையனைப் பொறுத்த வரையில் 'தவம்' என்பது ஒரு சிரமமான வேலை இல்லை. . எப்போதும்தான் சும்மா உட்கார்ந்து இருக்கிறான்; இப்போது அதிகப்படியாக 'கண்களை மூடிக் கொண்டு கடவுளை நினைத்துக் கொள்ள வேண்டும்' — அவ்வளவுதானே!

வேலையன் தவத்தில் உட்கார்ந்தான்.

அவன் எங்கே தன் சோம்பேறித்தனத்தால் தவத்தைக் கைவிட்டு விடுவானோ என்று கடவுளும் அவனை அதிகம் சோதிக்காமல் சுருக்காகவே ஆஜரானார்.

''என்ன வேண்டும்?''

''எனக்கு ஒரு வரம் வேண்டும்.''

''நீ பிறக்கும் போதே உனக்கு இரண்டு வரங்கள் கொடுத்து அனுப்பி

துரை சீனிவாசன்

யிருக்கிறேனே... மறந்து விட்டாயா?''

வேலையன் புரியாமல் விழித்தான்.

கடவுள் தொடர்ந்தார், ''உன் தோள்களிலிருந்து தொங்குவதுஎன்ன?'

வேலையன் தன் தோள்களைப் பார்த்தான்.

''கைகள்.''

''ஆம், அந்தக் கரங்கள்தான் நான் உனக்குக் கொடுத்துள்ள வரங்கள்! அவற்றைச் சரியாகப் பிரயோகித்தால் உன் சோம்பல், வறுமை என்னும் சாபங்கள் நீங்கி விடுமே!''

இதுவரை 'உண்பதற்கு மட்டுமே கைகள்' என்று எண்ணிக் கொண்டிருந்த வேலையனுக்கு இது ஒரு புதுக் கருத்தாகத் தோன்றியது.

என்றாலும், அவன் கடவுளிடம், ''எனக்கு உதவி செய்ய யாருமே இல்லையே!'' என்று கவலைப்பட்டான்.

கடவுள் சிரித்தார்.

''உன்னிடம் பத்து வேலைக்காரர்கள் இருக்கும்போது ஏன் கவலைப்படுகிறாய்?''

வேலையன் தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டான். 'யாருமே இல்லையே!' — குழப்பத்துடன் கடவுளைப் பார்த்தான்.

''உன் இரு கைகளையும் விரி.''

வேலையன் தன் இரு கைகளையும் நன்றாக விரித்துக் காட்டினான். கடவுள் அவன் கைவிரல்களைக் காட்டி, ''இவை என்ன?'' என்று கேட்டார்.

''விரல்கள்.''

''இல்லை. உனக்காக நான் அமர்த்தியுள்ள வேலைக்காரர்கள். எந்த நேரமும் உன் வேலைகளை உடனிருந்து செய்யும் நண்பர்கள். உனக்கு உதவும் உறவினர்கள் — உன்னைப் பாதுகாக்கும் காவலர்கள்...'' கடவுள் சொல்லிக் கொண்டே போனார். வேலையன் ஒவ்வொரு விரலையும் உற்றுப் பார்த்துக் கொண்டே வந்தான். விஷயங்கள் ஓரளவு புரிய ஆரம்பித்தன.

கடவுள் அவனை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். இருவரும் சுற்றி வந்தார்கள். கடவுள் வேலையனுக்கு —

பண்பட்ட வயல்களைக் காட்டினார்; பயிர் பச்சைகளைக் காட்டினார்; அழகிய சோலைகளைக் காட்டினார்; நீண்ட சாலைகளைக் காட்டினார்; ஒவ்வொரு கட்டடத்தையும் காட்டினார்; உயர்ந்த கோபுரங்களைக் காட்டினார்.

பிறகு கேட்டார்: ''உலகை மட்டும் தான் நான் படைத்தேன்; இவற்றையெல்லாம் யார் படைத்தது?''

வேலையன் யோசித்துவிட்டுக் கூறினான்: ''மனிதன்.''

கடவுள் வேலையனின் கைகளைப் பிடித்துக் குலுக்கி விடைபெற்றுக் கொண்டார்.

வேலையன், விரல்களின் விந்தைகளையும் கைகளின் சாதனைகளையும் புரிந்து கொண்டான்; புது மனிதன் ஆனான்.


உழைக்கப் புறப்பட்டுவிட்டான்!

உலகின் சாபங்களை மாற்றியமைக்க அவன்தான் இரண்டு வரங்களைப் பெற்றிருக்கிறானே!

எந்த வேலையையும் செய்து முடிக்கப் பத்து வேலைக்காரர்கள் கைவசம் இருக்கிறார்களே!

இனி என்ன?

வெற்றிதான்!



9 மாலியும் ஜூலியும்

கருத்து: எம்.ஆர்.ராஜன்





பீரோவைத் தவிர வீட்டினுள் பரவலாகக் கிடந்த முக்கிய சாமான்களை எடுத்து மூட்டையாகக் கட்டியாகி விட்டது.

இனி எவர்சில்வர், வெள்ளி, தங்க நகைகள்தான் பாக்கி...

அது பீரோவுக்குள் இருக்கும்...!

பரஞ்ஜோதி ஆவலாகக் கள்ளச் சாவி போட்டுத் திறந்தான்.

எண்ணம் போலவே பீரோவில் முதல் இரண்டு தட்டுக்களில் எவர் சில்வர், வெள்ளிப் பாத்திரங்கள் அடைத்துக் கொண்டிருந்தன...

அவற்றை எடுத்துத் தனி மூட்டையாகக் கட்டினான்...

மூன்றாவதில் துணிகள்...

அதைத் தொடாமல், நாலாவது தட்டைக் குனிந்து பார்த்தான்...

அதற்குள் தாறுமாறாகச் சில போட்டோக்கள்... துணிமணிகள் குவிக்கப்பட்டிருந்தன...

ஒரு போட்டோவை உருவிக் கைகளில் எடுத்துப் பார்த்தான்!

கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன.

ஆம்... அந்தப் போட்டோவில் அவனும் ஒரு மூலையில் நின்றிருந்தான்...!

அவனுடைய பள்ளி ஆசிரியர் சுவாமிநாதன் மையமாக அமர்ந்திருந்தார். அது அவன் எஸ். எஸ். எல். சி. படித்தபோது எடுத்தது...

ஒருவேளை சுவாமிநாதன் சார் வீடு தானோ இது?...

அவன் மேலும் இரண்டு மூன்று போட்டோக்களை எடுத்துப் பார்த்தான்...

எல்லா போட்டோக்களிலும் சுவாமிநாதன் மையமாக உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருந்தார்.

'எஸ். எஸ். எல். ஸி.யில் படி படியெனச் சொல்லி நம்மை அவர் படிக்க வைக்க எவ்வளவு பாடுபட்டார்...! அவர் வீட்டிலா நாம் திருடுகிறோம்?'

—பரஞ்ஜோதிக்கு என்னவோ போலிருந்தது.

பீரோவுக்கு அருகில் இருந்த ஒரு சோபாவில் சென்று அமர்ந்தான்.

அதனருகில் ஒரு மேஜை...

அதன் மீது ஒரு கடிதம்...

ஆசிரியருக்கு. திருச்சியிலிருந்து யாரோ கடிதம் எழுதியிருந்தார்...

கடிதத்தைப் பிரித்தான்.. படித்தான்...

அன்புள்ள சுவாமிநாதன்,

தங்கள் கடிதம் கண்டேன், நான் உங்களிடம் கேட்டபடி, கையில் 5000 ரூபாய் கொடுத்

தால், உங்கள் பெண்ணை என் பைய னுக்கு மணம் முடிக்கலாம். ஆனால் நீங்கள் குறிப்பிட்டுள்ள 2500 ரூபாய் போதாது... ஆகவே தங்க ளுக்கு எங்களிடம் சம்பந்தம் செய்து கொள்ளும் பாக்கியம் இல்லை என்று தோன்றுகிறது. மன்னிக்கவும்.

ராமசாமி.

கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு சில நிமிடங்கள் யோசித் தான் பரஞ்ஜோதி. பிறகு அதே கடி தத்தில் மீதமிருந்த இடத்தில் பின் வருமாறு எழுதினான்:

அன்புள்ள ஆசிரியருக்கு,

உங்கள் முன்னாள் மாணவன் மஞ்சக் கொல்லை பரஞ்ஜோதி வணக் கத்துடன் எழுதிக் கொள்வது... உங்கள் கண்டிப்பால் நான் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்திருந்தும், என் தலைவிதி என்னைத் திருட னாக்கி விட்டது. அதன் விளைவு தான் நான் இங்கு திருட வந்தது. ஆனால், வந்த இடத்தில்; எல்லாவற்றையும் எடுத்து. மூட்டை கட்டிக் கொண்டு புறப் படும் முன், அதிர்ஷ்டவசமாய் உங்கள் போட்டோவைப் பார்த்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்... இனி நான் வாழ்நாள் முழுவதும் திருட மாட்டேன்... மேலும், உங்கள் அனுமதியில்லாமல் உங்களுக்கு வந்திருந்த ஒரு கடிதத் தையும் பிரித்துப் படித்து விட் டேன். கவலை வேண்டாம்... கடிதத் தில் கண்ட சம்பந்தத்தை ஏற் படுத்திக் கொள்ளத் தங்களுக்குப் பாக்கியமுண்டு. நான் இங்கு திருட வந்ததற்குப் பிராயச்சித்தமாக நான் கொண்டு வந்த 2500 ரூபாயை விட்டுச் செல்கிறேன். அதைத் தங்க ளிடம் உள்ள 2500 ரூபாயுடன் சேர்த்து அவ்வரனையே முடித்து விடுங்கள். இந்தப் பணம் ஏது என்ற கவலை வேண்டாம். அது கறுப்புப் பண முதலை பகவன்தாஸ் வீட்டில் கொள்ளையடித்தது. இதை ஒரு நஷ்டமாகவே நினைத்து அவன் போலீஸில் ரிப்போர்ட் செய்யமாட் டான். ஆகவே கவலை வேண்டாம். பணம் உங்கள் பீரோவில் லாக்கரில் உள்ளது.

உங்கள் பழைய மாணவன்,

மஞ்சக்கொல்லை பரஞ்ஜோதி.

ஆசிரியர் சாமிநாதன் அந்தத் திருட் டுப் பணத்தைத் தொட விரும்பவில்லை. அப்படியே சாமி உண்டியலில் போட்டு விட்டு, மகள் கல்யாணத்துக்கு வேறு இடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்!

திருக்குறள் புதிர்-விடை

புதிர் 33 :

தவம் மறைந்து அல்லவை செய்தல் புதல் மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. (274)

துறவியைப் போல வேடம் போட்டுக்கொண்டு, தீய செயல்களைச் செய்பவன், புதர் மறைவிலே ஒளிந்துகொண்டு பறவைகளைப் பிடிக்கும் வேடனைப் போன்றவனே.

புதிர் 34 :

இணர் ஊழ்த்தும் நாறா மலர்அனையர்; கற்றது
உணர விரித்துரையா தார். (650)

படித்தவற்றைப் பிறருக்குப் புரியும்படி விளக்கமாக எடுத்துக் கூற முடியாதவன், கொத்தாகப் பூத்திருந்தும் வாசனையில்லாத மலரைப் போன்றவனாவான்.



ஆஞ்சநேயர் 'கொடுத்தது'

''வெள்ளிக்கிழமை என்னுடைய நண்பனும் அவர்கள் குடும்பத்தினரும் வைத்தீஸ்வரன் கோவில் வருகிறார்கள். வழியில் நம் வீட்டில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்ட பின்னர் புறப்பட்டுச் செல்வார்கள்'' என்று தன்னுடைய ஒரே மகன் வாசு எழுதிய கடிதத்தைப் படித்தது முதல் கைலாசக் குருக்கள் விசனப்பட ஆரம்பித்து விட்டார். காரணம், அவருடைய பொருளாதாரம்தான்.

ஒவ்வொரு நாள் கழிப்பதும் ஒரு யுகமாகப்பட்டது. என்ன செய்வார், பாவம்? சரியான விளைச்சல் இல்லாததால் கோயிலுக்குச் சரிவரக் குத்தகைக்காரர் பாக்கி கொடுப்பதில்லை. டிரஸ்ட்டியும் ஏதோ தன்னாலானதைக் கொடுத்து வந்தார். சுத்த அன்னத்தை ஆஞ்சநேயருக்கு நிவேதனம் செய்த பின்னர் கோவிலை மூன்று முறை வலம் வந்து, ''இந்த அளவுக்காவது இன்று படி போட்டாயே ஆஞ்சநேயா'' என்று ஆஞ்சநேயரை உளமாரப் பிரார்த்தனை செய்துவிட்டு வீட்டுக்கு எடுத்து வருவார். சிறிது மோரையும் உப்புக்கல்லையும் இட்டுப் பிசைந்து அவரும் அவர் மனைவியும் உண்டு காலத்தைக் கழித்து வந்தனர்.

வாசு அவருக்கு ஒரே பிள்ளை. தகப்பனாரின் கஷ்டம் தெரிந்து வாசு படிப்பில் கவனமாக இருந்து எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தான். பிறகு சென்னையில் உள்ள ஒரு நண்பர், ''பையனை என்னிடம் அனுப்பி வையுங்கள். என் வீட்டில் இருந்துகொண்டே மேல் வகுப்பு படிக்கலாம்'' என்று வற்புறுத்தியதால், கைலாசக் குருக்கள் தம் மகனைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். வாசுவும் படிப்பில் முதன்மையாக இருந்தான்.

கடிதத்தை மனைவியிடம் படித்துக் காட்டினார் குருக்கள். ''பையனுக்கு மிகவும் உதவி வரும் குடும்பத்தினரை எவ்விதம் உபசரிப்பது? வீட்டில் புழங்கக்கூடச் சரியான பாத்திரங்கள் கிடையாதே! ஏதாவது டல்காரம் காப்பியாவது கொடுக்க வேண்டாமா?'' என்று கேட்டாள் குருக்களின் மனைவி பார்வதி அம்மாள். குருக்களுக்கு ஒன்றும் புரியவில்லை. மறுநாள் வெள்ளிக்கிழமை. வியாழன் இரவு குருக்களுக்குத் தூக்கமே வரவில்லை. அதிகாலையில்தான் சற்றே கண்ணயர்ந்தார்.

''என்ன குருக்களே!' உங்க பையன் வாசு சொன்னதை வைச்சுண்டு நேரே உங்காத்திற்கு வந்துட்டோம். ஒரு டிபன் காப்பிகூடக் கிடையாதா? இது விவரம் தெரிஞ்சிருந்தால் நாங்களே கையில் எடுத்திண்டு வந்து உங்களுக்கும் போட்டுட்டு நாங்களும் சாப்பிட்டிருப்போமே! ஒரு உப்புமா கூடவா செய்து வைக்க உங்களுக்கு அந்தஸ்து இல்லாமல் போயிடுத்து?'' கைலாசக் குருக்களுக்கு நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல இருந்தது. பேசவே நா எழவில்லை. 'நான்... நான்...' உளறினார். வார்த்தை கோவையாக வெளிப்படவில்லை. பயத்தினால் உடம்பு நடுங்கியது.

''பொழுது விடிஞ்சு எத்தனை நேர மாச்சு? இன்னும் என்ன தூக்கம்? எழுந்து குளித்து முழுகிக் கோயிலுக்குப் போக வேண்டாமா?'' அவர் மனைவி பார்வதி எழுப்பியதும்தான் கைலாசக் குருக்களுக்கு இதுவரை தான் கண்டது கனவு என்று புரிந்தது.

கைலாசக்குருக்கள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஆஞ்சநேயர் சந்நிதியில் நின்று கொண்டு சிறுபிள்ளை போல் விசும்பினார். ''ஹே ஆஞ்சநேயா! என்னை நிர்க்கதியாய் விட்டு விட்டாயே! வரும் விருந்தினர்களை எப்படி உபசரிப்பேன்? ஒரே பையன் ஆசையாக எழுதியதைச் செயல் படுத்த முடியாது போகிறதே! இப்படி ஒரு அவல நிலைமை எனக்கு ஏற்பட வேண்டுமா? உனக்குத் தெரியாதோ? நாங்கள் வீட்டிலே என்ன வெச்சிருக்கோம்? சொல்லு! சொல்லு! நான் என்ன செய்யட்டும்?'' என்று அரற்றி அழுதார்.


''குருக்கள் ஐயா, கொஞ்சம் வந்து ஒரு சமாச்சாரம் கேட்டுட்டுப் போறீங்களா''—பின்னால் உள்ளூர் பண்ணையார் நல்லசிவம் குரல் கொடுத்தார்.

''இதோ வந்துட்டேன், என்ன செய்யணும் சொல்லுங்கோ?'' என்று கேட்டபடியே கண்களைத் துடைத்துக் கொண்டார் குருக்கள்.

''ஒண்ணும் பெரிய விஷயமில்லே, இன்னிக்கு என்னோட பிறந்த நாள். ஆஞ்சநேயர் பேருக்கே ஓர் அர்ச்சனை செய்திடுங்க! இந்தக் கூடையிலே அரிசி, வெல்லம், வடை செய்வதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் இருக்கு. ஒரு அரைப்படி சர்க்கரைப் பொங்கல் போட்டு, வடையும் தட்டி நைவேத்தியம் செஞ்சுடுங்க! குருக்கள் ஐயா! இன்னொரு விஷயம். பிரசாதத்தை நீங்களே வீட்டுக்கு எடுத்திட்டுப் போயிடுங்க. நாங்க அவசரமா வெளியூர் போக வேண்டியிருக்கு'' என்றார்.

கைலாசக்குருக்களுக்கு நம்பவேமுடியவில்லே. தான் காண்பது மறுபடியும் கனவா என்று கிள்ளிப் பார்த்துக் கொண்டார். ''அப்படியே செஞ்சுடறேன் பண்ணையவாள்!'' ஆவேசத்துடன் குரல் கொடுத்தார் குருக்கள்!

''ஆஞ்சநேயா! சுலபமா என் பிரச்னையைத் தீர்த்துட்டாய். நீ இருக்கும் போது அஞ்ஞானத்திலே என் மனசு குழம்பிடுத்தே!'' ஆனந்தக் கண்ணீர் விட்டார் கைலாசக் குருக்கள். ஒன்றும் அறியாததுபோல் மந்தஹாசத்துடன் நின்று கொண்டிருந்தார் ஆஞ்சநேயர்.



பழைய கதை; புதிய பாடல்

வேத புரியில் உள்ளதோர்
  மிகவும் சிறிய தெருவிலே;
பாதை நடுவில் உருண்டையாய்ப்
  பாறை ஒன்று கிடந்தது.

பாறை தன்னைச் சிலருமே
  பாய்ந்து தாவிக் கடந்தனர்.
வேறு சிலரோ பாறையின்
  மீதே ஏறிச் சென்றனர்.

மேலே பார்த்து நடந்தவர்
  மோதிக் கொண்டார் பாறையில்.
காலைத் தடவிக் கொண்டுமே
  கடந்து சென்றார் ஓரமாய்.

✱ ✱ ✱

கந்தல் துணியை அணிந்தவன்
  கையில் குவளை பிடித்தவன்
அந்தத் தெருவில் வந்தனன்
  அவனே கந்தன் என்பவன்.

ஒட்டிப் போன வயிற்றுடன்,
  உலர்ந்து போன நாக்குடன்,
எட்ட நின்று பார்த்தனன்,
  இந்தக் காட்சி அனைத்தையும்.

பாறை யாலே தொல்லைகள்
  பலரும் பட்ட காட் ,
நேரில் கண்ட கந்த
  நெஞ்சம் மிகவு

'நடுவில் கிடக்கும்
  நகர்த்தி ஓரம் போ ம்.
இடைஞ்சல் இன்றி யாவரும்
  இரவில், பகலில் செல்லலாம்'

இரக்க எண்ணம் கொண்டவன்
  இதுபோல் எண்ணிச் சென்றனன்.
புரட்டிப் புரட்டிப் பாறையைப்
  போடப் பார்த்தான் ஓரமாய்.

அரசன் தந்த பரிசு

குழந்தைக் கவிஞர்

பாறுங் கல்லோ மிகவுமே
பளுவாய் இருப்ப தறிந்ததும்,
யாரும் உதவ வருவரோ
என்று பார்த்தான் ஆவலாய்.

அந்தப் பக்கம் சிலருமே
வந்தார், அவரைக் கண்டதும்;
''இந்தக் கல்லைப் புரட்டவே
எனக்குக் கொஞ்சம் உதவுங்கள்.''

என்று கந்தன் கெஞ்சவே,
''இதுதான் எமக்கு வேலையோ?
சென்று நாங்கள் வருகிறோம்!''
என்றே திரும்பிச் சென்றனர்.

வந்தோ ரெல்லாம் உதவிட
மனமில் லாமல் திரும்பவே,
கந்தன் மட்டும் ஒருவனாய்க்
கல்லைப் புரட்ட முயன்றனன்.

முயன்று முயன்று பார்த்தனன்;
மூச்சுப் பிடித்துக் கந்தனும்.
அயர்ந்து போனான்; ஆயினும்,
அன்று முழுதும் முயன்றனன்.

மெல்ல மெல்லப் புரட்டியே
வீதி ஓரம் போட்டனன்;
எல்லை யில்லா மகிழ்வுடன்
இங்கு மங்கும் பார்த்தனன்.

பாறை கிடந்த இடத்திலே
பார்த்தான் கனத்த பையினை!
'யாரோ போட்டு விட்டனர்'
என்றே எண்ணி எடுத்தனன்.

பைக்குள் ஓசை கேட்கவே,
பார்த்தான் அதனைத் திறந்துமே.
ஐய மில்லை; யாவுமே
அடடா! பவுனாய் மின்னின!

அந்தப் பையை மூடினன்;
அரண் மனைக்கே ஓடினன்;
வந்த செய்தி கூறவே
மணியை ஓங்கி அடித்தனன்.

அந்த நாட்டு மன்னரை
யாரும் காண விரும்பினால்,
இந்த மணியை அடிக்கலாம்.
எளிதில் அவரைக் காணலாம்.

மணியின் ஓசை கேட்டதும்,
மன்னர் அங்கே வந்தனர்.
குனிந்து கந்தன் வணங்கியே
கொடுத்தான் அந்தப் பையினை.

''அரசே, பெரிய கல்லினை
அங்கோர் தெருவில் நானுமே
புரட்டிப் புரட்டி ஓரமாய்ப்
போட்டேன்; அந்த வேளையில்,

கண்டேன் இந்தப் பைதனை
கல்இ ருந்த இடத்திலே!
கொண்டு வந்தேன், அரசிடம்
கொடுக்க வேண்டி நானுமே.

கந்தன் என்னும் ஏழைநான்
கண்டெ டுத்த பைஇது!
எந்த மனிதர் போட்டதோ?''
என்று கந்தன் சொன்னதும்,

''இந்தப் பைக்கே உரியவர்
எனக்குத் தெரியும்; சொல்லவா?
கந்த னுக்கே இந்தப்பை
சொந்தம்'' என்றார் அரசரும்.!

''என்ன! இதற்கே உரியவன்
ஏழைப் பிச்சைக் காரனா?
மன்னா, என்ன சொல்கிறீர்?''
என்று கந்தன் கேட்டனன்.

''அடியில் காசுப் பையையும்,
அதற்கு மேலே கல்லையும்
நடுவில் வைக்கச் சொன்னதே
நான்தா னப்பா, தெரிந்துகொள்.

கல்லை அகற்றிப் பிறரது
தொல்லை நீங்கச் செய்பவர்,
நல்ல பரிசைப் பெற்றிட
நான்தான் செய்தேன் இப்படி!

பிச்சை எடுத்துப் பிழைக்கும்நீ
பிறரின் சொத்து மீதிலே
இச்சைப் படவே இல்லையே!
என்னைத் தேடித் தருகிறாய்!

நெஞ்சில் கருணை உடையநீ
நேர்மை உள்ளம் கொண்டநீ
கொஞ்சங் கூடத் தயக்கமே
கொள்ள வேண்டாம், அன்பனே.

பவுன் நிறைந்த பையினைப்
பரிசாய் ஏற்றுக் கொள்ளுவாய்!
புவியில் உன்னைப் போன்றவர்
பெருக வேண்டும், நண்பனே!''

அரசர் இவற்றைக் கூறினர்;
ஆடை கொடுத்து, அவனுடன்
விருந்தும் உண்டு மகிழ்ந்தனர்.
விரைவில் செய்தி பரவவே—

தெருவில் கிடந்த கல்லெலாம்
சிரமப் பட்டுச் சிலருமே
உருட்டிப் புரட்டிப் பார்த்தனர்;
ஒன்றும் இல்லை, அடியிலே!



சதுரங்கம்

'குண்டுமணி'

சதுரங்கம் (செஸ்) அறிவாளிகளின் விளையாட்டு. இந்த விளையாட்டுக்கு மூளையைச் செலுத்தி மனத்தை ஒருமுகப்படுத்தி ஆட வேண்டியதிருக்கும். செஸ் விளையாட்டு இன்று உலகமெங்கும் பரவியுள்ளது.

மெஸோபடோமியாவில் பூமிக்கு அடியில் தோண்டிப் பார்த்த போது ஆறுயிரம் வருஷங்களுக்கு முன் சதுரங்கத்தில் பயன்படுத்தப்படும் காய்களைப் போல் கண்டெடுத்ததாக விஞ்ஞான ஆய்வாளர்கள் கூறினர்.

இந்த உலக விளையாட்டைக் கண்டுபிடித்ததாகப் பல நாடுகள் உரிமை கொண்டாடுகின்றன. சாலமன் மன்னர் தான் கண்டுபிடித்ததாகச் சரித்திர ஆய்வாளர்களில் சிலர் சொல்கிறார்கள்.

ஷென் ஷி தேசத்தின் மீது படையெடுத்த தளபதி ஹான்சில் தமது ராணுவ வீரர்களுக்குப் பொழுதுபோக்குவதற்காக 'சோக்கி சோ ஹாங்கீ' என்ற சதுரங்க ஆட்டத்தை உருவாக்கினாராம். இந்த விளையாட்டைப் போர் முறை அமைப்பு விஞ்ஞானமாகவும் அவர் கருதினார். ராணுவ தந்திரத்திற்குச் சதுரங்கம் உறுதுணை செய்திருக்கிறது.

இந்துக்கள் செஸ்ஸை 'சதுரங்கம்' என்று புராண காலத்துப் பெயரைத் தருகிறார்கள். ரோமானியர்கள் 'ஸ்டுஸ் லட்டன் குலோரம்' என்று இந்த விளையாட்டுக்கு நாமகரணமிட்டார்கள். சீன மக்கள் இதற்கு 'சோங்க் கீ' என்று பெயர் சூட்டினார்கள். செஸ்ஸுக்குப் பழைய நாமதேயம் என்ன தெரியுமா? 'செக்' (Check) என்பதுதான்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜாக்கோ பஸ் டி ஸீஸோலிஸ் கி. பி. 1200 –இல் செஸ் விளையாட்டு நுணுக்கங்களை நூல் வடிவமாகத் தந்திருக்கிறார். இந்த நூல் பிறகு ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் மொழிபெயர்க்கப்பட்டது. காக்ஸ்டன் செஸ் நூலை 1479—ல் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறது. ஸ்பெயின் நாடு, இத்தாலி நாட்டார் தயாரித்தளித்த செஸ் சட்டங்களை அமுலுக்குக் கொணர்ந்தது. செஸ் விளையாட்டில் அந்தக் காலத்தில் இத்தாலியர்களும் ஸ்பானியர்களும் தலைசிறந்து விளங்கினார்கள். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ரிலி லோப்பர் செஸ்ஸில் மாஸ்டர் என்ற புகழைப் பெற்றவர்.

கி. பி. 1562—ல் இரு பிரசித்தமான இத்தாலி செஸ் ஆட்டக்காரர்கள் போலோ பாயி, ஜியோவன்னி லியோனார்டோ டகட்ரி ஸ்பெயின் நாட்டு செஸ் நிபுணர்களைத் தோல்வியடைய வைத்து, முதல் பந்தயம் ஆடி வெற்றிவாகை சூடியிருக்கிறார்கள்.

1843—ல் செயின்ட் சுமந்த்தும் லண்டனைச் சேர்ந்த ஸ்பின்டனும் பாரிஸில் நடத்திய சாம்பியன் போட்டியில் ஸ்பின்டன் வெற்றி சூடினார்.

வாசவதத்தா என்ற சமஸ்கிருத நூலில் சதுரங்கம் பற்றிய குறிப்பு வெளியாகியிருக்கிறது. ஹர்ஷ மன்னர் காலத்தில் சதுரங்கம் பிராபல்யமாக இருந்திருக்கிறது.

1972—ல் ரஷ்ய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் உஸ் பெக்கிஸ்தானில் யானை, எருது வடிவங்களில் தந்தப் பொருள்களை அகழ்ந்து எடுத்திருக்கிறார்கள். இவை கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்தவை என்று தெரிய வந்திருக்கின்றன. பாரசீகத்தில் ஷா மன்னர் சதுரங்கம் கண்டுபிடித்தவருக்குப் பரிசு வழங்கிக் கௌரவித்திருக்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த வில்லியம் ஸ்பீனிட்ஸ் இருபத்தெட்டு வருஷங்கள் உலக சாம்பியனாக ரிகார்டு கண்டிருக்கிறார்.

செஸ் விளையாட்டில் ரஷ்யர்கள் விற்பன்னர்கள். பாட்வின்னிக் ரஷ்ய சாம்பியன். இவர் மின்துறை என் ஜினியர். 1954—ல் உலகில் செஸ்ஸில் 65 சர்வதேச மாஸ்டர்கள் இருந் தார்கள். இவர்களில் 16 நிபுணர்கள் ரஷ்யர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1972—ல் உலக செஸ் போட்டியில் பிஷர் ரஷ்ய செஸ் சாம்பியன் ஸ்பாக் ஷியைத் தோல்வியடைய வைத்தது உலக செஸ் பிரியர்களை அயர வைத் தது. இந்த உலக செஸ் போட் டிக்குப் பிறகு ரஷ்ய செஸ் சாம்பியன் கார்போவ் உலக சாம்பியனாகப் பரிமளித்தார்.

இருபதாம் நூற்றாண்டில் பெண் மணிகளும் செஸ் ஆட்டத்தில் விற்பன் னர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள்.

1927—ம் ஆண்டில் பெண்கள் உலக சாம்பியன் போட்டி லண்டனில் நடை பெற்றது. விராபென்சிக் உலக சாம்பி யனாக 1944—ம் வருஷம் வரை புக ழோடு இருந்தார். ஆனால் இவர் விமான விபத்தில் உயிர் துறந்தது துரதிர்ஷ்டம். இதன் பிறகு ரஷ்ய சாம்பியன் லுட்மிலா ருடன்கோ அந்தப் பதவியைப் பெற்றார்.

செஸ், வாழ்க்கையோடு பிணைந்திருக் கும் விளையாட்டு. செஸ் காய்கள் சமூகத்தில் பல்வேறு பகுதிகளைச் சுட்டிக் காட்டும். ஆட்டம் முடிந்து விட்டால். அத்தனை செஸ் காய்களும் ஒன்றாக ஒரு பையில் கட்டி வைக்கப் படும். ஆட்ட மேஜையில் ஒவ்வொரு காய்க்கும் ஒரு மதிப்பு உண்டு. ராஜா காய்க்கு எந்தத் திசையிலும் செல்லும் உரிமை உண்டு. 'பான்' காய்களுக்கு நேராகச் செல்லும் உரிமை இருந் தாலும், மற்றொரு 'பான்' காயை வெட்டும் போது diagnal ஆக செல்ல முடியும்.


சங்கீதத்துக்கும் செஸ்ஸுக்கும் நெருங் கம் அதிகம். பிரபல இசை மேதைகள் செஸ் விற்பன்னர்களாகத் திகழ்ந்திருக் கிறார்கள். பில்டர் இரு கலைகளிலும் மேதை.

செஸ் போர்டில் 204 சதுரங்களும் 1296 (Rectangles) செஞ்சதுரங் களும் கொண்டு ஆட முடியும். இரண்டு ஆரம்ப நகர்த்தல்களில் 197299 வகை வழிகள் உள்ளன வாம். இதனால் 72000 பல்வித நகர்த் தல்களுக்கு வழிவகுக்குமாம்.

1924—ல் ஆண்டில் பாரிஸில் செஸ் ஸுக்கு சர்வதேச கழகம் உருவாக்கப் பட்டது. பாரிஸில் சர்வதேச கிராண்ட் மாஸ்டர், சர்வதேச மாஸ்டர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

1927—ஆம் ஆண்டு செஸ் ஒலிம்பி யாட் லண்டனில் நடைபெற்றது. பதினாறு தேசங்கள் இந்தப் போட்டி யில் பங்கேற்றன. ஹங்கேரி நாடு முதல் வெற்றியைப் பெற்றது. 1974 செஸ் ஒலிம்பியாட் பந்தயத்தில் ரஷ்





சிறையில் இருந்த நாட்கள்

காந்தித் தாத்தா நிறவெறியை எதிர்த்ததற்காகவும் இந்திய விடுதலைப் போரில்ஈடுபட்டதற்காகவும்தென்ஆப்பிரிக்கச் சிறைகளில் 24 நாட்களும், இந்தியச் சிறையில் 2089 நாட்களும் ஆகமொத்தம் 2338 நாட்கள்— அதாவது 6 ஆண்டுகள் 148 நாட்கள் சிறையிலே அடைக்கப்பட்டார்!

யர்கள் மாபெரும் வெற்றியைப் பெற்றார்கள்.

செஸ் விளையாட்டு ஒவ்வொரு வரிசையிலும் எட்டு சதுரங்கள் கொண்டது. எட்டு வரிசையும் உண்டு. ஒரு சதுரம் கறுப்பாகவும் மற்றது வெளுப்பாகவும் வர்ணமிட்டிருக்கும். செஸ் பலகை இரண்டு ஆட்டக்காரர்களுக்கு நடுவில் வைக்கப்படும். வலது மூலையில் ஒவ்வொரு ஆட்டக்காரருக்கு வெள்ளை சதுரம் இருக்கும்.

ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் 16 செஸ் காய்கள் இருக்கும். பதினாறு காய்களுக்கும் ஆறு வகை மதிப்பு உண்டு. அதன் மதிப்புக்குத் தகுந்தவாறு நிர்ணயிக்கலாமா? முதலில் ராஜா, ராணி, ரூக் (Castle) பிஷப், நைட், பான் எனத் தகுதிக்கேற்பப் பிரித்து வைக்கலாம். ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் ஒரு ராஜா, ஒரு ராணி, இரண்டு ரூக்கள், இரண்டு பிஷப்கள், இரண்டு நைட்கள் எட்டு 'பான்கள்' கொடுக்கப்படும்.

இந்த செஸ் ஆட்டத்தின் குறிக்கோள் எதிரி ஆட்டக்காரரின் ராஜாவை முற்றுகையிடுவதுதான்! செஸ் பலகையிலிருந்து ராஜாவை அகற்ற மாட்டார்கள், ஆனால் மற்ற செஸ் காய்களைப் பிடித்து விட்டால் அவற்றை அகற்றிவிடலாம். ராஜாவை முற்றுகையிட்டு விட்டால் 'Check Mated' என்று சொல்வார்கள். எந்த ஆட்டக்காரர் எதிரியின் ராஜாவை முற்றுகையிட்டு விடுகிறாரோ அவரே வெற்றியாளராகக் கருதப்படுவார். அவருக்கு மற்றக் காய்களின் மதிப்பு நிறைந்திருந்தாலும் 'ராஜா முற்றுகை' யாகி விட்டால் தோல்விதான்!

பல தடவை செஸ் விற்பன்னர்கள் ராஜாவை முற்றுகையாகிவிடும் என்று தெரிந்து கொண்டு விட்டால், உடனே ஆட்டத்திலிருந்து விலகி, வெற்றியை ஒப்புக் கொண்டு விடுவார்கள்.

ஒவ்வொரு செஸ் காய்க்கும், நகர்த்துவதில் வழிவகை உண்டு. ராஜா ஒரு சமயத்தில் ஒரு சதுரம்தான் தாண்டலாம், அதாவது அவரை முற்றுகையிட வழியில்லாமல் பாதுகாப்பாக இருந்தால் மட்டுமே நகரலாம்.

இரண்டாவது ஸ்தானம் ராணிக்குத் தரப் படுகிறது. ராணிகாய்க்கு எந்தக் கோணத்திலும் பாய்ந்து தாக்கும் வல்லமை உண்டு.

பிஷப் காயைக் குறிப்பிட்ட வர்ணத்தில் மட்டும் நகர்த்த இயலும். குதிரை வடிவம் கொண்ட 'நைட்' டுக்கு எந்தத் திசையிலும் இரு சதுரங்களைத் தாண்டும் தகுதி உண்டு.

சாதாரண 'பான்' செஸ் பலகையில் 'தொண்டன்' போல. 'File' எனப்படும் மூலையை பான் அடைந்து விட்டால் அதற்குத் தகுதியும் கூடுகிறது. ராணி, ரூக், பிஷப் ஆகியவற்றுக்குப் பரிவர்த்தனை செய்யும் வல்லமை பெறுகிறது.

செஸ் ஆட்டக்காரர் பூவா தலையா நாணயத்தைச் சுண்டிப் பார்த்து வெள்ளையா, கறுப்பா என்று முடிவு செய்வார்கள். வெள்ளை பெறுபவர் முதலில் நகர்த்தும் தகுதியைப் பெறுவார். பிறகு மாற்றி மாற்றி ஆட வேண்டியதுதான்!

ஆட்டத் தொடக்கத்தில் செஸ் ஆட்டக்காரர் ஒரு 'பானை'யோ 'நைட்'டையோ நகர்த்த இயலும். மேலும் காய்களைத் தொடுவதில் பல கடுமையான சட்டங்கள் உள்ளன.

ஒவ்வொரு செஸ் ஆட்டக்காரரும் ஆட்டத்தைப் பற்றிய ரிக்கார்டைக் குறித்து வைத்துக் கொள்வார். செஸ் ஆடுபவர்கள் நேரம், பொழுது தெரியாமல் கருமமே கண்ணாக. ஊண் உறக்கமின்றி ஈடுபடுவதைப் பார்க்கலாம். தமிழ் நாட்டில் பல அரிய செஸ் விற்பன்னர்கள் இருக்கிறார்கள். ஆரன், ரவிசேகர், ஆனந்த் என்று செஸ் சாம்பியன்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழ்நாடு செஸ் கழகம் தொழில் அதிபர் திரு. என். மகாலிங்கம் தலைமையில் சிறப்பாக இயங்குகிறது. தமிழகத்தின் பெருமையைப் பல இளைஞர்கள் சர்வதேச அரங்கில் செஸ்ஸில் புகழ் தேடித் தருவதைக் கண்டு பெருமைப்படலாம்.

பாசம் மறக்கவில்லை

-திருச்சி பாரதன்-



காட்சி 1

இடம்: சேகர் வீடு

பாத்திரங்கள்: சேகர், முல்லை, பாபு.

முல்லை: சேகர்... சேகர்... இங்கே ஓடி வாயேன்... இங்கே யார் வந்திருக்கான்னு பாரேன்...

சேகர்: (தூரத்தில் இருந்து) யார்... வந்திருக்காங்க? (அருகில் வந்து)... யாரு... யாரு... அடேடே... பாபுவா...?

பாபு: (சிரித்து) ஹா... ஹா... ஹா... அதென்ன அப்படிச் சந்தேகம்? அசல் பாபுவேதான்! உன்னுடைய உயிர் நண்பனேதான்!...

முல்லை: பாபு... அண்ணே... பாபு அண்ணே... சிங்கப்பூரிலே இருந்து எப்ப வந்தீங்க?

பாபு: ஒரு வாரம் ஆச்சு தங்கச்சி... ஆமா... முல்லை! சிங்கப்பூரிலே நான் வசிச்சாலும் என் நினைவெல்லாம் உடன் பிறவாத தங்கை உன்னைப் பத்தியும் உன்னுடைய அண்ணன் சேகரைப் பத்தியும், நம்ம மத்த சிநேகிதங்களைப் பத்தியும்தான் சுத்தி... சுத்தி வந்திச்சு! ஆனாலும், நம்ம ஊருக்குத் திரும்பி ஒரு வாரம் ஆயிட்டாலும்... வேலை நெருக்கடி காரணமா உங்களை எல்லாம் உடனே பார்க்க வர முடியலே...

சேகர்: ம்... சரி... சரி... சிங்கப்பூரு வாழ்க்கை எப்படி இருந்துச்சு...?

பாபு: அடேயப்பா... ரொம்ப அற்புதம்... மனசுக்கு ரொம்ப உல்லாசமா இருந்திச்சு! எங்க அப்பாவாலே ரொம்ப சம்பாதிக்க முடிஞ்சுது... ஆனாலும்... ஆனாலும்...

முல்லை: என்ன ஆனாலும், ஆனாலும். என்ன பாபு அண்ணா நடந்திச்சு?...

பாபு: நிறைய சம்பாதிக்க முடிஞ்சதே தவிர... பாதுகாக்கத் தெரியாமல் போயிட்டோம்...

சேகர்: ஏன் பாபு?

பாபு: அப்பா, அங்கே நடத்திவந்த வியாபாரத்திலே பெரிய நஷ்டம் வந்திடுச்சு... அதனாலே... நாங்க ஏழையாத்தான் திரும்ப முடிஞ்சுது.

சேகர்: அதான் உன் சட்டையைப் பார்த்த போதே...

முல்லை: (ஓடிக்கொண்டே) பாபு அண்ணனுக்குச் சாப்பாடு கொண்டு வாரேன்.

சேகர்: அப்படியே அலமாரியிலேயிருக்கிற என் புதுச் சட்டையையும் கொண்டு வந்திடு.

பாபு: (உருக்கமாக) அடே அப்பா! முல்லை கொஞ்சங்கூட மாறலை... அதே அன்பு... அதே பாசம்...

சேகர்: ஏண்டா பாபு! அப்படின்னா நான் உன் கிட்டே அன்பு மாறிட்டேனா? பாசம் குறைஞ்சிட்டேனா...?

பாபு: (சிரித்து) ராமன் புத்திசாலின்னா கிருஷ்ணன் முட்டாளுன்னு அர்த்தம்?

சேகர்: அப்படித்தான் அர்த்தம்!

(இருவரும் சிரிக்கிறார்கள்.)

பாபு: சரி... நம்ம முரளி எப்படி இருக்கான்?
சேகர்: எந்த முரளி...?
பாபு: எந்த முரளியா! நம்ம தெருக் கோடியிலே இருந்தானே...?
சேகர்: ஓ... அந்த நாடக நடிகை மகனு...?
பாபு: ஆமா... ஆமா...
சேகர்: அடே அப்பா... எக்கச்சக்கமா...
பாபு: அப்படின்னு...
சேகர்: சென்னையிலே இருக்கான்...
பாபு: ரொம்ப சந்தோஷமாப் போச்சு! இன்னைக்கி ராத்திரி அப்பா சென்னைக்குப் போறாரு! அவர் கூடவே போய்ப் பார்த்திட்டு வர்றேன். அதுசரி சேகர்! உன்கிட்டே முரளியோட முகவரி இருக்கா?
சேகர்: (வியப்பாக) முரளியோட முகவரியா?
பாபு: ஏன் தெரியாதா? (குழப்பமாக)
சேகர்: சே! அதுக்குச் சொல்லலே! நடிகை நளினுவைத் தெரியுமா?
பாபு: (உற்சாகமாக)... ஓ... நல்லாத் தெரியுமே! அவங்க சினிமா சிங்கப்பூருக்கு வர்றப்ப எல்லாம்.... ஒண்ணு விடாமே பார்ப்பேன்!... சரி! அவங்களுக்கும்... முரளிக்கும்...
சேகர்: முரளியோட அம்மா தான் நளினு! முன்னே நாடக நடிகையா - நாடகத்திலே நடிச்சுக்கிட்டு இருந்தப்ப... அவங்க பேரு... நளாயினி. இப்ப...
பாபு: நளினு... ஐயோ... ஐயோ... பிரபல நடிகையோட மகனு நம்ம முரளி? பேஷ்... பேஷ்...
சேகர்: நடிகை நளினு வீடுன்னு சென்னை ஆழ்வார்பேட்டையிலே புல் தடுக்கி விழுற பல்லே இல்லாக் கிழவர்கிட்டே கேட்டாக்கூடத் தெரியும்! போய்ப் பார்த்திட்டு வாயேன்...

காட்சி 2

பாத்திரம்: பாபு.

பாபு: (தனிமையில்), அடா அடா... முரளி... நீ பிரபல நடிகை நளினு மகனு...? அந்த அம்மா... அதான். உங்கம்மா, எவ்வளவு அற்புதமா நடிப்பாங்க தெரியுமா...? அதுதான் உனக்கு நல்லாத் தெரியுமே... முரளி! நான் சிங்கப்பூர் போறதுக்கு முன்னாடி... இளம்பறதுக்கு முதல் நாள் உன்னைப்பார்த்தேன். உன் உருவம்... எனக்கு அப்படியே நினைவிலே இருக்கு... அன்னைக்கு... நான் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பிக்கிட்டு இருந்தேன். அப்ப நீ வந்தே.. கிழிஞ்ச சட்டையோட தலைவிரி கோலமா இருந்தியே! தலையிலே எண்ணெய் தடவக் கூடாதா?... வேறே சட்டை போட்டுக்கிட்டு வரக் கூடாதான்னு கேட்டேன். நீயோ, 'எண்ணெய் வாங்கக் காசு இல்லே.. சட்டையைத் துவைக்கச் சோப்பு வேணுமே!'ன்னு கண் கலங்கக் கூறினியே. உங்கம்மா நாடக நடிகையாயிருந்தும், நாடகக் கம்பெனி சரியாக நடக்காததாலே பணம் கொடுக்காமே நாடக முதலாளி ஏமாத்திட்டான்னு சொன்னாய். அன்னிக்கு நீ பசியோட இருந்ததை உன் முகத்தைப் பார்த்துக் கண்டு பிடிச்சுட்டேன். உடனே என் அம்மா விடம் சொல்லி சுடச்சுடத் தோசை சுட்டுத் தரச் சொன்னேன். நீ சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டேயிருந்த என் கண்கள் கலங்கின. நீ காரணம் கேட்டாய். இன்னக்கி நான் உதவுகிறேன்... ஆனு.... நாளைக்கு... நானே... நான் சிங்கப்பூருக்கு அப்பா, அம்மாவோட போயிடுவேனே...அதை நெனைச்சாத் தான் வருத்தமாயிருக்குன்னு சொன்னேன். இப்போ உனக்கு எந்தக் கஷ்டமும் இருக்காது. ஆனந்தமாயிருக்கிற உன்னை அவசியம் பார்க்கணும். நானும் ஆனந்தப்படணும். இதோ... இதோ... என் அருமை நண்பனுன உன்னைப் பார்க்க வரேன்.

காட்சி 3

இடம்: முரளியின் பங்களா

பாத்திரங்கள்: பாபு, முரளி, நடிகை நளினு, காவல்காரன்.

காவல்காரன்: அரே! லட்கா! உதர் ஜாவோ. பல்லே உடைச்சிடுவேன்... திறந்த வீட்லே நாய் நுழையற மாதிரி நீ உள்ளே போறே... என்ன திமிரு உனக்கு...
(நாய் குரைக்கும் சத்தம்.)
பாபு: நான் ஏன் நாய் போல உள்ளே போகணும். அதான் நாய்... இப்ப குலைக்குதே...
காவல்: சரிதான் போடா... அதிகப் பிரசங்கி...
பாபு: (மெதுவாக) டே... தடியா... என்னைக் கழுத்தைப் பிடிச்சா கீழே தள்ளிட்டே... உன்னை
முரளி: (தூரத்தில் இருந்து) பாபு... பாபு... வாட்ச்மேன்... அந்தப் பையனை உள்ளே அனுப்பு...

காவல்காரன்: பகுத் அச்சா பேட்டா. டேய்... பையா... உள்ளே... போடா...

பாபு: இரு... இரு... உன்னை அப்புறம் வந்து பேசிக்கிறேன்.

(சிறிது அமைதி.)

முரளி: பாபு... பாபு... சிங்கப்பூரிலேருந்து எப்ப வந்தே...

பாபு: நேத்தோட ஒரு வாரம்... ஆச்சு...

முரளி: சரி... வா... உள்ளே போகலாம்...

(சிறிது இசை.)

இதோ... இந்த சோபாவிலே உட்காரு...

பாபு: முரளி... ஏன் என்னை விழுங்குகிற மாதிரி பார்க்கறே?

முரளி: இல்லே... வந்து... வந்து...

பாபு: சும்மா சொல்லு..

முரளி: எங்கம்மா சினிமா நடிகைன்னு தெரியுமில்லியா...?

பாபு: (தயக்கத்துடன்) ஆமா...

முரளி: எங்களுக்கு லட்சக்கணக்கிலே சொத்து இருக்குன்னு ஒனக்குத் தெரியுமா...?

பாபு: இருக்கலாம்...

முரளி: அப்படி இருக்கறப்ப... என்னைப் பார்க்க வர்றப்ப... நல்லா... அழகா... டிரெஸ் பண்ணிக்கிட்டு வரக் கூடாது...? பிச்சைக்காரனைப் போலே வந்திருக்கியே..!

பாபு: சிங்கப்பூரிலே எங்கப்பா வியாபாரத்திலே...

(நடிகை நளினி வருகிறாள்)

நளினி: ரொம்ப நொடிச்சுப் போயிட்டாரா?

பாபு: ஆமாம்மா... சரியா... சொல்லிட்டீங்க...

நளினி: முரளி! கண்ட பிச்சைக்கார நாய்களை எல்லாம் நீதான் அடிக்கடி வீட்டுக்குக் கூட்டி வர்றே.... என்ன சொன்னாலும் உனக்கு அறிவே இல்லே...

முரளி: இல்லேம்மா... பழைய சினேகிதனாச்சேன்னு பார்த்தேன்... இவன்.. இவ்வளவு பஞ்சைப் பயலா இருப்பான்னு....

நளினி: சரி! வெளியே — உடனே அனுப்பிச்சிட்டு வா! யாராவது பட முதலாளிங்க... டைரக்டருக, நடிகருங்க வந்தா... என் மரியாதை, கௌரவம் என்ன ஆகிறது?

முரளி: டேய் பாபு... சீக்கிரம் இங்கேயிருந்து போடா!

பாபு: ரொம்ப நல்ல மரியாதை. இப்பவே கிளம்பிடுறேன்.



காட்சி 4

இடம்: முரளியின் பங்களா

பாத்திரங்கள்: நடிகை நளினா, முரளி.

நளினா: டேய் முரளி! உனக்கு ஏதோ ஒரு பார்சல் வந்திருக்கு...

முரளி: இதோ வந்திட்டேம்மா... (பார்சலை வாங்கிப் பிரிக்கிறான்) ஐ... புத்தகங்க... அம்மா... அழகு — அழகான புத்தகங்க... அருமை... அருமையான புத்தகங்க... இது நீதிக்கதை...இதோ... இது உலகத் தலைவர்கள் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம்...

நளினா: (ஆச்சர்யத்துடன்) முரளி! உனக்குக்கூட நல்ல புத்தகங்களைப் பார்க்கறதிலே இவ்வளவு ஆர்வமா?

முரளி: அது சரிம்மா... இந்தப் புத்தகங்களை யாரு பார்சல்லே அனுப்பினாங்கன்னு தெரியலையே..!

நளினா: அதோ... அந்தப் புத்தகத்துக்கு இடையிலே ஒரு கடிதம் போலே இருக்கே...

முரளி: அடே... பாபுதான் இந்தக் கடிதத்தை எழுதி இருக்கிறான்...

நளினா: பாபுவா...! அன்றைக்குப் பரிதாபமா வந்தானே...

முரளி: அவனேதானம்மா... இரு... கடிதத்தைப் படிக்கிறேன்...

அன்பு நண்பன் முரளிக்கு,

வணக்கம். நீ நினைப்பதுபோல் நான் ஏழை இல்லை. உங்கம்மா லட்சாதிபதியாக இருக்கலாம். ஆனால் எங்கப்பா கோடீசுவரர்! என்றைக்கும் கோடீசுவரர்தான்!

பழைய நண்பர்களாகிய நீங்கள் எப்படி இருக்கிறீர்கள், எப்படிப் பழகுகிறீர்கள் என்று பார்க்க ஆசைப் பட்டேன். அதற்காகவே ஏழை மாதிரி எல்லோரிடமும் ஒரு நாடகம் நடித்தேன்... உங்க வீட்டுக்கு நான் ஏழை போல வந்த போது, என் அப்பா கம்பீரமாக மிக விலை உயர்ந்த காரிலே 4 பங்களாக்களுக்கு அப்பால் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருடைய காரைப் பார்த்தால், நீ என்ன? உங்கம்மாவே மூக்கிலே விரலை வைப்பார்கள்!

அது போகட்டும்... நம் ஊரிலே நீ வசித்த தெருவிலே இருக்கிறார்களே, சேகரும், முல்லையும்... அவர்களையும் நான் ஏழைக் கோலத்துடனே சென்று பார்த்தேன். அவர்கள் என்னை நண்பனாக நினைக்காமல், சொந்த சகோதரனாகவே அதிகமான பாசத்தோடு பழகினார்கள்.... ஆனால், நீயும் உங்கம்மாவும் பணத்தைத்தான் பெரிதாக நினைக்கிறீர்களென்று தெரிந்தபோது மிகவும் மனசு துடித்தது. ஆனாலும் முரளி! நான் உனக்கு இந்தப் புத்தகங்களை என் நினைவுப் பரிசாக அனுப்பி இருக்கிறேன். உனக்குக் கொடுக்கிறதுக்காகவே ஆசையாகச் சிங்கப்பூரிலே ஏராளமான கடைகளிலே ஏறி இறங்கி... இந்தப் புத்தகங்களை வாங்கினேன்...

இந்தப் புத்தகங்கள் உனக்கு எல்லா வகையிலும் பயன்படும் என்று உறுதியாக நம்புகிறேன்...

நீயும் உன் அம்மாவும் இப்போது மிகவும் மாறிவிட்டீர்கள். ஆனாலும் நான் என்றுமே மாற மாட்டேன்.

நான் உனக்கு இந்தப் புத்தகங்களைப் பரிசாகத் தருகிறேன். ஏன் தெரியுமா?

முரளி! உன் மீது நான் வைத்திருந்த பாசத்தை நான் மறக்கவில்லை. இப்பொழுது மட்டுமல்ல; எப்பொழுதும் மறக்க மாட்டேன்.

என்றும் உன் நண்பன்.

பாபு.

அப்படித்தான் சொல்வேன்!

அ'மேரி'க்கா கண்டம்னு சொல்லாதேடா. அ'மேரி'க்காக் கண்டம்னுதான் சொல்லணும்."

"எங்க 'மேரி' அக்கா அங்கேதானடா இருக்கிறாங்க; அதனால நான் அப்படித்தான் சொல்வேன்."

-கீதா





பாரதியார் சொன்ன கதை

சி.ஆர். நாகராஜன்

பாரதியார் தம் வீட்டுக் குழந்தைகளை நல்வழிப் படுத்த அடிக்கடி அவர்களுக்குப் பல நீதிக் கதைகளையும் நீதிகளையும் கூறுவார். அப்படிப்பட்ட ஒரு சமயத்தில், மனிதனுக்குக் கஷ்டம் வரும்போது ஓரேயடியாய் மாய்ந்து விடாமல், கூடுமான வரையில் புத்திசாலித்தனமாக நடக்க வேண்டியது கடமை என்பதையும், அதனால் ஏற்படும் பயன் கடவுளைச் சார்ந்தது என்பதையும் விளக்க ஓர் அழகான கதை கூறினார்.

ஓர் ஊரில் பரம லோபியான செட்டியார் ஒருவர் இருந்தார். ஒரு நாள் அந்தச் செட்டியார் வீட்டுப் பசுமாடு ஒன்று ஆகாரம் சரிவரக் கொடுக்கப்படாததால் எழுந்திருக்கவும் முடியாமல் சக்தியற்றுப் போயிருந்தது. பசுவுக்குக் கறவை உள்ளவரைதான் அவர் தீனி போடுவார். கறவை நின்றால் தீனி போடமாட்டார். அவருக்குக் குழந்தைகள் கிடையாது. மனைவி மட்டும் உண்டு.

ஒருநாள் அவள் செட்டியாரைப் பார்த்து, "நீங்கள் மனதார ஒரு தர்மமும் செய்ததில்லை. இப்படியே இருந்தால் நாளைக்கு இறந்தால், நரகத்தில் தானே கிடந்து உழல வேண்டும்! இந்தப் பசு மாட்டை யாரேனும் பிராமணனுக்குத் தானம் செய்து விடுங்கள். மாட்டைப் பட்டினி போட்டுக் கொன்ற பாவம் நம்மைச் சேராது" என்றாள்.

புத்திசாலியான செட்டியார், "அவள் கூறுவதும் உண்மைதான். பசுவுக்குத் தீனி வைப்பதும் லாபம். கோதான புண்ணியமும் கிடைக்கும்; ஒன்றில் இரண்டு லாபம்" என்று எண்ணி, வயலில் உபதானம் செய்து கொண்டிருந்த ஓர் அந்தணனைப் பார்த்து, "ஐயரே, ஒரு பசுமாடு இருக்கிறது. அதைத் தானம் செய்யலாம் என்று நினைக்கிறேன். வாங்கிக் கொள்ளுகிறீரா?" என்று கேட்டார். அந்த அந்தணர் மகிழ்ச்சியுடன் ஆகட்டும் என்றார்.

உடனே செட்டியார், அந்தணர் மந்திரத்தைச் சொல்லச் சொல்ல அவர் கையில் தாரை வார்த்தார். அந்தணர், "பசு எங்கே?" எனக் கேட்க, கொல்லைப்புறம் அழைத்துச் சென்று காண்பித்தார் செட்டியார்.

அந்தணர் மாட்டைக் கண்டு மலைத்தார். பின் செட்டியாரும் அவர் மனைவியும் பின்னால் பிடித்துத் தள்ள, அந்தணர் கழுத்துத் தும்பைப் பிடித்து இழுக்க, மாடு வாயிற்புறம் வந்ததும் நடந்த களைப்பினால் கீழே விழுந்து இறந்து விட்டது! இறந்த மாட்டை எடுத்துச் செல்லச் சக்கிலியனுக்கு அரை ரூபாய் கொடுப்பதற்கு, அந்

தணர் தன் உபதானச் செம்பை அடகு வைத்தார்.

பின் சில நாளைக்கெல்லாம் செட்டியார் இறந்து போனார். எமதூதர் அவரை எம சன்னதிக்கு அழைத்துச் சென்றனர்.

எமன் செட்டியாரைப் பார்த்து, "அடே, வாழ் நாள் பூராவும் பாவத்தைச் செய்து கிழமாட்டைக் கோதானம் செய்தாய். பாவத்திற்காக மீளா நரகமும், தானத்திற்காக மூன்றே முக்கால் நாழிகை ஸ்வர்க்கமும் உண்டு" என்றான்.

செட்டியார், "ஐயா, வெகுகாலம் நரகத்தில் கிடந்துவிட்டு ஒரு துளி சுகம் அனுபவிப்பதைக் காட்டிலும் முதலில் ஸ்வர்க்கத்தில் சுகத்தை அனுபவித்து விட்டுப் பின் நரகம் செல்லுகிறேன்" என்றார்.

யமனும் சரி என்றான். செட்டியார் ஸ்வர்க்கம் சென்று காமதேனுவைக் கண்டதும் அதன் முதுகில் ஏறிக் கொண்டு, "காமதேனுவே! எமன் துஷ்டன். அவனை முட்டு" என்றார்.

'இவன் புண்ணியம் செய்து வந்திருக்கிறான். இவன் சொல்லை நாம் தட்டலாகாது' என்று நினைத்து காமதேனு யமனை முட்ட ஓடோடிச் சென்றது. யமன் அலறிக்கொண்டு பிரம்மதேவனிடம் ஓடினான்.

செட்டியார் துணிவோடு, "பிரம்மாவுக்கும் அப்படியே செய்" என்றார்.


பிரம்மாவும் எமனும் திருமாலிடம் சென்றனர். அவருக்கும் அதே தண்டனை கிடைத்தது. எல்லோரும் சேர்ந்து பரமசிவனிடம் முறையிட்டனர்.

இதற்குள்ளாகச்செட்டியார்காமதேனுவில் சவாரி செய்து கொண்டே கைலாசகிரியை மும்முறை வலம் வந்தவாறு பரமசிவனிடம் போய்ச் சேர்ந்தார். இதற்குள் மூன்றே முக்கால் நாழிகையும் முடிந்து விட்டது. யமன் கோபத்துடன் நடந்த விஷயத்தைப் பரமசிவனிடம் சொல்ல, அங்கிருந்த பூதகணங்கள், தேவர்கள், ரிஷிகள், நந்தி யாவரும் குலுங்கச் சிரித்தனர்.

யமன் செட்டியாரை நரகத்துக்கு வரச் சொல்லி, மடியைப் பிடித்து இழுத்தான். செட்டியார் பரமசிவனை அடிபணிந்து, "ஸ்வாமி, முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், மும்மூர்த்திகளும் ஒன்று சேர்ந்து வீற்றிருக்கும் கைலாச பருவதத்தை நான் பக்தியோடு மூன்று முறை பிரதட்சிண நமஸ்காரம் செய்த பின்பும், என்னிடம் பாபம் மிஞ்சி நிற்குமா? யமன் சொல்வது நியாயமல்லவே!" என்றார்.

யமன் அசட்டு விழி விழித்தான். பரமசிவன் யமனைச்சமாதானப்படுத்திச் செட்டியாரைத் தம் சமீபத்தில் வைத்துக்கொண்டார்.

பாரதியார் இக்கதையைக் கூறி, இன்ப துன்பங்கள் மாறி மாறி, வரும் போது நிலைமைக்குத் தகுந்தவாறு நடந்து கொண்டால் கஷ்டம் விலகிப் போகும் எனக் கூறி முடித்தார்.





அண்ணா வீரப்பதக்கம் பெற்ற ஜான் பாஸ்கோ

அண்ணா வீர விருதினைப் பெற்ற திரு. ஜான் பாஸ்கோ சேலத்தைச் சேர்ந்தவர். இவர் செய்திட்ட வீரச் செயல்பற்றி அண்மையில் அவரிடம் கேட்ட போது அவர் சொன்னார்:


"அன்னை வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதாவிடம் அளவிலா பக்தி கொண்டவன் நான். கடந்த 1982–ஆம் ஆண்டு நான் கல்வி பயின்று வந்த சிறுமலர் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள், மாணவர்கள் குடும்பத்துடன் வேளாங்கண்ணி ஆலயத்திற்குச் சென்று வரத் தனி பஸ் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது நான் மேற்படி பள்ளியில் "பிளஸ் டூ" படித்து வந்தேன்.

அருள்மிகு ஆரோக்கியமாதாவின் தரிசனம் முடிந்து, நாங்கள் அனைவரும் பஸ்ஸில் வேளாங்கண்ணியில் இருந்து சேலத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். பஸ் விரைந்து சென்று கொண்டு இருந்தது. இரவு 7 மணி இருக்கலாம். 'தடால்' என்று சப்தத்துடன் எங்கள் பஸ் பாலத்தில் மோதி ஆற்றின் படித்துறையில் வீழ்ந்தது! அது மட்டுமா? இரண்டு முறை உருண்டது! விளைவு? அதிர்ஷ்டவசமாக நான் வெளியே தூக்கி எறியப்பட்டேன். அனைத்துப் பயணிகள், குழந்தைகள், தாய்மார்கள் இவர்களின் கூக்குரல்கள், "ஐயோ... செத்தேன்" என்னும் மரணக் கூப்பாடுகள்! இந்த வேதனைக் குரல்கள் என் இதயத்தைத் தாக்கின. என்னையும் அறியாமல் எனக்கு ஒரு வேகம் உண்டாயிற்று. பஸ்ஸில் இருந்து விழுந்த 56 பயணிகளும் ஓடும் ஆற்று நீரில் மூழ்கி விடாமல் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

சினிமாவில் கண்ணாடியை உடைத்து உள்ளே பாய்வது போல் காட்சி வருமே, அதே போல் ஒருவித வேகத்துடன் பஸ்ஸின் பின் பக்கக் கண்ணாடியை என் கைகளால் தாக்கி உடைத்து உள்ளே பாய்ந்தேன். பஸ்ஸின் உள்ளே தண்ணீரால் சூழப்பட்டிருந்த 30 நபர்களை வெளியே தள்ளி, உயிர்களைக் காப்பாற்றினேன். இந்த நேரத்தில் என் கைகளின் நரம்புகள் துண்டிக்கப்பட்டபோதிலும் இரத்தம் கொப்பளித்த போதும்கூட, நான் அதைப் பொருட்படுத்தவில்லை! மரணத்தின் பிடியில் சிக்கியிருந்த முப்பது பேர்களைக் காப்பாற்ற முடிந்ததே என்னும் மகிழ்ச்சிதான் எனக்குப் பெரியதாகத் தெரிந்தது!

விபத்து நடந்த இடம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள 'வாண்டையார் பூண்டி' என்னும் இடம். சேலம் திரும்பிய பின்னர் பள்ளியில், ஒரு விழாவில் 1982–ஆம் ஆண்டு தமிழக சபாநாயகர் இராசாராம் பரிசு வழங்கிப் பாராட்டினார்கள்.

குடியரசு தினத்தில் தமிழக முதல்வரால் வழங்கப்பட்ட அண்ணா வீரப் பதக்கத்துடன் ரூ. 1000/- அன்பளிப்பாக வழங்கப்பட்டது. எனது வீரச் செயலைப் பாராட்டி 'வீர விருது' வழங்கிய முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களின் கரங்களை நன்றிப் பெருக்குடன் முத்தமிட்டேன். "சபாஷ் தம்பி, உன் வீரச் செயல் பிரமாதம்!' என்று என்னை அன்போடு தட்டிக் கொடுத்தார், அவர்! என் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.




''முப்பது உயிர்களைக் காப்பாற்றி வீரச் செயல் புரிந்த உன் கையை நான் முத்தமிடுகிறேன்'' — என்று கூறி முதல்வர் என் கரங்களை முத்தமிட்டார். அப்போது—


நான் விழா மேடையில் இல்லை! அந்த நல்ல உள்ளத்தின் இதய மேடையில் இருப்பதை உணர்ந்தேன்! முதல்வரின் பாராட்டுக்களுக்கு என் குடும்பத்தினர் அனைவரும் நன்றி கூறுகிறோம்!

—இவ்விதம் கூறும் ஜான்பாஸ்கோ சேலம் சிறுமலர் பள்ளியில் படிப்பை முடித்து விட்ட பின், சேலத்தில் உள்ள ஐ. டி. ஐ. தொழிற்கல்வி நிலையத்தில் தொழிற்கல்வி பயின்றுள்ளார். பள்ளிப் படிப்பின் போது, பாட்டுப் போட்டி விளையாட்டுப் போட்டிகளில் பல பரிசுகளை இவர் பெற்றிருக்கிறாராம். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த இவரது தந்தை ராஜமாணிக்கம் சேலம் சிறுமலர் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். ஜான் பாஸ்கோவின் உடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்கள், இரண்டு சகோதரிகள்... தற்போது இவர் சேலம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிந்து வருகிறார். இவரது குறிக்கோள்; 'இன்னலில் இருப்பவர்களுக்குத் தொடர்ந்து தம்மால் முடிந்த உதவிகளைச் செய்யவேண்டும் என்பதுதான்!'

பேட்டி: வி. எஸ். ராஜகோபால்

ஓவியர் ஆகலாம்





புதிர் மன்றம்

ஆர். நாச்சியப்பன் (75)

புதிர் 1:

குப்பன் சில ஆடுகளும், மாடுகளும் வைத்திருந்தான். அவனிடம் வந்து ஒருவன், ''நீங்கள் எவ்வளவு ஆடு, மாடுகள் வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான். அதற்குக் குப்பன், ''என் விடமுள்ள ஆடுகளின் எண்ணிக்கை யானது, மாடுகளின் எண்ணிக்கையைப் போல் 2 மடங்கை விட 1 அதிகம். ஆடுகளின் எண்ணிக்கையைப் போல் 5 மடங்கு எண்ணிக்கையிலிருந்து மாடுகளின் எண்ணிக்கையைக் கழித்தால் மீதி 50 வரும்'' என்றான். அதைக் கேட்டவன் முதலில் திகைத்தான். பிறகு சொல்லிவிட்டான். எங்கே நீங்கள் சொல்லுங்கள், பார்ப்போம்.

புதிர் 2:

சுப்பையா என்ற பணக்காரருக்குக் குழந்தை இல்லை. ஆதலால் தன்னை விட 20 வயது குறைவான பையனைத் தத்து எடுத்துக் கொண்டார். 10 வருடங்கள் கழிந்த பிறகு சுப்பையா தன்னுடைய மகனைப் போல் 2 பங்கு வயதுள்ளவராக இருக்கிறார். எனில் தத்து எடுத்துக் கொண்ட போது அவர்கள் ஒவ்வொருவருடைய வயதென்ன?



புதிர் 3:

ஒரு எண். அந்த எண்ணை அதே எண்ணால் பெருக்கினால் வரும் விடையும், கூட்டினால் வரும் விடையும் சமம். எனில் அந்த எண் என்ன?


புதிர் 4:

ஒரு குடும்பத்தில் உள்ள தாய், தந்தை, மகன் ஆகிய மூவருடைய வயதுகளும் பகா எண்களாகும். தாய், தந்தையின் மொத்த வயது 68. தாய் மகனை விட 18 வயது மூத்தவள் எனில் அவர்கள் ஒவ்வொருவருடைய வயதென்ன?



புதிர் 5:

ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். நான் சொல்லும் ஒரு எண்ணைக் கூட்டிக் கொள்ளுங்கள். பிறகு நீங்கள் நினைத்த எண்ணைக் கடன் வாங்கிக் கூட்டிக் கொள்ளுங்கள். இப்போது கிடைக்கும் தொகையில் பாதியைக் கழித்து விடுங்கள். கடன் வாங்கிய தொகையையும் கழித்து விடுங்கள். இப்போது மீதமுள்ள எண்ணை நான் சொல்லிவிடுவேன். உங்களால் சொல்ல இயலுமோ? உங்கள் நண்பர்களிடம் இக்கணக்கைப் போடலாம்.



புதிர் 6:

1 2 3 4 5 6 7 8 9 என்று எழுதிக் கொள்ளுங்கள். 8 என்ற எண்ணைப் போனால் போகிறது என்று விட்டு விடுங்கள். உங்கள் நண்பரை இதில் ஒரு எண்ணைச் சொல்லச் சொல்லுங்கள். அவர் கூறியது 5 எனக் கொள்வோம். உடனே நீங்கள் 45 என்ற எண்ணால் 1 2 3 4 5 6 7 9 என்ற எண்ணை பெருக்கச் சொல்லுங்கள். வரும் விடையில் அவர் சொன்ன எண் மட்டுமே ஒன்றன்பின் ஒன்றாக வருவதைக் காணலாம்.

விடைகள்:

1. ஆடுகள்—11, மாடுகள்—5.
2. தத்து எடுத்துக் கொண்டபோது சுப்பையாவின் வயது 30; மகனின் வயது 10.
3. 2 (2×2=4; 2+2=4)
4. மகன் வயது 13, தாய் வயது 31, தந்தை வயது 37.
5. நாம் கொடுக்கும் எண்ணின் சரி பாதியே மீதமாக வரும். நீங்கள் நினைத்துக்கொண்ட எண் 2. நான் கொடுக்கும் எண்—10. கூடுதல் 10+2=12. கடன் வாங்குவது 2. இப்போது கூடுதல் 12+2=14 பாதியை கழித்தது போக மீதி 14—7=7 பிறகு கடனைத் திருப்பிய பின் வரும் எண் 7—2=5. 5. என்பது நான் கொடுக்கும் எண்ணின் சரிபாதி ஆகும்.
6. அவர் சொன்ன எண் 5. நீங்கள் பெருக்கச் சொன்ன எண் 45

```
12345679
      45
--------
 61728395
49382716
---------
555555555
---------
```

ஒன்றின்பின் ஒன்றாக இதோ 5 வந்து விட்டது பாருங்கள். மர்மம்: அவர் சொன்ன எண்ணை 9—ஆல் பெருக்கி விட்டுச் சொல்ல வேண்டியது தான். 5×9—45. 6×9—54 இப்படியே.

அரசமரம்

இரா. பவானந்தன்

மரமே, மரமே, அரச மரமே!
மனத்தில் உனக்கு எத்தனை சுகமே!
உரசும் காற்று உன்னைத் தேடி
ஒவ்வொரு நாளும் வருவது என்னே!


விழும் மழைக்குக் குடையும் ஆவாய்.
வெயிலைத் தாங்கி நிழலைத் தருவாய்.
வேழ முகத்தோன் விநாயகன் அமர
வேரின் மடியில் வீடும் அளிப்பாய்!

அழகிய பறவை ஆயிரம் தங்கவும்
ஆடும் சிறுவர் சிறுமியர் கூடவும்
வழியில் போவோர் வருவோர் எல்லாம்
வந்து நிற்கவும் வசதிகள் செய்வாய்!


எத்தனை பெரிய உருவம் உனக்கு!
எத்தனை கிளைகள்! எத்தனை இலைகள்!
எத்தனை சிறிய விதையின் கருவில்
எப்படி அடங்கி இருந்தாய் நீயே?

உன்னை இங்கே பெற்றவர் யாரோ?
உன்னை இங்கே வளர்த்தவர் யாரோ?
என்னைத் துளைக்கும் இந்தக் கேள்வி
என்ன பதிலைச் சொல்வாய் நீயே?

''என்னை இங்கே பெற்றவர் அறியேன்.
என்னை இங்கே வளர்த்தவர் அறியேன்.
என்னை அடையும் எவர்க்கும் உதவி
என்னால் ஆனதைச் செய்திட
அறிவேன்''




கிராப் வெட்டுறதுக்கு உன்ன கட்டணம் உயர்ந்துக்கிட்டே போகுது! நம்ம முடியும் வளர்ந்து கிட்டே போகுது! இது அநியாயம்.
அப்படியானால் சலூன்களுக்கு முன்னால் ஒரு மறியல் போராட்டம் நடத்துவோம்!
நாளை முதல் தண்ணீர்கூடக் குடிக்காமல் உண்ணாவிரதம் இருப்போம்! அப்பதான் நம்ம கோரிக்கைக்கு அரசாங்கம் செவி சாய்க்கும்!
இவைகள் பேசினால்...?
கருத்து: கீழை G.S.தர்மலிங்கம்
காலத்துக்கு ஏத்த மாதிரி நாமும் மாறிக்கொள்ள வேண்டும்
எப்படி மாறணும்?
அதுவா! வெண்மையா கொடுக்கிற பாலு! சிவப்பா மாத்திக் கணும்!



என்னாங்க, பள்ளிக்கூடம் முன்பு ஒரே கூட்டம்!
நம்ம இனத்தவர் இருவரைப் பார்த்தவர்
நம்ம பெயரைச் சொல்லி மாணவர்களை வாத்தியார் திட்டுறாங்களாம்! அதான் நம்ம ஆளுங்க கேட்கிறாங்களாம்!
அவன் மட்டும் தலையை நிமிர்த்தி நடக்கிறானே? ஏன்!
அவன் டிஸ்கோ டான்சராச்சே!
அவனை மட்டும் ஏன் நல்ல பாம்புன்னு கூப்பிடுறாங்க?
அவன் கடிச்சால் உடனே இறந்து விடுவார்கள். இதுல் நாம் கடித்தால் அவங்களுக்கு வைத்தியம் பார்க்கணும் செலவாகுமே!

கொல்லி மலைச் சுண்டெலி



புலேந்திரன்

கொல்லிமலைக் காட்டில் வெளியாகும் அன்றைய 'தினப் புளுகன்' பத்திரிகையின் முக்கியச் செய்தி இது தான்:

''பெரியண்ணசாமி கோவிலுக்குப் போகும் வழியில் மலைநெல் விளைந்து முற்றிக் கிடக்கிறது.''

செய்தியைப் படித்த சுண்டெலி குண்டுமணி முதலில் அதை நம்பவில்லை. ஆனால், ஆசிரியர் பகுதியில் கோணிப் புளுகன் குள்ளநரி, ''சத்தியமாக அந்தச் செய்திமட்டும் உண்மை'' என்று குறிப்பிட்டு இருந்ததால், ''சரி. அதைப் பார்த்து விடுவோம்'' என்று எண்ணிப் புறப்பட்டுவிட்டது.

குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் — குண்டுமணிக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! மலைநெல் விளைந்து, கதிர் முற்றிச் சாய்ந்திருக்கும் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

குண்டுமணி ஆவலோடு நெல்லைக் கொறித்து, அரிசியை உள்ளே தள்ளியது. விரைவிலேயே வயிறு நிரம்பி விட்டபடியால், 'மீதியை நாளைக்கு வந்து கொறிப்போம்' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு வீட்டை நோக்கித் திரும்பியது.

சற்றுத் தூரம் வந்ததும், எதிர்த் திசையில் இருந்த, ஒரு புதருக்குள்ளிருந்து பளிங்கு வடிவில் ஒளி வந்ததைக் குண்டுமணி பார்த்துவிட்டது! 'பூனை கொள்ளிக்கண்ணனாக இருக்குமோ...?' — பார்வையைக் கூர்மையாக்கிக் கவனித்தது.

சந்தேகப்பட்டது போலவே — அது, கொள்ளிக்கண்ணன் தான்!

'அய்யோ...! அவனிடம் அகப்பட்டால், நான் நெல்லைக் கொறித்தது போல அவன் என்னைக் கொறித்து விடுவானே!'—

குண்டுமணி சாப்பிட்டதெல்லாம் அந்தக் கணமே செரித்து விட்டது.

சட்டென்று திரும்பிய குண்டுமணி, பக்கத்தில் இருந்த ஒரு பெரிய மரத்தின் அடியில் மறைந்து கொண்டது.

பூனை கொள்ளிக்கண்ணனோ, குண்டுமணியைக் கவனிக்காதது போல, புதருக்கு வெளியில் வந்து, மெல்ல... மெல்ல அந்த மரத்தின் பக்கமாக நடந்து... குண்டுமணி மறைந்திருந்த இடத்தை நோக்கி — குபீரென்று பாய்ந்தது.

கொள்ளிக்கண்ணன் இப்படிச் செய்யக் கூடும் என்று நினைத்து எச்சரிக்கையுடன் இருந்த குண்டுமணி தான் பதுங்கி இருந்த இடத்தை விட்டு வெளியேறி வெகு வேகமாக ஓடியது.

'உன்னை விட்டேனா... பார்'... என்று பின்னால் விரைந்தது, கொள்ளிக்கண்ணன்.

ஓட்டம் என்றால்... ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்திற்கு இந்திய வீரர்களாகக் குண்டுமணியையும், கொள்ளிக்கண்ணனையும் அனுப்பியிருந்தால்.... தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் இரண்டுமே நிச்சயமாக இந்தியாவுக்குக் கிடைத்திருக்கும். அப்படிப்பட்ட ஓட்டம்!

குண்டுமணி, புயல் வேகத்தில் புதருக்குள் புகுந்து வெளியேறிப் பறந்தது என்றால், கொள்ளிக்கண்ணன்.... அந்நாளில் அநுமார் இலங்கைக்குத் தாவினாராமே... அதைப் போலப் புதர்களைத் தாண்டிப் பின்தொடர்ந்து கொண்டிருந்தது.

குண்டுமணி மிகவும் களைத்து விட்டது. 'வேகம் சற்றுக் குறைந்தாலும் கொள்ளிக் கண்ணனிடம் அகப்பட்டுக் கொள்ள நேரிடுமே...!' என்ற பயம் அதன் நெஞ்சைக் கவ்விக் கொண்டது.

அப்போது—

வழியில் ஒரு சிறிய பொந்து காணப்பட்டது.

பொந்தினைப் பார்த்த குண்டுமணி, சட்டென்று அதற்குள் நுழைந்து விட்டது.

பின்னால் ஓடிவந்த கொள்ளிக்கண்ணனால் அந்தச் சிறிய பொந்துக்குள் நுழைய முடியவில்லை. குண்டுமணிக்கு உதவிய அந்தப் பொந்தினைத் திட்டிக் கொண்டே வெளியில் நின்று விட்டது.

உள்ளே சென்ற குண்டுமணிக்கு— பெரும் அதிர்ச்சி!

அங்கே—

நாகப்பாம்பு நஞ்சப்பன், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது.

''அய்யோ... கிங்கரனிடமிருந்து தப்பி எமனிடமே வந்தது போல் ஆயிற்றே!'' என்று கலங்கிய குண்டு



''மலைப்பாம்பு எப்படி இருக்கும்? பார்த்திருக்கியாடா?''

''நான் மலையையே பார்த்த தில்லையே!''

—கீதா.

மணி, ''நல்லவேளை, நஞ்சப்பன் விழிக்கவில்லை. வந்த வழியே போய் விடுவோம்'' என்று நினைத்து, ஓசைப் படாமல் திரும்பி நடந்தது.

குண்டுமணி திரும்பிக் கொண்டிருக்கும் போது உள்ளுக்குள் ஏதோ ஒரு சந்தேகம்—'கொள்ளிக் கண்ணன் பொந்துக்குப் பக்கத்திலேயே பதுங்கி இருப்பானோ...?'

வெளியில் இருந்த கொள்ளிக் கண்ணன், 'இந்தப் பொந்து குண்டுமணியின் இருப்பிடமாகத் தோன்றவில்லை. ஆகவே, சற்று நேரம் கழித்து அவன் இதே வழியில் திரும்பி வருவான். பதுங்கியிருந்து பார்ப்போம்' என்று நினைத்து, பொந்தின் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தது.

பொந்தை விட்டு வெளியேறுமுன், உள்ளிருந்தவாறே தனது கழுகுக்கண்களைச் சுழற்றி, 'வெளியில் கொள்ளிக் கண்ணன் இருக்கிறானா?' என்று பார்த்தது குண்டுமணி.

கொள்ளிக்கண்ணனின் நீண்ட மீசை குண்டுமணியின் கூரிய பார்வையில் பட்டுவிட்டது.

'அடா! பொல்லாதவனே! நீ இன்னமும் போகவில்லையா?' — கொள்ளிக் கண்ணனைத் திட்டிவிட்டு, 'இனி என்ன செய்யலாம்?' என்று சிந்தனையைத் தட்டிவிட்டது குண்டுமணி.

ஐந்தே நொடியில் — அதன் சுண்டைக்காய் அளவு மண்டையில் ஒரு பூசணிக்காய் அளவு திட்டம் தயாராகி விட்டது!

திரும்பவும், நஞ்சப்பன் இருக்கும் இடத்தை நோக்கி மிடுக்குடன் நடந்தது, குண்டுமணி.

நஞ்சப்பன், அதுவரையிலும் விழிக்கவில்லை.

நஞ்சப்பனுக்கு எதிர்ப்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, ''ஐயா! ஐயா!..'' என்றது, குண்டுமணி.

சப்தம் கேட்டு விழித்த நஞ்சப்பன், எதிரில் உட்கார்ந்திருந்த குண்டுமணியைப் பார்த்ததும், ''அடே பொடியா!... என்ன தைரியம் இருந்தால், நீ என் இருப்பிடத்திற்கு வந்து என்னையே எழுப்புவாய்?'' என்று சொல்லிக்கொண்டே, புடலங்காய் உடம்பை நிமிர்த்தி, நச்சுவாயைத் திறந்துகொண்டு குண்டுமணியை நோக்கித் தாவியது.

குண்டுமணி சற்று விலகி உட்கார்ந்து கொண்டு, ''ஐயா! அவசரப் படாதீர்கள். நான் உங்களைத் தேடி வந்ததற்கான காரணத்தைக் கேட்டு விட்டு, பிறகு என்னைச் சாப்பிடுங்கள்'' என்றது.

அதைக் கேட்ட நஞ்சப்பன், உடலைச் சற்றுக் குறுக்கிக் கொண்டு, ''ஏன் என்னைத் தேடி வந்தாய்?... ஏன்...?'' என்று கேட்டது குழப்பத்துடன்.

''அப்படிக் கேளுங்கள். கூறுகிறேன். எங்கள் வீட்டில் — அப்பா, அம்மா, நான் மற்றும் என் தம்பி ஆக மொத்தம் நான்கு பேர்கள் இருக்கின்றோம். எங்களுக்கு இந்தப் பூவுலக வாழ்க்கை வெறுத்து விட்டது. எல்லோரும் சேர்ந்து கடலில் விழுந்து இறந்துவிடலாம் என்று என் தம்பி சொன்னான்.



அப்போதுதான் என் உள்ளத்தில் ஓர் உயர்ந்த எண்ணம் உதித்தது...''

''என்ன அது?'' என்றது நஞ்சப்பன்.

''இறப்பது என்று முடிவு செய்து விட்டோம். எங்களை யாருக்காவது உணவாகக் கொடுத்தால் பெரும் புண்ணியம் கிடைக்கும் அல்லவா...?''

''ஆகா! அருமையான திட்டம் தான்'' என்றது, நாஞ்சப்பன்.

''என் கருத்தை முழுமனத்துடன் ஏற்றுக் கொண்டார்கள்.''

''பிறகு...?''

''எங்களை யாருக்கு உணவாகக் கொடுப்பது என்பதைத்தான் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதாயிற்று.''

''யாருக்குக் கொடுப்பதாக முடிவு செய்தீர்கள்?''

''அதுவும் என் முடிவுதான்; உங்களுக்குக் கொடுப்பது என்று...''

''புத்திசாலிப் பையன்!'' — மகிழ்ச்சியுடன் தனது நீண்ட வாலினால் குண்டுமணியின் முதுகில் தட்டிக் கொடுத்தது, நஞ்சப்பன்.

''இப்போது சொல்லுங்கள், இங்கேயே, என்னை மட்டும் விழுங்கப் போகிறீர்களா? அல்லது, என்னுடன் என் வீட்டுக்கு வந்து என் குடும்பத்தவர்களையும் சேர்த்து விழுங்கப்போகிறீர்களா?'' என்று கேட்டது, குண்டுமணி.

''உன்னை இப்போது விழுங்கி விட்டால், பிறகு உன் வீட்டுக்குப் போவதற்குப் பாதை தெரியாது. ஆதலால், உன் வீட்டுக்கே போய் விடுவோம்'' என்ற நஞ்சப்பன், ''ஊம்... நீ முன்னால் நட'' என்றது.

''ஊகூம்... பெரியவர் நீங்கள் பின்னால் வர, நான் முன்னால் போவதா?.. கூடாது'' — மறுத்தது, குண்டுமணி.

''நீங்கள் முன்னால் செல்லுங்கள். நான் உங்கள் பின்னால் வருகிறேன். வெளியில் சென்றதும் நான் வழி காட்டுகிறேன்.''

''அதுவும் சரிதான். என் பின்னால் வா'' என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டுவிட்டது, நஞ்சப்பன்.

நஞ்சப்பன் முன்னால் போக — குண்டுமணி பின்னால் நடந்து கொண்டிருந்தது.

நஞ்சப்பன் பொந்துக்கு வெளியே தலையை நீட்டவும் — வெளியில் பதுங்கி இருந்த கொள்ளிக்கண்ணன், குண்டுமணிதான் வருகிறது என்று எண்ணி அதை நோக்கிப் பாயவும் சரியாக இருந்தது.


எதிர்பாராத தாக்குதலினால் சினமுற்ற நஞ்சப்பன், பொந்தைவிட்டு வெளியேறிக் கொள்ளிக்கண்ணனைக் கடுமையாகத் தாக்கியது.

தான் ஒன்று நினைக்க, நடந்தது வேறாக இருக்கவே அதிர்ச்சி அடைந்த கொள்ளிக்கண்ணன்சமாளித்துகொண்டு நஞ்சப்பனைத் திருப்பித் தாக்கியது.

கொள்ளிக்கண்ணனும் — நஞ்சப்பனும் ஒன்றையொன்று கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தன.

குண்டுமணி, நிம்மதியுடன் வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தது!


Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



ராஜேந்திர பிரசாத்

தோற்றம் 3, டிசம்பர் 1884 மறைவு 28, பிப்ரவரி 1963

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka



SIMOES-D/JIL/CP/84/TAM